திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
GAZETTEERS MADRAS
119/குடி/72
13 NOV 1972
13/11/72
159

என் கடன் பணிசெய்து கிடப்பதே

மாலை 15] பரிதாபி — ஐப்பசி, கார்த்திகை — நவம்பர், 1972 [மணி 2

தமிழ்நாடு அரசின் ...ங்கள் வெளியீடு

புரசவாக்கம் திரு. கங்காதரேசுவரர் கோயிலில், கல்யாண மண்டபம், சிறப்பு அங்காடிக் கால்கோள்விழா, நிகழ்ந்தபொழுது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களை, அறங்காவலர் குழுத்தலைவர், திரு. தே. து. இராமாநுசம் அவர்கள் மாலையணிவித்து வரவேற்றல். (11-9-72)

பொருளடக்கம்

1. கந்தபுராண நுண்பொருள்
2. இராசராச சோழன் "சிவபாத சேகரன்"
3. வள்ளலார் — காந்தியடிகள்விழா
4. திருவிடைமருதூர்த் திருமுறைக் கருத்தரங்கத் துவக்கவுரை
5. பெரியபுராண நுணுக்கங்கள்
6. சிவலிங்கம்
7. பன்னிரு திருநாமத்தின் தத்துவம்
8. விசிட்டாத்துவைதம்
9. வேதத்தின் விழுமிய வார்த்தை
10 திருமுருகாற்றுப்படை
11. "வள்ளாலார் திருவுள்ளம்"
12. 'செந்தமிழ்த் தெய்வம் திருமுருகன்'

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் "திரு ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை–34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

159

OFFICE OF THE STATE EDITOR GAZETTEERS MADRAS
119/AU/72
13 NOV 1972



மாலை 14] பரிதாபி — ஐப்பசி — கார்த்திகை, நவம்பர், 1972 [மணி 14

கந்தபுராண நுண்பொருள்*

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

சமயச் சார்பான பலவகை இலக்கியங்களுள், புராணங்கள் என்பனவும் ஒரு வகையாகும். சமயத் துறையிற் புராணங்களுக்குச் சிறப்பிடம் உண்டு. ஒரு சிலர் 'புராணப்' என்னும் சொற் கேட்ட மாத்திரத்திலேயே, அவற்றை மிக எளியனவாக எண்ணி இகழ்ந்துரைத்து ஒதுக்கி விடுவதுண்டு. இறையனார் களவியல் என்னும் நூலில், ஆசிரியர் நக்கீரனார் ''களவு என்னும் சொற் கேட்ட துணையானே, களவு தீயது என்று இகழ்ந்து விடுதல் கூடாது. களவும் நன்றாமாறு உண்டு'' எனக் கூறுகின்றார். அது போல, புராணங்கள் என்னும் சொல்லைக் கேட்ட அளவிலேயே, நாம் அவற்றையெல்லாம் இழிந்தனவாகவே துணிந்து கொண்டு, அறவே இகழ்ந்து ஒதுக்குதல் முறையன்று எனலாம்.

''அழகென்பது பொருளில் இல்லை. அதனைக் காணும் கண்ணைப் பொறுத்தேயுள்ளது'' (Beauty lies in the eyes of the beholder) என்று அறிஞர்கள் கூறுவர். அது போல, புராணங்களின் சிறப்பும் பிறவும், அவற்றை ஆய்ந்துணர்ந்து பயன் கொள்ளும் நம் அறிவின் திறனுக்கும் நலனுக்கும் ஏற்பவே அமைவன ஆகின்றன

புராணங்கள் :

'புராணம்' என்பது புராதனம் (பழைமை) என்னும் சொல்லின் அடியாக அமைந்தது என்பர் அறிஞர். எனவே, பழைய காலந்தொட்டு வழங்கிவரும் வரலாறு (தொல்கதை)களே புராணங்கள் எனப்பெயர் பெற்றன எனக் கொள்ளுதல் பொருந்தும். புராணங்கள் பதினெட்டு என அறிஞர்கள் புகலுவர்.

* கந்தர்சஷ்டி விழாவை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்

148703 Q2m24, N59TK N72

அவற்றுள், சைவம் பவிடியம் மார்க்கண்டேயம் இலிங்கம் காந்தம் வராகம் வாமனம் மச்சம் கூர்மம் பிரமாண்டம் என்னும் பத்தும் சிவபிரானுக்குரிய புராணங்கள் ஆகும். பிரமம் பதுமம் என்னும் இரண்டும் பிரமதேவனுக்குரிய புராணங்கள்; கருடம் நாரதம் பாகவதம் விஷ்ணு என்னும் புராணங்கள் நான்கும் திருமாலுக்கு உரியவை; ஆக்கினேயம் என்பது அக்கினிதேவனுக்கு உரியது; பிரம்மகைவர்த்தம் என்பது சூரியனுக்கு உரிய புராணம் ஆகும்.

புராணங்களின் இயல்பு :

இங்ஙனம் புராணங்கள் பதினெட்டு எனப் பொதுவாகக் கூறப்படுமாயினும், இவற்றுள் மிகவும் சிறப்புடையனவாகப் பெரிதும் போற்றி வழங்கப் பெற்று வருவன ஒரு சிலவேயாகும். அவற்றுள்ளும் கந்தபுராணம் என்பது, மிகவும் சிறப்புடைய ஒன்றாகும்.

சமயத்துறையில் புராண இலக்கியங்கள் மிகப்பெரிதும் போற்றப் பெறுகின்றன. புராணங்கள் மிக நுண்மைத் தன்மை வாய்ந்த கருத்துக்களை யாவரும் உணரும்படி, பருமை மிக்க வடிவில் விளக்குகின்றன. அருவமும் கடினமும் ஆனசெய்திகளை விளக்க, அவற்றுக்கு ஓர் உருவம் கொடுத்து, எளிய இனிய கதைகளாக ஆக்கிக் கூறுகின்றன. மனித வாழ்வியலின் உண்மைகளையும் அனுபவங்களையும், சுவைமிக்க அழகிய கவிதைகளில், அரியமுறையில் அறிவுறுத்தும் பழம்பெரும் இலக்கியங்களே புராணங்கள் எனலாம்.

புராணங்கள் இறைவனது பெருமையினையும், இறையருளின் திறனையும் விளக்குவதோடு, ஒழுக்க நெறியில் தவறுதலாகிய குற்றம் முதலியன எய்தாதபடி, உயரிய பல நீதிகளையும் செய்திகளையும், மக்கள் உளங்கொளப் புகட்டுகின்றன.

வேதப்பொருளை உள்ளபடி அறிவது மிகவும் கடினம். மழைத் துளி சிப்பியின் வயிற்றில் விழுந்தால் முத்தாகின்றது. நெருப்பில் விழுந்தால் சுவறிப் போகின்றது. பிற இடங்களில் விழுந்தால் அவ்வவற்றிற்கேற்ப அமைகின்றது. அதுபோல, வன்சொற்களினாற் புணர்க்கப்பட்ட வேதங்கள் அவ்வவர்தம் வினைக்கேற்பப் பலர்க்கும் பலவகையிற்பொருள் கொள்ளக் கிடக்கும். எனவே. அவற்றின் உண்மைப் பொருளையுணரப் புராணங்களின் துணை இன்றியமையாததாகின்றது. இவற்றாலும் புராணங்களின் சிறப்புடைமையை நாம் இனிதறிந்து கொள்ளலாம்.

கனிவுரை :

வேதம், எஜமானன் கட்டளை இடுவது போல்வது. ''சத்தியம்வதா தர்மம் சரா'' (உண்மையே பேசுக: அறநெறியிலே நடக்க) என வேதம் கட்டளையிடும். மனிதர்கள் செய்யத் தக்கனவற்றை விதித்தும், செய்யத்தகாதவற்றை விலக்கியும், கட்டளை இடும் முறையில் வேதங்கள் அமைந்துள்ளன. ஆதலின் அவற்றை அலங்கார நூலார் அரும்பெருந் தலைவனின் ஆணையுரை (பிரபுசம் மிதை) என்பர். அன்பிற் சிறந்த நண்பர்கள் தமக்குள் அகங்கலந்து நின்று அளவளாவி மகிழ்ந்து உரையாடுவது போல்வன, இதிகாசங்கள். ஆதலின் அவற்றை நண்பர்களின் நயவுரை (சஹ்ருத் சம்மிதை) என வழங்குவர். மனைவி கணவன்பால் இனிமை பெருகக் கலந்துரையாடி, அவனைத் தன் கருத்திற்கு இணங்கச் செய்யும் காதற் கனிவுரை போல, வேதங்கூறும் விதிவிலக்குகளைச் சுவை பெருகச்சொல்லி இன்பம் பயந்து, அவற்றை யாவரும் அகமகிழ்ந்து கடைப்பிடிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தவை புராணங்களேயாம். ஆதலினால், புராணங்களை மனைவியின் கனிவுரை (காந்தா சம்மிதை) என அறிஞர்கள் புகலுவர். கசப்புமருந்தை உண்ண மறுப்பவனுக்கு, அவன் விரும்பியுண்ணும்படி அதன் மீது தேனும் சருக்கரையும் தீற்றித் தருதல் (குளஜிக்வா நியாயம்) போல, இனிமை பயவாத பொருள்களையும் இன்பம் பெருக நன்கினிது இயம்ப வல்லன, புராணங்களே எனலாம்.

புராணங்களின் சிறப்பு :

இச்சிறப்பியல்பில் இந்தியப் புராணங்கள் மிகவும் தலைசிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழகுடனும், நிறைந்த வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணர உணர அவற்றின் ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும் நம்மனோர்க்கு வியப்பும், விம்மிதமும் விளைவிக்கின்றன. அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த நம்முன்னோர்களின் நுண்மாண் நுழைபுலத்தினை வெளிப்படுத்துகின்றன,*

தாளாண்மை (முயற்சி) இல்லாதவர்கள் வேளாண்மை (உழவுத் தொழில்) செய்வதும், வாளாண்மை இல்லாதவர்கள் போரில் வெற்றி பெறுதலை விரும்பிப் போர்க்களத்திற்குச் செல்லுவதும், புராணங்களைப் படித்தும் கேட்டும் அறியாதவர்கள் அறம் பொருள் இன்பங்களின் முடிந்த பயனாகிய வீடு பேற்றை அடைய விழைவதும், கண்ணில்லாத குருடர்கள் வழியறிந்து நடந்து செல்ல இயலாது இடர்ப்படுதல் போல, இடர் விளைவிக்கும் பயனில் செயல்களேயாகும்.

தாளாண்மை இல்லாதார் வேளாண்மை
செய்குவதும், தரைமேல் என்றும்
வேளாண்மை இல்லாதார் மனைவாழ்க்கை
செலுத்துவதும், விசயம் வேட்டு
வாளாண்மை இல்லாதார் மண்டுசமர்க்கு
ஏகுவதும், வளர் புராணம்
கேளதார் கதிவிழைவும்; விழியில்லார்
வழி நடக்கும் க்ரமம் ஆமால்
— திரிகூடராசப்பக் கவிராயர்:

இதனால் மக்கள் தம் வாழ்க்கையில் சமய உணர்வு எய்தி இறையருள் நெறியில் நின்று, வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வதற்கு வழிகாட்டும் வான் பொருள்களாக வயங்குவன, நம்முடைய பெரியவர்கள் வகுத்தளித்துப் போந்த சிறந்த புராணங்களே என நாம் நன்கினிது தெளியலாம்.

கந்தபுராணம் :

கந்தபுராணம், புராணங்களில் மிகவும் சிறப்புடைய ஒன்று. கவிதைச் சுவைமிக்கது; சாத்திரக்கருத்துக்களும், தத்துவ நுட்பங்களும் செறிந்தது. பயில்தொறும் நூல்நயம் பயப்பது; இறையுணர்வை இனிது வளர்ப்பது; பக்தியுணர்வையும் ஒழுக்கத்தையும் பரப்புவது. தமிழிற் கச்சியப்ப சிவாசாரியர் இயற்றியருளியகந்தபுராண நூலில், இலக்கியச் சுவைகள் அனைத்தும் நலக்கப் பொருந்தியுள்ளன.

புராணங்களைப் பயிலுங்காலும் கேட்குங்காலும் அவற்றின் நுட்பங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வெறுங் கதை நோக்காது அவற்றின் கருத்தையே நோக்குதல் வேண்டும். கருத்தை விளக்குவற்கே கதை போந்தது. கதை உடலும், கருத்து உயிரும் ஆகும். சிலர் கதையை மட்டும் பிடித்துக் கொண்டு கருத்தை விட்டு விடுவர். அவர்தம் செய்கை 'நெய்யரி' போல்வதேயாகும். நுட்பமான (Abstract ideas) அரும்பெருந் தத்துவக் கருத்துக்களை, யாவரும் இனிதுணர்தற் பொருட்டுப் பெரியோர்கள் பருவடிவில் (Concrete forms) அழகுற அமைத்து, விளக்கியுதவியன வே புராண கதைகள். எனவே, கலைத்திறம் மிக்க அவற்றின் கருத்து நுட்பங்களை ஆராய்ந்துணர்தலே, நம்மனோர்க்கு இன்றியமையாக் கடமையாகும். ஆதலின் கந்தபுராணத்தின் நுட்பங்கள் சிலவற்றை ஈண்டு இயன்ற அளவில் ஒரு சிறிது காண்போம்.

(1) தட்ச காண்டம் :

கந்தபுராணம் ஆறு காண்டங்களை உடையது. உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தட்சகாண்டம் என்பன அவை. இது நூலின் அமைப்பு முறை எனினும், வரலாற்று முறைக்கு ஏற்ப முதற்கண் ஆராயத்தக்கது, தட்சகாண்டமே ஆகும். தட்சன் பிரமதேவரின் புதல்வன். பிரமதேவர் இறைவனின் அருளியல்புகளையும், தவத்தின் சிறப்பினையும் தட்சனுக்கு உபதேசிக்கின்றார். சிவபிரானை வழிபட்டல்லது எவரும் வீடுபேறு எய்துதல் இயலாது என அறிவுறுத்துகின்றார்.

பரசிவன் உணர்ச்சியின்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கு ஈறு எய்தி
வீடுபேறு அடைதும் என்றல்,
உருவமில் விசும்பின் தோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில்
பின்னும் ஓர் சான்றும் உண்டோ?

* "Indan mythology is richer, vaster very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them."

—Sri Jawaharlal Nehru,
The Discovery of India, P. 66

அது கேட்டுத் தட்சன் தவம் புரிகின்றான். இறைவன் வெளிப்பட்ட போது, பேராற்றலும் பெருந்தலைமையும் பெற்ற அவன், அம்பிகை தனக்கு மகளாகத் தோன்ற வரம் கேட்கின்றான். அதனால் இறைவன் தனக்கு மருமகனாக வருவான். தான் அவனிலும் பெரியவனாகலாம் என மனக்கோட்டை கட்டினான். 'கெடுவான் கேடு நினைப்பான்.' தனது கற்பனை நிறைவேறாத நிலையில் தட்சன் இறைவனைப் பகைத்தான். ததீசி முனிவர் ஆகிய சான்றோர் எவ்வளவோ அறிவுரைகள் பகர்ந்தும் கேளாமல் இகழ்ந்தான். சிவபிரானைப் புறக்கணித்துப் பழித்தான். தீய வேள்வி செய்தான். தேவர்களும் முனிவர்களும் ஒரு வகையில் அவனுக்கு உடனிருந்து துணை புரிந்தனர். அதனால் வீரபத்திரர் தோன்றி வேள்வியை அழித்தார். தவத்தால் உயர்ந்த தட்சன் இறுமாப்புக் கொண்டதனால் இழிவுற்றான். சான்றோர்களின் அறிவுரைகளைக் கேளாமையால், அழிந்து கேடுற்றான். சிவநிந்தை புரிந்த அவன், ஆட்டுத்தலை அடைந்து அவதியுற நேர்ந்தது. தீயவேள்வி புரிந்த தட்சன், தான் தண்டனை பெற்றதே அன்றி, தனக்கு உடனிருந்து துணைபுரிந்த பிறருக்கும் தீங்கு விளைவித்தான். குற்றம் செய்தவன், செய்யத் தூண்டியவர், உடனிருந்தவர் ஆகிய அனைவரும் தண்டிக்கப்பெற்றனர். இது நமக்கு என்றும் நினைவில் இருத்தற்குரிய சிறந்த செய்தியாகும். இக்காண்டத்தில் சிவபிரானைப் பற்றிய பலவேறு வரலாறுகளும் ஒருங்கே திரட்டித் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அகந்தை கொண்டவன் அழிவான் என்பது தட்சன் வரலாற்றால் தெரிகின்றது,

2. அசுர காண்டம்

இப்பகுதியில் சூரபதுமன்-சிங்கமுகன்-தாரகன் முதலிய அசுரர்களின் தோற்றமும் ஆட்சியும் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சிவநிந்தைபுரிந்த தட்சனோடு சேர்ந்ததனாலாய தீயவினைவைத் தேவர்கள் அனுபவிக்க நேர்ந்தது. அவர்களைத் துன்புறுத்துதற்கென்றே அசுரர்கள் தோன்றினர். தேவர்கள் பலரும் பற்பல நோக்கம் கொண்டு தட்சன் வேள்விக்குச் சென்றனர். ததீசியாகிய சிவனடியாரை அவமதித்தனர். அவர் கூறிய அறிவுரைகளைப் புறக்கணித்தனர். சிவநிந்தையும் சிவனடியார் நிந்தையும் புரிந்தனர். சிவாபராதம் பிராயச்சித்தத்தால் தீராது. அதனை அனுபவித்தே தீர்க்க வேண்டும். பாவத்தை மகிழ்ச்சியுடன் செய்தலும், பின்னர்த் துன்பம் வந்தால் அழுதலும் கூடாது.

வினைப்பயனைத் தேவர்களே ஆயினும் எய்தாமற் கழித்தல் இயலாது. வினைப்பயனினின்றும் விலகித் தப்பித்துக்கொள்ள ஞானிகள் கருதார். அவற்றை அனுபவித்துத் தீர்த்துவிடவே ஞானிகள் விரும்புவர். வினை அனுபவத்தில் நமக்கு மறதி உண்டாகுமாறு இறைவன் தன் பேருளால் செய்கின்றான். தவறு செய்தால் கொடியவர்களை அடித்துத் திருத்தவும், நல்லவர்களை அணைத்துத் திருத்தவும் வேண்டும். இறைவன் இவ்வாறு செய்தலையே மறக்கருணை, அறக்கருணை எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. இறைவனுக்கு அசுரரும் தேவரும் ஒன்றே! எல்லா உயிர்களும் அவன் பிள்ளைகளே! ஆகலின் அவனுக்கு நல்லார் பொல்லார் என்ற பாகுபாடு இல்லை. தவ முயற்சியால் நாம் நலமனைத்தும் பெறலாம். 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்', வாழ்வு ஒரு காலம், தாழ்வு பிறிதொரு காலம். இவை மாறி மாறிச் சகடக்கால் போல வரும். முன்பொரு சமயம் தேவர்கள் உயர்ந்து அசுரர்களைத் துன்புறுத்தினர். இப்போது அசுரர்கள் வலிமையுற்றுத் தேவர்களை வருத்த முற்படுவாராயினர். 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'.

சூரபதுமன் பெருந்தவம் புரிந்தான். நெருப்பில் விழுந்து உயிர்விடத் துணிந்தான். அவனுக்கு உடல் உணர்வு இல்லையாகி, இறையுணர்வே நிரம்பி நின்றபோது, சிவபெருமான் வெளிப்பட்டருளினார். சூரபதுமன் பிறர் எவரும் பெறாத பெரு வரங்கள் பல பெற்றான். சூரனுக்குத் தந்தை காசிப முனிவர். தாய் அசுரப் பெண். தந்தையின் இயல்புக்கேற்பத் தவம் புரிந்தான். தாயின் பண்பைத் தழுவி அசுரத் தன்மையில் பிறரை அடக்கியாள வரங்கள் பெற்றான். தந்தை தாயரின் குணங்களே மைந்தர்கள்பாலும் அமைந்து நிற்கும். இவ்வுண்மை உணர்ந்து பெற்றோர்கள் நடந்து கொள்ளுதல் வேண்டும். சூரனின் ஆட்சியில் தேவர்கள் பல பெரும் துன்பங்கள் உற்றனர். சிவாபராதமாகிய அழுக்கு நீங்கும் வண்ணம், அசுரர்களாகிய கொம்பால், தேவர்களாகிய ஆடையினை, சிவபிரான் வலிதில் கசக்கி அடிக்க நேர்ந்தது. 'தன் வினை தன்னைச் சுடும்' 'தினை விதைத்த,

வன் தினையை அறுப்பான். வினை விதைத்த வன் வினையை அறுப்பான்' என்னும் உண்மை அசுரர்கள்பால் தேவர்கள் பட்ட கொடுமையால் புலப்படுத்தப் பெறுகின்றது.

3. உற்பத்தி காண்டம்:

தேவர்களுக்கு வந்த துன்பத்தை நீக்குதற்குச் சிவபிரான் திருவுளங் கொண்டருளும் செய்திகளை, இப்பகுதி கூறுகின்றது, தண்டனை அளித்த இறைவனே தண்டனையை நிறுத்தி விலக்க முற்படுகின்றுன். அடித்தாலும் அணைத்தாலும் அவனே துணை. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே' என்பர் மணிவாசகர். தண்டனையை அளித்த சிவபிரானே, அதனை நிறுத்தி விலக்கி அருள் புரிய, முருகனுய் வந்தான். முருகனின் தோற்றம் பற்றிக் கூறுவதனுலேயே இது உற்பத்தி காண்டம் எனப் பெயர் பெற்றது. நாம் வினையால் பிறக்கின்றேம். முருகன் அருளால் பிறந்தான். நாம் நம் விருப்பங் காரணமாகப் பிறக்கவில்லை. முருகனே தானே விரும்பித் தோன்றினுன். நாம் பிறப்பதனல் துன்பமுறுகின்றேம். முருகன் தன் தோற்றத்தினுல் அனைவருக்கும் இன்பத்தைத் தந்தருள்கின்றுன்.

முருகனின் தோற்றம் பற்றிய உண்மைகள், நினைந்து நினைந்து வியந்து மகிழ்தற்குரியன. பிள்ளைப்பேறு தவத்தினுல் வாய்த்தல் வேண்டும். நல்லதாய் தந்தையர்களுக்கே நல்ல குழந்தைகள் பிறக்கும். குழந்தைகளைச் சையோகத்தால் அன்றித் தவயோகத்தால் பெறுதல் வேண்டும். நல்ல மனைவி வாய்க்க ஆடவரும், நல்ல கணவன் கிடைக்க மகளிரும், தவம் புரிதல் வேண்டும். சிவபிரான் தட்சிணு மூர்த்தியாக இருந்து தவம் புரிந்தார். அம்பிகை மலைமகளாக உதித்துத் தவஞ்செய்தாள். இருவரும் தவம் புரிந்தே ஒருவரை ஒருவர் மணந்தனர். இது நாம் நம் கருத்தில் இருத்துதற்கு உரியது. கணவனும் மனைவியுமாகக் கடிமணம் புணர்தலின் பயன் நன்மகப்பேறு எய்துதலே ஆகும். உலகு உய்யவும் உவப்பவும் நாம் மக்களைப் பெறுதல் வேண்டும். 'தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது.' புலன்களுக்கு அடிமையாகிக் காம வயப்பட்டு மக்களைப் பெறுதல் முறை அன்று. புலன்களை அடக்கி வென்று தவநலத்தால் மகப்பேறு அடைதலே பெரும்சிறப்பாகும், சிவபிரான் 'காமதகனம்' செய்த பின்னரே ''குமார சம்பவம்'' நிகழ்ந்தமை உன்னி உணரற்பாலது.

முருகன் சிவபிரானின் கண்ணில் இருந்து ஒளிப்பிழம்பாக வெளிப்பட்டார். அந்தக் கண் காமனை வென்று எரித்து ஒழித்த கண். விந்துவானது ஊர்த்துவ வீரியம் (மேல் நோக்கியது), அதோ வீரியம் (கீழ் நோக்கியது) என இருதிறப்படும். உயிர்களாகிய நாம் அதோ வீரியம் உடையவர்கள். சிவபிரான் ஊர்த்துவ வீரியம் உடையவர். நாம் நம் ஆற்றலைக் கீழ் நோக்கிற் கழிய விடாமல் புனிதப்படுத்தி உயர் நோக்கிற்குப் பயன்படுத்துதல் வேண்டும். அதுவே தவநலம் ஆகும். அதனுற் பிறக்கும் மகவே உலகை உய்விக்கும். காமனை வென்ற கண்ணினின்று முருகன் ஞானப் பேரொளியாக வெளிப்பட்டார். உலகை உய்வித்து வாழ்வித்தார்.

சூரன் இருள், முருகன் பேரொளி. இருளை அழிக்க ஒளியால்தான் இயலும். முருகனின் தோற்றம் ஐந்து பூதங்களிலும் நிகழ்ந்தது. முன்னரே சிவபிரான்பால் ஒடுங்கியிருந்த முருகன் என்னும் சிவசக்தி வெளிவருவதற்கு, அசுரர்களின் தீவினையும் தேவர்களின் வேண்டுகோளும் காரணமாயிற்று. தந்தையினும் மைந்தன் சிறப்புடையவனுதல் விரும்பத தக்கது. ஐம்முகச் சிவனுக்கு, அறுமுகச் சிவனுக முருகன் அவதரித்தான்.

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி ஆகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய!

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினுல் அளக்கொ ணுமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளி னுனே.

—கந்த புராணம்

4. மகேந்திர காண்டம்:-

முருகன், மால் அயன் மகவான் முதலிய தேவர்கள் பலரும் வந்து முறையிட்டுக்கொள்ள, அவர்களுக்கு ஆறுதல் கூறி, வீரவாகு தேவரைச் சூரபதுமனின் பால் தூது அனுப்புவதும், அவர் சூரபதுமனது மகேந்திரபுரிக்குச் சென்று தூதுரைத்து மீள்வதும், ஆகிய பல செய்திகளைச் சொல்லுகின்றது. இதன் தொடக்கப் பகுதியில் முருகன் சூரபதுமனின் வரலாற்றைக் கூறுமாறு இந்திரனைப் பணிக்கின்றார். அஃது அறியாமையாலன்று. அழுகின்ற பிள்ளையைத் தந்தை முதலில் என்ன நேர்ந்தது என்று விசாரித்து, அழுகையைச் சமனப்படுத்திப் பின்னர்த் தின்பண்டம் முதலியன தந்து உவப்பித்தலைப் போல, முருகன் புரிந்த கருணைச் செயல் அது. முருகன் பணித்தபடி இந்திரன் சூரபதுமனின் வரலாற்றைத் தான் சொல்ல முற்படாமல், பிருகற்பகுதியைக் கொண்டு சொல்லுமாறு செய்வித்தான். இங்ஙனம் தனது குருவைக் கொண்டு சொல்லுவித்தமை, "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்" என்பது பற்றியாம்.

முருகன் பின்னர் வீரவாகுவைத் தூது அனுப்பியது முருகனின் கரையற்ற பெருங் கருணையை உணர்த்துவதாகும். எவ்வளவுதான் பிழைகள் புரிந்த போதிலும், எத்துணைதான் கொடியவர்களாக இருப்பினும், எடுத்த எடுப்பிலேயே எவரையும் தண்டித்து விடுதல் கூடாது. சாம பேத தான தண்டம் என்னும் நால்வகை உபாயங்களையும் படிமுறையே பின்பற்றுதல் வேண்டும் என்பது நீதிநெறி. இன்சொற் கூறுதல், வேறுபடுத்திப் பிரித்தல், நன்கொடையளித்தல் முதலிய உபாயங்களால், பகைவரைத் திருத்தப் பலவகைகளில் முயலுதல் இன்றியமையாதது. இவையாவும் பயன் தராத வழியே தண்டனை முறையாற் பகைவர்களைச் சாடி அழித்தல் வேண்டும்.

மற்றுமொன்றும் கருதுதற்கு உரியது. "தாம் வளர்த்ததோர் நச்சுமா மரம் ஆயினும், கொலார்" என்பது மணிவாசகம். அம்முறையில் சிவபிரான் அருளால் சூரன் பெற்ற பேராற்றல்களையும் பெருநலங்களையும், சிவபிரானின் வேறல்லாத மைந்தராகிய தாமே விரைந்து அழித்தொழித்தற்குத் திருவுளம் கொண்டிலன் முருகன்;

ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் அரசோச்சிய சூரனின் திருவும் செல்வமும், உருவறியா வண்ணம் அழிந்தொழியப் போகின்றனவே என்னும் கழிபேரிரக்கமும் கண்ணோட்டமும் பற்றியும், எடுத்த எடுப்பிலேயே போருடற்றி அவனைக் கொல்ல முற்பட்டிலன் முருகன். இப்பொழுதாயினும் இவன் திருந்தி உய்யமாட்டானா? என்னும் இரக்க உணர்வினாலேயே, அவன்பால் வீரவாகு தேவரைத் தூதுரைத்து வர ஏவினன் முருகப் பெருமான்.

மறைந்து போயசூர் முயற்சியை
　　மன்னுயிர் தோறும்
உறைந்த நாயகன் கண்டனன்:
　　ஒருதனிச் செவ்வேல்
எறிந்து மற்றவன் உயிர்கொள
　　நினைந்திலன்; இன்னும்
மறிந்து தீயவன் உய்யுமோ
　　எனும்திரு அருளால்

பண்டை நாளில் மறத்துறையினும் அறமே நிகழும். இப் பகுதியில் வீரவாகுவின் வீரமும், தூதின் திறமும் செவ்விதின் விளக்கப் பட்டுள்ளன.

"கோலம் நீடிய நிதிபதி
　　வாழ்க்கையும் குறியேன்;
மேலை இந்திரர் அரசினைக்
　　கனவிலும் வெஃகேன்;
மால் அயன்பெறு பதத்தையும்
　　பொருளென மதியேன்;
சால நின்பதத் தன்பையே
　　வேண்டுவன் தமியேன்"

என்பது முருகன்பால் வீரவாகு தேவர் வேண்டும் வரம். இறைவன்பால் இறவாத இன்ப அன்பைப் பெற்றால், பின்னர் அது கொண்டே யாவற்றையும் பெறலாம். இவ்வுண்மையுணராது, வேருக்கு நீர் பாய்ச்சாமல் வெறும் இலைக்கு நீர் தெளிப்பவர்கள் போல, நாம் அன்பை விட்டு விட்டுப் பிறவற்றையே இறைவன்பாற் கேட்கின்றோம்.

5. யுத்த காண்டம்:

வீரவாகு தூதுசென்று அறிவுரைகள் பகர்ந்தும், பானுகோபன் சிங்கமுகன் முதலிய பலர் முருகனின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும் கேளாமல், சூரன் போர்புரிந்து மடிவதற்கே

துணிந்து நின்றான். ''ஊழிற் பெருவலி யாவுள'' என்பது பொய்யாமொழி யன்றோ!

பேரெழில் இளமை ஆற்றல்
பெறலரும் வெறுக்கை வீரம்
நேரறு சுற்றம் யாக்கை
யாவையும் நிலையா அன்றே!
சீரெனப் பட்ட தன்றோ
நிற்பது? செறுநர் போரில்
ஆருயிர் விடினும், வானோர்
அருஞ்சிறை விடுவ துண்டோ?

இறந்திட வரினும், அல்லால்
இடுக்கண்ஒன் றுறினும், தம்பால்
பிறந்திடும் மானம் தன்னை
விடுவரோ பெரியர் ஆனோர்?
சிறந்திடும் இரண்டு நாளைச்
செல்வத்தை விரும்பி, யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை;
சூரன்என் றொருபேர் பெற்றேன்.

முருகன் ஓர் இமைப் பொழுதில் சூரனைக் கொல் லும் வல்லமை உடையவர். அவர் நினைத்திருந் தால், தமது ஒரு சிறு புன்முறுவலினாலேயே அவனை அழித்திருத்தல் இயலும், எனினும் ஒருவகையில் அவனைப் பெருமைப் படுத்தும் முறையில், அவனுடன் போர்புரிவது போலச் சிறிது திருவிளையாடல்கள் புரிந்தார்.

சூரனே முதலோர் தம்மை
இமைப்பினில் தொலைக்க உன்னின்,
முரலால் அடுவன்; கொண்ட
முனிவினால் அடுவன்; வாய்மைச்
சீரினால் அடுவன்; நாட்டச்
செய்கையால் அடுவன் என்றால்,
நேரிலா முதல்வன் வன்மை
யாவரே நிகழ்த்தற் பாலார்?

பொருசமர் விளைப்பான் போலப்
பொருக்கெனப் போந்து, சூரன்
இருவிழி தன்னிற் காண்பான்
எளிதுதன் வடிவம் காட்டி
அருளது புரிந்தான் என்னின்,
ஆதியங் குமரன் மாயத்
திருவிளை யாடல் யார்க்கும்
தெரிகில போலும் அன்றே!

யுத்தகாண்டம் முருகனது வேலின் பெரு மையை விளக்குவது. வெல்லுவது, வேல். எது வெல்லும்? அறிவு, ஞானம் என்பனவே வெல்லும். வேல் முருகனுக்கு ஒரு சக்தி. 'சக்தி தன்உரு ஏதென்னில் தடையிலா ஞானம் ஆகும்'. வேல் முருகனுக்கு ஞானசக்தியாக விளங்குவது. வேல் ஞானம். சூரன் அஞ்ஞா னம். அஞ்ஞானத்தை ஞானம் வென்றது. வேலின் பெருமையைத் தொல்காப்பியரும் 'பெரும்பகை தாங்கும்வேல்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்தார்.

வேல் அஞ்ஞானத்தை அறவே ஒழிப்பது. ஆதலின் ஞானம் வேண்டுவோர் வேலைத் தொழுதல் வேண்டும். பண்டை நாளில் வேற் படைக்கும் தனிக்கோயில் அமைத்துத் தொழுது வந்தனர் நம்முன்னோர்! புகார் நகரில் 'வேற்கோட்டம்' இருந்ததாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. செவ்வந்திப்புராண ஆசிரியர் 'வாகையே சுமக்கும் வேலை, வணங்குவது எமக்கு வேலை' என்று நயம்படக் கூறுகின்றார். நாம் வேலை வணங்குவதை வேலையாகக் கொண்டு உய்ய முயலுதல் வேண்டும். பிறகட வுளர்கள் தம்மை எதிர்த்த அசுரர்களை அழித் துக் கொன்றதாகவே நாம் பெரும்பாலும் அறி கின்றோம். ஆனால் முருகன் சூரனை அழித்திலன். பகைவனையும் காத்துப் பண்பார்ந்த அன்பனாக மாற்றி ஆட்கொண்டருளினன். சூரனைக் கோழிக் கொடியும் மயில் ஊர்தியுமாக முருகன் ஏற்றுக்கொண்டு உவந்தருள் புரிந்தான். கட வுட்டன்மை, காத்தலில் உள்ளதேயன்றிக் கொன்றொழிப்பதில் இல்லை. வைதாரையும் பகைவரையும்கூட, வாழ வைக்கும் பண்பினன் முருகன்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி யடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!

(6) தேவ காண்டம் :

சூரனைவென்ற பிறகு, முருகன் தேவர்களைச் சிறையினின்று விடுவித்து, விண்ணுலகில் குடி யேற்றினன். தேவேந்திரனுக்கு முடிசூட்டியரு ளினன். அதனாற் பெருநலமும் மகிழ்வும் உற்ற தேவேந்திரன், நன்றியுணர்வுடன் வழிபட்டு, நயந்தினிது வேண்டிக்கொள்ள, முருகன் தெய்வயானையம்மையைத் திருப்பரங்குன்றத்

தில் மணம் புணர்ந்து அனைவரையும் மகிழ்வித்தான். வடமொழிக் கந்த புராணத்தில் வள்ளியம்மையின் திருமணமும் இக்காண்டத்திலேயே கூறப்படுகின்றது. தமிழில் தட்சகாண்டத்தில் கூறப்பெறும். முருகனுக்குத் தெய்வயானையம்மை கிரியா சக்தியும், வள்ளியம்மை இச்சா சக்தியுமாவர். முருகனின் வலப்புறத்தில் வள்ளியம்மையும், இடப்புறத்தில் தெய்வயானையம்மையும் விளங்குகின்றனர்.

''உலைப்படும் மெழுகது என்ன
உருகியே, ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல
வருந்தியே இரங்கா நின்றான்;
கலைப்படு மதியப் புத்தேள்
கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ?
அறுமுகன் ஆடல் எல்லாம்''

ஒரு மனிதன், தன் வாழ்க்கையில் ஆண்மையும் அருளும் உடையவனாதல் வேண்டும். ஆண்மையிருந்தும் அருள் இல்லாதவன் முரடனாவான். அருள் இருந்தும் ஆண்மையில்லாதவன் கோழையாகி விடுவான். ஆதலின் ஆண்மையும் அருளும் ஆகிய இரண்டும் நமக்கு மிகவும் இன்றியமையாதவை. முருகன் ஆண்மையுடையவனாய்ச் சூரபதுமனை வெற்றி கொண்டு, தெய்வயானையை மணந்தருளினான். அருள் உடையவனாய் மிகவும் தாழ்ந்து எளிவந்து வள்ளியம்மையை மணந்தருளினான்.

இவ்வாறே, மனிதவாழ்க்கையில் நிகழும் உணர்ச்சிகள் பலவற்றுள், காதலுணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் சிறப்பிடம் பெறுகின்றன. முருகனின் கடமையுணர்ச்சிக்குத் தெய்வயானையும், காதலுணர்ச்சிக்கு வள்ளியம்மையும் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர் எனலாம்.

இறைவனுக்கு மேன்மை (பரத்துவம்), எளிமை (சௌலப்பியம்) என்னும் இருபெரும் பண்புகளும் உரியனவாக நூல்கள் கூறும். மேன்மைத் தன்மையினும், எளிவரும் தன்மையே இறைவனுக்குப் பெரிதும் சிறப்பை விளைவிப்பதாகும். முருகன் தெய்வயானையை மணந்தது மேன்மை (பரத்துவம்); வள்ளியை மணந்தருளியது எளிமை (சௌலப்பியம்).

''இறைவன் தன் அடியவர்கள் பால் செய்யும் அருளின் சிறப்பு, உலகில் ஓர் ஆண்மகன் ஒரு பெண்மகளிடம் கொள்ளும் காதல் அன்பின் திறனைப் போன்றதாகும். இறைவன் தனது அடியவர்களை நேசிக்கும் தன்மை, மிகச் சிறந்துயர்ந்த ஓர் அரசப் பெருமகன், மிகவும் எளிய ஓர் ஏழைக்குடிமகளைக் காதலிப்பது போன்ற இயல்பினது. அரசன் அக்குடிமகளைத் தன்னுடைய பெருநிலைக்கு உயர்த்துதல் ஒல்லாது. ஏனெனில், அங்ஙனம் செய்யின் அவள் தனக்கேயுரிய நிலையையும் பண்பையும் இழந்து குன்றிப் போவாள். அவள்பால் தனது அரச இயல்புகளெல்லாம் பொலியச் செய்யின், அவ்வெளிய ஏழைக்குடிமகள் மிகவும் அச்சங்கொண்டு நடுங்கி அயர்ந்து மறைந்து கொள்வாள். அதனால் அவன் தன்னை மிகவும் எளியவனாக்கிக் கொண்டு, தான் விரும்புகின்ற ஏழைப் பெண், தன்னுடன் சமநிலையில் கலந்து பழகிக் காதலிக்கும் வாய்ப்பைப் பெறுவதற்கே ஏக்கற்று முயல்வான்'' ★

என மேலைநாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப்பது, முருகப் பெருமான் வள்ளியம்மையை மணந்து கொண்டு காட்டிய அருளின் மாட்சியினைக் கவினுற விளக்குவதாகும்.

முடிவுரை :

கந்தபுராணம் ஒருவகையில் நம் 'சொந்த புராணம்' எனலாம். சூரன் முதலிய அசுரர்கள் எக்காலத்திலோ இருந்து மறைந்தவர்கள் அல்லர். சூரபதுமன் சிங்கமுகன் தாரகாசுரன் என்

---

* ''Prof. Kierkegaard describes the encounter of god and soul in terms of a love affair. He compares the revelation of the Divine love to a human courtship whereby a king would woo a peasant girl. He cannot raise her to his own rank for this would cause her to cease to be herself. He connot come to her in all his own splendour, for this would cause her to hide from him. So he chooses to come to her in the form of great humility, seeking equality only with the one he loves.''

—Pauline M. WEBB,
We Believe in God, P. 116,

னும் மூவரும், முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்கள் என்றும்; அவர்களாற் சிறையிட்ப் பெற்ற தேவர்கள், பசுவர்க்கங்கள் என்றும்; அசுரர் மூவரையும் அழித்து முருகன் தேவர்களை ஆட்கொண்டமை, ஆணவம் முதலிய மும்மலங்களை வீட்டி உயிரை ஞானாசிரியனாகிய கடவுள் ஆட்கொண்டருளுதலாம் என்றும்; கொள்ளுதற்குரிய நுட்பப்பொருள்கள் பல, கந்தபுராணத்தில் உள்ளன.

இனி, கந்தபுராணத்தில் வரும் சூரபதுமனின் மதம் "மிண்டிய மாயாவாதம்" என்றும், தட்சனின் மதம் பாஞ்சராத்திர மதம் என்றும், தாருகாவனமுனிவர்களின்மதம் பூர்வமீமாம்சை என்றும், இந்திரனின்மதம் உலகாயதம் என்றும், இம்மதங்களெல்லாம் அவற்றிற் குரியவர்கள் அழிக்கவும் அடக்கவும் பட்டதனால் மறுத்தொழிக்கப் பெற்றவனாய், சைவ சித்தாந்தச் செந்நெறியின் சால்பினை யுணர்த்தி நிற்கின்றன எனவும், அறிஞர்கள் கூறுவது உண்டு.

மாயையில் வலியோன் ஆகி
மால்முத லோரை வென்றே
ஆயிரத்தோ ரெட்டு அண்டம்
அரசுசெய்து உகம்நூற் றெட்டுக்
காயமது அழிவின் றாகிக்
கடவுளர்க்கு அலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற
குமரன்தாள் சென்னி சேர்ப்பாம்.

இந்திரர் ஆகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி அதனிற் சேர்வர்;
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணம் தன்னைக்
காதலித்து ஓது வோரே!

— கச்சியப்பசிவாசாரியர்

o-o-o

தஞ்சை மாவட்டம், மாயூரம், திருமணஞ்சேரி ஸ்ரீ அருள் வல்லநாதர் திருக்கோயில் திருமண மண்டபத்தின் கால்கோள் விழாவினைத், தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் B.E. (Hons)., அவர்கள் துவக்கி வைத்தல். (9-9-72)

இராசராச சோழன்

"சிவபாத சேகரன்"

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,

ஆணையர், அறநிலையத்துறை.

இராசராசன் உயரிய பண்பு நலன்களுக்கெல்லாம், ஓர் உறைவிடமாக விளங்கினன். தன் தாய் தந்தையர்களிடத்திலும், பாட்டனர் பாட்டியார் தமக்கையார் ஆகியோரிடத்திலும், மிக்க பேரன்பும் பெருமதிப்பும் வைத்து அவர்களைப் பெரிதும் போற்றி வந்தான். தன் பாட்டனர் ஆகிய அரிஞ்சயன் (957-970) நினைவாக, வடஆற்காடு மாவட்டத்தில் மேற்பாடி என்னும் இடத்தில், அரிஞ்சயேச்சுரம் என்னும் கோயில் எடுப்பித்தான். தனது தமக்கையாரின் மீது கொண்டிருந்த அன்பும் மதிப்பும் காரணமாக, தனது அருமை மகளுக்கும் குந்தவை என்றே பெயரிட்டான். தன் தாய் தந்தையரின் திருவுருவப் படிமங்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் தமக்கையாரின் விருப்பத்தின்படி எழுந்தருளச் செய்வித்தான். தன் பெரிய பாட்டனரையும், பெரிய பாட்டியாரையும் முறையே 'சிவஞான கண்டராதித்தர்' 'செம்பியன்மாதேவடிகள்' எனக் கல்வெட்டுக்களிற் புகழ்ந்து போற்றினன்.

தன் தமையனுகிய ஆதித்த கரிகாலன் (957–970) இறந்தபிறகு, அவனுக்குப் பின்னர் அரியணையைக் கைப்பற்றித் தானே ஆட்சி புரிந்திருக்கவல்ல ஆற்றல்கள் மிக்கவனுக இருந்திருந்தும், அங்ஙனம் செய்யாமல், கண்டராதித்தர் செம்பியன்மாதேவியார் ஆகிய இருவர் திறத்தும், தான் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் காரணமாக, அவர்களின் புதல்வனும் தனது சிறிய தந்தையும் ஆகிய உத்தமசோழன் ஆட்சிக்குரியவனுய் முடிசூடிக் கொள்ளும்படி இராசராசன் அன்புடன் விட்டுக் கொடுத்தான். ''தன் சிறிய தந்தை ஆகிய உத்தம சோழனுக்கு (கி. பி. 970-985) நாட்டை ஆட்சி புரிவதில் விருப்பம் உள்ள வரையில், தான் மனத்தால் கூட அரசாட்சியை விரும்புவதில்லை'' என்று, இராசராசன் தன்குடிகளிடம் கூறினன் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் தனது உரிமையினைத் தியாகவுணர்வுடன் விட்டுக் கொடுத்து, பதினைந்து ஆண்டுகள் (970–985) அளவும் அமைதியாகக் காத்திருந்த இராசராசனின் பெருந்தகைமைப் பண்புநலன், உலக வரலாற்றிலேயே ஒப்புயர்வற்றதாகும்.

இராசராசன், சோழப் பேரரசை நிறுவி வளர்த்துப் பெருக்குவதற்காக, எத்தனையோ பல பெரும் போர்களில் ஈடுபட்ட இணையற்ற பெருவீரன், அவன் காந்தளூர்ச்சாலைக் கலம் அறுத்தருளினன்; வேங்கி நாட்டை வென்றுன்; கங்கை நாட்டைக் கைப்பற்றினன்; தடிகைபாடியையும் நுளம்பபாடியையும் தன் வயப்படுத்தினன்; குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் ஆகியவற்றை வென்று, தன் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டான்; ஈழமண்டலத்தைச் சோழமண்டலத்திற்கு அடிமையாக்கினன்; முரட்டு எழிற் சிங்களரைச் செருக்கு அடக்கினன். இரட்டபாடி ஏழரை இலக்கமும் தன் திண்டிறல் தண்டால் வெற்றி கொண்டான். அவனது ஆட்சிக் காலத்தில் சோழநாட்டின் எல்லை பெரிதும் விரிவடைந்து வளர்ந்தது. இதனல் அவனது இணையற்ற வீரத்தின் சிறப்பினை இனிது உணரலாம்.

பற்பல போர்களில் வெற்றி மேல் வெற்றி பெற்று, நாட்டின் பரப்பளவை நனிபெருக்கி, இணையற்ற தனிப் பேரரசனுக விளங்கியிருந்தனன் ஆயினும், இராசராசன் எத்தகைய அகந்தையும், செருக்கும் அடையாமல் ''வாழ் வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை

தப்பித், தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்'' பெற்று உயர்ந்து சிறந்து ஒளிர்ந்திருந்தமை, நினைத்தொறும் வியக்கத் தகுவதாகும்.

இராசராசன் அறநெறி சிறிதும் பிறழாது அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தான். அறிவு திரு ஆற்றல் ஆகியவைகளிற் சிறந்து விளங்கியதுடன், நீதி நேர்மை பக்தி ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் இராசராசன் இணையற்றுத் திகழ்ந்திருந்தான். வெற்றி மேல் வெற்றிபெற்ற போதும், இறுமாப்புக் கொள்ளலாமல், இவைகளெல்லாம் இறைவன் திருவருளால் பெற்றவையே என்று தெளிவுற எண்ணிச்சிந்தை நைந்து உருகினுன். இவ்வுண்மை, அவனது கல்வெட்டுகளில் ''சத்தியாசிரயனை எறிந்து போந்து ஸ்ரீபாத புஷ்பமாக அட்டின பொற்பூ'' எனக் குறிப்பிட்டிருத்தல் கொண்டு, செவ்விதின் தெளியப்படும். 'பெருக்கத்து வேண்டும் பணிதல்' எனத் திருவள்ளுவர் கூறியபடி, மேன்மேற் பல வெற்றிகளைப் பெறுந்தோறும், இரரசராசன் இறைவனின் திருவருளையே நினைந்து வியந்து பணிந்து நின்றுன்.

ஐப்பசிச் சதயமாகிய தன்னுடைய பிறந்த நாளில், பிறவியின் பயனைத்தான் பெறுவதற்காக, இறைவனுக்கு வழிபாடுகள் நிகழ்த்தத் தஞ்சை திருவையாறு முட்டம் திருவெண்காடு முதலிய இடங்களில் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தான். தில்லைக்கூத்தப் பெருமானிடத்திலும், திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானிடத்திலும் அவனுக்கு எல்லையில்லாத ஈடுபாடும் பக்தியும் இருந்தன. இராசராசனது பக்தியுணர்வு, சமயநெறி ஆர்வம் ஆகியவற்றின் விளைவாகவே, இப்பெரிய கோயில் எழுவதாயிற்று. சைவத்திருமுறைகளைத் தொகுப்பித்துப் பரப்பி வளர்த்தருளிய பெருமையும் இவனுக்கே உரியது. ஆதலின் 'சிவபாதசேகரன்' என்னும் சிறந்த பெயர், இராசராசனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

இத்தகைய சிறப்புமிக்க இராசராச சோழனின் ஐப்பசிச் சதயவிழா, வழக்கம்போல் இவ்வாண்டும் தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெற இருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன், விழா நன்கினிது நடைபெறவும், விழாமலர் சிறப்புற அமையவும், எனது வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(செய்திச் சுருக்கம்)

நவராத்திரி விழா

கும்பகோணம் ஸ்ரீ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்தின் நிர்வாகத்திலுள்ள ஸ்ரீ விசுவநாதசுவாமி கோயில், ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில், தாராசுரம் ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில்களில் நவராத்திரியை முன்னிட்டு 8-10-72 முதல் 17-10-72 விஜயதசமி முடிய 10 தினங்களிலும் மாலை 6 மணிக்கு அபிஷேக ஆராதனையும், 7 மணி முதல் புலவர்கள், வித்துவான்களைக் கொண்டு முறையே நவராத்திரியின் மகிமை, காரைக்கால் அம்மையார், வந்தியின் அன்பு, திலகவதியார், திருமுருகாற்றுப்படை, வடிவுடை மாணிக்கம், மங்கையக்க்கரசியார், கலையநாயனுர், பெரியமடமும் நவகன்னியர்களும், மெய்ப்பொருள் நாயனுர் என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினுர்கள். சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி தேவஸ்தானம் திருப்புகழ் ஆசிரியர் திரு. டி. வி. குஞ்சிதபாதம் பிள்ளை 6 மாணவிகளுடன் திருப்புகழ் பஜனை நடைபெற்றது. குடந்தை திரு. ஏ. ஆர். இராமசாமி அவர்கள் 10 தினங்களிலும் கவி இயற்றிப்பாடினுர்கள். ஷ மடத்தின் மடாதிபதி ஸ்ரீஜகத்குரு சாந்ததேவசாரங்கதேசிகேந்திர சுவாமிகள் மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரைக்குப் பின் ஷ மடத்தின்செயற்குழுக் காரியதரிசி திரு. ஆர். திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் நன்றி நவிலலும், ஷமடத்தின் சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கம் மாலை நேரக் கல்வி வளர்ச்சி வகுப்பு ஆசிரியர் வித்வான் திரு. கதிர் சுப்பையன் அவர்களால் கடவுள் வாழ்த்தும் பாடப் பெற்று விழா இனிது முடிவுற்றது.

வள்ளலார்-காந்தியடிகள் விழா

மாண்புமிகு முதல்வர்

டாக்டர் கலைஞர்

பேருரை

[சென்னை - திருமயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில், 1-10-72 முதல் 6-10-72 முடிய, இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில், வள்ளலார் – காந்தியடிகள் விழா, சிறப்புற நடை பெற்றது. அது போது 4-10-72 அன்று, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில், திரு. நா. மகாலிங்கம், டாக்டர் திரு. வ. சுப. மாணிக்கம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். அமைச்சர்கள் மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி, மாண்புமிகு திரு. அன்பில் தருமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த அவ்விழாவில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், தவத்திரு ஊரன் அடிகள் பதிப்பித்த, இராமலிங்க அடிகளார் பாடியருளிய திருவருட்பா நூலை வெளியிட்டுச் சிறப்பியற் பேருரை ஒன்று நிகழ்த்தினார்கள். அஃது இங்கே பெரிதும் போற்றி வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்]

புரட்சிகரமான நல்ல சிறந்த கருத்துக்களைத் தமிழ் நாட்டுக்குத் தந்தருளியவர் வடலூர் இராமலிங்க அடிகளார். சமுதாயத்தை வாழ வைக்கக் கூடிய –சமுதாயத்தை விழிப்படையச் செய்யக்கூடிய - நல்ல கொள்கைகளை நல்ல இலக்கியங்களைத் தந்தவர்களை உயர்த்திவிட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களை மறந்து விடாமல், கொள்கைகளின் சொந்தக்காரர்களை மதிப்பதோடு, அந்தக் கொள்கை வழியே நடக்கவும் நாம் உறுதி ஏற்க வேண்டும்.

இங்கே பேசிய திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள் ' முதல்வர் பேசிய பிறகல்லவா நான் பேச வேண்டும் என்று, நிகழ்ச்சி நிரலில் இருக்கிறது. ஆனால் என்னை முன்னால் பேசச் சொல்லி விட்டார்களே' என்ற வியப்பினைத் தெரிவித்தார்கள். அவரை முன்னால் பேசச் சொன்னதற்குக் காரணமே, நூல் எப்படியெல்லாம் இருக்கிறது; எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்கின்ற கருத்துக்களை அவர் சொல்லிவிட்ட பிறகு, அப்படிப்பட்ட நூலை வெளியிடுவது எனக்குச்

சுலபமாக ஆகிவிடும் என்று தான், அவரை முன்னால் பேச வைக்க ஒரு மாற்று உபாயத்தைக் கடைப்பிடித்தோம்.

அவர் அதிலும் கொஞ்சம் உரிமை பாராட்டிக் கொண்டார். நான் இப்போது சிதம்பரத்திலே இருப்பவன், ஆகவே முதலிலே பேசுவது பொருத்தமுடையது என்று சொன்னார். அதிலே போட்டியிட வேண்டுமேயானால், எனக்கும் சிதம்பரத்திற்கும் கூடத் தொடர்பு உண்டு! அவருக்கு இருப்பது மண் தொடர்பு. எனக்குப் பெண்ணெடுத்த தொடர்பே இருக்கிறது. அது மாத்திரமல்ல; இராமலிங்க அடிகளார் அவர்கள், அவர் பாடுவதற்காக எடுத்துக் கொண்ட திருத்தலங்களில், நான் வாழ்ந்த திருவாரூரும் இடம்பெற்றிருக்கின்ற காரணத்தினால், என்னை இந்த நூலை வெளியிடத் தேர்ந்தெடுத்தார்களோ என்று கூடக் கருதுகிறேன்.

இராமலிங்க அடிகளுடைய கொள்கைகள்–அந்தக் கொள்கைகளைச் சொல்ல அவர் எடுத்தாண்ட தமிழ்–அவர் ஆற்றிய பணி–இவைகளையெல்லாம் குன்றக்குடி அடிகளார் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிப், பல ஆண்டு காலமாக எத்தனையோ பெரியவர்கள்–மகான்கள்–புலவர் பெருமக்கள்–கர்மவீரர்கள்–பாவேந்தர்கள்–புரட்சிக் கவிஞர்கள் இவர்களெல்லாம் எடுத்து எடுத்துச் சொன்ன பிறகும், அவர்களுடைய கொள்கைகள் நாட்டிலே வேரூன்றாத காரணத்தினாலேதான், அவைகள் மக்களுடைய உள்ளத்திலே இடம் பெறாத காரணத்தினாலேதான், இன்றைக்குப் பெரியார் மேடையிலே தோன்றுகின்றார்; ஆகவே திராவிடர் கழகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமானால் இராமலிங்க அடிகளின் கொள்கைகளை நல்ல முறையிலே பரப்பிட வேண்டும் என்று சொன்னார்.

பலரும் அடிகளார் அவர்களைக் காவி உடை தரித்த பெரியார் என்று சொல்கிறார் என்பதை உணர்ந்து, பயந்தோ என்னவோ, இவ்வளவு பேசி விட்ட பிறகு, இந்த ஒரு வார்த்தையாவது சொன்னால்தான், மடாலயங்களுக்கு மத்தியிலே தப்ப முடியும் என்பதற்காகத் திராவிடர் கழகத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வையுங்கள் என்று சொன்னார்கள். புள்ளி வைக்க வேண்டியதுதான். ஆனால் தமிழ் நாட்டினுடைய எழிற்கோலம் எழுச்சிக்கோலம் பூண, நாமனைவரும் புள்ளி வைக்க வேண்டும் என்று மாத்திரம் நான் கேட்டுக் கொள்கிறேன். பெரியார் அவர்கள் மாத்திரம் இப்படிப்பட்ட முரட்டுத்தனமான கொள்கைகளைச் சொல்கிறார் என்று குறை கூறப்பட்டாலும், அப்படிப்பட்ட முரட்டுத்தனமான கருத்துக்களைச் சொல்லாமல் இருந்திருப்பாரேயானால், நாம் இப்போது ஏற்பட்டு விட்ட பல சம்பவங்களுக்காக வருந்தக் கூடச் செய்திருக்க மாட்டோம்.

அடிகளாருடைய பேச்சை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கேட்ட போது, நல்லவேளை பெரியார் பிறந்தார் என்ற உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால் அவர் பிறந்த காரணத்தினால் தான், இவ்வளவு உண்மைகளை நாம் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலை அவர் நமக்களித்திருக்கிறார். பலரைச் சுலபமாக எழுப்ப முடியும். வேறு பலரைச் சுலபமாக எழுப்ப முடிவதில்லை. முரட்டுத்தனமாகத்தான் எழுப்ப வேண்டும். இராவணனை அவனுடைய மனைவி மண்டோதரி கண்ணாளா என்று காலையிலே அழைத்ததும், இருபது கண்ணும் மலர அவன் எழுவான். ஆனால் அவனுடைய இளவல் கும்பகர்ணனை எழுப்புவதென்றால் ஆயிரக்கணக்கான மதயானைகள் தேவைப்படும் என்று இராமாயணம் கூறுகிறது.

தமிழ்ச் சமுதாயம் கும்பகர்ணனுடைய நிலையிலே இருந்த காரணத்தினாலேதான், பெரியார் என்கின்ற யானையின் மிதிபடவேண்டியிருந்தது. பெரியாருடைய அழுத்தமான கால்கள் பட்ட காரணத்தாலேதான், கும்பகர்ணன் நிலையிலே இருந்த தமிழ்ச் சமுதாயம் விழித்துக் கொண்டு, அடிகளார் மொழியிலே பேசிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்திடக் கூடாது. ஆகவே கும்பகர்ணன் நிலையிலே ஆழ்ந்திருக்கின்ற சமுதாயத்தை விழிப்படையச் செய்வதற்குப் பெரியாரைப் போன்ற புரட்சியாளர்கள் தேவைப்பட்டார்கள் — இன்னமும் தேவைப்படுகிறார்கள்.

இராமலிங்க அடிகளாருடைய இவ்வளவு பெரிய அருட்பா நூலில் — இதைப் பதிப்பித்து நம்மிடம் வழங்கியிருக்கின்ற ஊரன் அடிகளார் அவர்கள், இராமலிங்க அடிகளாரின் கொள்கைகளை ஒரு பக்கத்திலே வெகு அழகாக விளக்கியிருக்கின்றார்.

"கடவுள் ஒருவரே — அவர் அருட்பெரும் சோதியர்.

சிறு தெய்வ வழிபாடு கூடாது.

இத் தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி செய்தல்கூடாது.

புலால் உண்ணலாகாது.

சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் கூடா.

எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவ காருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவு கோல்.

புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா.

இறந்தவரைப் புதைக்க வேண்டும் — எரிக்கக் கூடாது.

கருமாதி, திதி முதலிய சடங்குகள் வேண்டா.

எதிலும் பொது நோக்கு வேண்டும்."

இவ்வளவும் இராமலிங்க அடிகளின் கருத்துக்கள் என்று ஊரன் அடிகள் சொல்லியிருக்கின்றார்.

நான் கேட்கிறேன் — இவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற நாம், இந்தக் கொள்கைகளில் எத்தனை கொள்கைகளை ஒப்புக் கொண்டிருக்கிறோம். எத்தனைக் கொள்கைகளின் படி நடந்து கொண்டிருக்கிறோம். எந்தெந்தக் கொள்கைகளுக்கு நம்மை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்கின்ற கேள்விகளை, நம்மை நாமே கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். 'புலால் உண்பது கூடாது' என்பது இராமலிங்க அடிகளாருடைய கருத்து. விழாவை நடத்துகின்றவர்களே கூட அதைப் பின்பற்றுகிறார்களா என்று தெரியாது.

ஆகவே ஒரு பெரியவருடைய கொள்கை — இலட்சியம் எல்லோருமே ஏற்றுக் கொண்டு அதன்வழியில் தங்களை உருவாக்கிக்கொள்வது என்பது இயலாத காரியம். ஆனால் பொதுவாக சமுதாயத்திற்குத் தேவையான—சமுதாயத்தை வளர வைக்கக்கூடிய—விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய — கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு நம்மை நாமே தயார் படுத்திக் கொள்ளவேண்டும்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துரைத்ததையும், திருமூலரே அதை அந்தக் காலத்திலே சொன்னார் என்பதனையும், குன்றக்குடி அடிகளார் எடுத்துச் சொன்னார். பெரியார் அவர்கள் கடவுளே இல்லையென்று சொல்கிறார். அண்ணா அவர்கள் நம்முடைய பழமையைக் காக்கவும் — நல்ல புதுமைகளைச் செழிப்பாக வளர வைக்கவும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டார் என்றும் அடிகளார் குறிப்பிட்டார். பெரியார் அந்த அளவுக்குப் போன காரணத்தினாலேதான், இப்போது பெரியார் இடத்திலே ஒரு சமரசத்திற்குப் போகிறோம். எதுவுமே இல்லையென்று சொல்லாதீர்கள். ஒன்றையாவது ஒப்புக் கொள்வோம் என்ற சமரசத்திற்குப் போகிறோம்.

அதைத்தான் இராமலிங்க அடிகள் சொன்னதாக இந்தப் புத்தகத்திலேஇருக்கிறது. நான் சொல்லவில்லை. சிறு தெய்வ வழிபாடு கூடாது என்கிறார். ஆகவே பல தெய்வ வழிபாடு கூடாது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார். இங்கே வந்திருக்கின்ற தாய்க்குலமாயினும், ஆடவர்களாயினும், இங்கிருந்து சென்ற பிறகு இன்றிரவிலிருந்து நாளை இரவு வரை எத்தனை தெய்வங்களை வழிபடுகிறோம் என்பதைக் கணக்கிட்டுக் பார்த்துக் கொள்ள வேண்டும். இராமலிங்க அடிகளின் வழியில் செல்கிறோமா என்பதை, நாமே முடிவெடுத்துக் கொள்ள முடியும்.

அதைப் போலவே புராணங்கள் — சாத்திரங்கள் முடிவான உண்மைகளைத் தெரிவிக்க மாட்டா என்று அவர் கூறியிருக்கிறார். ஆனால் அவருக்கே நாம் ஒரு புராணம் எழுதி — நீ அப்படிச் சொன்னாயா, உனக்கே ஒரு புராணம் எழுதுகிறேன் பார் என்று இராமலிங்க அடிகளுக்கே, நாம் புராணம் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நூலிலே கூட, சில இடங்களிலே எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. சென்ற முறை இங்கே வந்து பேசும் போது கூட, ஊரன் அடிகளிடத்திலே அதை நான் சொன்னேன் — மேடையிலும் கூடத் தெரிவித்தேன். "எரியாத விளக்கு; எழுதிக் கொண்டே இருக்கிறார் இராமலிங்க அடிகள். விளக்கு அணைந்து போகின்ற சூழ்நிலை — பக்கத்திலே செம்பில்

இருந்த தண்ணீரை எண்ணெய் என எண்ணிக் கொண்டு விளக்கிலே ஊற்றினர். அவர் எண்ணெய் என்று எண்ணிக் கொண்ட காரணத்தினால் விளக்கு எரிந்து கொண்டே இருந்தது'' என்று சொல்வது, புராணங்களை— அற்புதங்களை நம்பாதே என்று எந்த இராமலிங்க அடிகள் சொன்னரோ, அதற்கு மாருக அவரையே அப்படி அற்புதங்கள் செய்யக் கூடிய சித்தன் என்று, நாம் அவரைக் குற்றவாளி ஆக்கியிருக்கின்ருேம் — என்பதுதான் என்னுடைய திடமான எண்ணமாகும்.

திரு. வ. சுப. மாணிக்கம் ஒரு அழகான கருத்தைச் சொன்னுர்கள். அதன் படியே இந் நூல்தொகுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர்கள். எந்தெந்தக் காலத்திலே எவையெவை எழுதப் பட்டது என்ற காலவரையறைகளை நிர்ணயித்தாக வேண்டும் என்று சொன்னர். அது உண்மை. பொருத்தமானதும்கூட. ஏனென்ருல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அவருடைய இறுதிக் காலத்திலே எழுதிய பல்வேறு பாடல்களை நாம் படித்திருக்கின்ருேம். எவ்வளவோ புரட்சிக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்ருர். அதே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இளமைக் காலத்திலே எழுதியதுதான் சுப்பிரமணியர் துதிஅமுது. இன்னும் சில நூற்ருண்டுகளுக்குப் பிறகு புரட்சிக் கவிஞரின் எழுத்துக்களைத் தொகுப்பதாக ஒருவர் சொல்லிக் கொண்டு, அவர் கடைசிக் காலத்திலே எழுதிய புரட்சிக் கருத்துக்களையெல்லாம் முன்னுக்குத் தள்ளி, அவர் எழுதிய சுப்பிரமணியர் துதி அமுதைக் கடைசியாகச் சொல்லி, முதலிலே இப்படி இருந்தார், பிறகு கடவுள் அருளாலே திருந்திச் சுப்பிரமணியனுக்கு அடிமையானர் என்று எழுதி விடுவார்களானல், ஒவ்வொரு காலத்திலும் அவர் எப்படியெப்படி மாறினர் என்பது தெரியாமலே போய் விடக் கூடும்.

கருணுநிதியின் கவியரங்கக் கவிதைகளைக் கூட, அப்படித் தொகுத்திருக்க வேண்டும் என்று மாணிக்கம் அவர்கள் சொன்னர். இப்பொழுதே கூட குழப்பம் ஏற்படுகிறது. எந்தெந்தக் காலத்திலே எதையெதைச் சொன்னேம்? பத்தாண்டு காலத்திற்கு முன்பு நாங்கள் எதைச் சொன்னேம் — இப்பொழுது எதைச் சொல்கிருேம் — அரசியல் ரீதியாகக் கூட கேட்போம்.

ஆனல் இன்றைக்கு ஒரு கருத்தைச் சொல்லும் போது, 10 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன அந்தக் கருத்தைத்தான் இப்போது சொல்கிருயோ என்று சந்தேகப்படுகிறவர்கள் இருக்கிற நேரத்தில், இப்படி காலங்களை வரையறுப்பது எவ்வளவு தேவை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆகவே காலங்களை வரையறுத்து எவ்வெப்போது என்னென்னகருத்துக்களை எழுதினர்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபொழுது, இராமலிங்க அடிகள் இந்தக் கொள்கைகளை மாத்திரம் அல்ல; குன்றக்குடி அடிகள் சொன்னரே சைவம், சன்மார்க்கம் ஆகிய இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றி; அவைகளையே கூட இராமலிங்க அடிகள் சாடியிருக்கின்ருர்.

இராமலிங்க அடிகளுடைய திருவருட் பாவில் பலரும் மூழ்கித் திளைத்திருக்கிருர்கள். அவர்களிலே ஒருவர் இராசமாணிக்கம்பிள்ளை என்பவர். அந்த இராசமாணிக்கம்பிள்ளை தொகுத்துள்ள பதிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது — பக்கம் 58-ல் அடிகளார் சொன்னது:

''தெய்வத்திற்குக் கை, கால் முதலியன இருக்குமா என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கிருேம்''

''இதுபோல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம், சித்தாந்தம்முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம்'' இது இராசமாணிக்கம்பிள்ளை பதிப்பு - 59 - வது பக்கம்!

''...... மேலும் இவைகளுக்கெல்லாம் சாட்சி நானே இருக்கிறேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம்வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும், வேலாயுத முதலியாருக்கும், இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய் விட்டது பார்த்தீர்களா? அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருக்கின்ற பாடலையும், மற்றவர்கள் பாடலையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாட்சி சொல்லி விடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்ருல், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது''.

"இப்போது ஆண்டவர் என்னை ஏருத நிலைமேலேற்றியிருக்கின்ருர். இப்போது எல்லா வற்றையும் விட்டு விட்டதினுல் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர் களானுல் என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இது வரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள், ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை." இது அந்த நூலில் 60-வது பக்கத்தில் காணப்படுகிறது. ஆகவே இப்படி நிறையச் சொல்லலாம். புரட்சிகரமான கருத்துக்களை வடலூர் வள்ளலார் தமிழ் நாட்டுக்கு அளித்தார்.

அப்படி அளித்த கருத்துக்கள் தமிழ் மொழியில் அளிக்கப்பட்ட காரணத்தினுல், அது வேறு மொழிகளிலே மொழி பெயர்க்கப் படாத காரணத்தினுல், இன்று அந்தக் கருத் துக்கள் நாட்டில் வெகுவாகப் பரவிடவில்லை. ஆனுல் எப்பொழுதுமே புரட்சிக் கருத்துக்களை — புதுமைக் கருத்துக்களைத் தமிழ்ச் சமுதாயத் தில், அதை மறுத்திட வேண்டும் — அது புகுந்திடக் கூடாதுஎன்று எண்ணுகின்றவர்கள், கருத்துக்களைச் சொன்னவர்களை உயர்ந்த இடத்திலே உட்கார வைத்து விட்டு, அவர் களுக்கு மாலை சூட்டி — மதிப்பளித்துக் கருத்துக் களை ஒடுக்கி விடுவார்கள் — இப்படிப்பட்ட தந்திரங்களைக் கற்றவர்கள் நாட்டிலே ஏராள மாக இருக்கிருர்கள்.

சித்தர்கள் சொன்னுர்கள் ;

"நட்ட கல்லைத் தெய்வமென்று
நாலுபுட்பம் சாத்தியே
சுத்திவந்து மொணமொணென்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்"

என்ருர்கள்.

"பறைச்சியாவதேதடா, இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ" ... என்று பாடினுர்கள். ஆனுல் என்ன சொன்னது நாடு? நாட்டிலே அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக் கக் கூடாது என்று கருதியவர்கள் என்ன சொன்னுர்கள்? அவர்கள் சித்தர்கள் – அவர் களால்தான் முடியும். நாம் சாதாரணமான மனிதர்கள். நம்மால் அதெல்லாம் ஆகாது!

ஆலயத்திற்கு அரிசனத் தோழனை அழைத்துச் செல்ல வேண்டுமென்று காந்தியடி கள் சொல்லுகிருரா? அவர் மகாத்மா - அவரால் செய்ய முடியும். நாம் மனித ஆத்மாக்கள். நம்மால் இயலுமா? என்று, சொன்னவர்களை உயர்த்தி வைத்து விட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களைத் தாழ்த்துவதிலே, நாட்டிலே உள்ள பல சாமர்த்தியக்காரர்கள், பல்வேறு கட்டங்களிலே வெற்றியினைப் பெற்று வந்திருக் கின்ருர்கள். அதைப் போலத்தான் இராமலிங்க அடிகளை உயர்த்தி வைத்து விட்டு, இராமலிங்க அடிகள் சொல்லலாம், நாம் சொல்ல முடியுமா? அவர்கள் பெரியவர்கள் சொல்லலாம். நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? நம்மை அந்த அளவுக்கு உயர்த்திக் கொண்டு அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது நலமா?" என்று இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கேட்டுக் கருத்துக்களின் சொந்தக்காரர்களுக்கு மட்டும் புகழுரைகளும் போற்றுதலும் அளித்து விட்டு, கருத்துக்களை அழிப்பதிலே நாம் கால காலமாக வெற்றியினைப் பெற்று வந்திருக்கிருேம்.

இனிமேலாவது கருத்துக்களின் சொந்தக் காரர்களை மதிப்பது இருந்தாலும் இல்லா விட் டாலும், அவர்கள் சொன்ன கருத்துக்களை மதிப் பதிலே நாம் தனிக் கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். அதற்கு இது போன்ற விழாக்கள் பயன்பட வேண்டும்.

இராமலிங்க அடிகளின் பாடல்கள் மாத்திர மல்ல; அவரது உரை நடைகள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. அவைகளைப் படிக்கப் படிக்க நம்முடைய உள்ளம் இராமலிங்கனுரின் கருத்துக்களோடு ஒன்ருக இணைவது மாத்திர மல்ல; அதை நிறைவேற்றுவதற்கு முடிந்த அளவு பாடுபட வேண்டுமென்கின்ற உணர்ச்சி யினையும் நமக்கு ஏற்படுத்தும். பசி ஒழிக்கப் பட்டால்தான் நாடு வளரும் என்று இராமலிங்க அடிகள் சொன்னதாக மாணிக்கம் குறிப்பிட் டார். உண்மைஅது! வயிற்றைக் கவனிப்பதற்கு ஒரு இடத்திலே செல்வம் குவிந்து கிடக்கவும், மற்ருேரிடத்திலே தரித்திரம் தாண்டவமாடு கின்ற நிலை இருக்கலமா? அதைச் சமப்படுத்த வேண்டாமா என்று கேட்டார்.

பசியை ஒழிப்பது குறிக்கோளானுல், செல்வர்களோடு சாதாரணமானவர்களைச் சம மாக்குவது, அதற்காக எடுத்துக் கொள்ளப் படுகின்ற செயல் முறையாகும். குறிக்கோள்

பசியை ஒழிப்பது. சில நேரங்களில் பசியின் போது நல்ல கருத்துக்கள் வருவதுண்டு. பசியின் காரணமாகப் படுத்திருந்த புலவன் தானே "நாராய் நாராய் செங்கால் நாராய்; பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன" என்று அந்த நாரையினுடைய வாயைப் பற்றி உதாரணம் சொல்லி, நாரையினுடைய அலகு எப்படி இருக்கிறது என்றால், பனங்கிழங்கு பிளந்தது போல் இருக்கிறது என்று உலகுக்கு அறிவித்தான். சாப்பிடக் கிழங்கு பற்றிச் சொல்ல ஒரு உதாரணம் கிடைத்தது. ஆகவே நல்ல பாடல்கள் கிடைக்க வேண்டுமானால் பசி தேவையா என்று கேட்டு விடாதீர்கள்!

பசி போக்கிட — பசி நீக்கிட வேண்டும் என்று வடலூர் வள்ளலார் சொன்ன கொள்கையின் அடிப்படையில் தான், குன்றக்குடி அடிகளார் சொன்னது போலப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைத் தொடங்கிய நேரத்தில் முதல் முதலாக நான் இதைச் சொன்னேன். "வாடியபயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வடலூர் வள்ளலார் சொன்னார். அந்தப் பாட்டை மனத்தில் வைத்துத்தான் இந்தத் திட்டம் தொடங்கப் படுகிறது என்று சொன்னேன். இப்படி பல் வேறு வகையிலும் இராமலிங்க அடிகள் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார். ★

சென்னைச் சைதாப்பேட்டைத் திரு. சுப்பிரமணிய சுவாமி கோயிலின் திருப்பணித் துவக்க விழாவில், சென்னைத் துணையாணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B.Sc., B.L. அவர்கள் முன்னிலையில், தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தலைவர் திருவார்திரு. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தலைமையுரை ஆற்றுதல். (14-9-72)

திருவிடை மருதூர்த் திருமுறைக் கருத்தரங்கத் துவக்கவுரை

'ஆராய்ச்சிப் பேரறிஞர்'

திரு. மு. அருணசலம் அவர்கள், M.A.,

எங்கேனும் யாதாகிப்
பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென்றருள் புரியும்
எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக்
குளிர்பிரம புரத்துறையும்
சங்கேயொத் தொளிர்மேனிச்
சங்கரன் தன் தன்மைகளே.

தலைமை தாங்குகின்ற நீதிபதி அவர்களுக்கும், அன்புமிக்க பெருந்தகையான திரு. ராய. சொக்கலிங்கனர் அவர்களுக்கும், என்னுடைய வணக்கங்கள்.

அன்பர்களே, இன்று திருஞானசம்பந்தருடைய தேவாரக் கருத்தரங்கு முதல் தினம். சில வார்த்தைகள் அது சம்பந்தமாக நினைவுபடுத்த எண்ணி வந்தேன். திரு. சொக்கலிங்கனர் அவர்கள் பேசிய காலத்திலே ஒன்பதாம் திருமுறை பற்றி நிரம்பச் சொன்னர்கள். சென்ற ஆண்டு பன்னிரு திருமுறை விழா நடந்தது. அத்திருமுறை விழாவிலே, நான் பார்வையாளராக இருந்து, ஒன்பதாந் திருமுறை பற்றிய பல செய்திகளைத் தொகுப்பாகச் சொன்னேன். அது மாத்திரமல்ல. அவர்கள் போலவே கருத்துக் கொண்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒன்பதாந் திருமுறை பற்றி மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தும் நிலையும் இருந்தது. அத்திருமுறை அளவால் சிறியது, பதிகங்களால் குறைந்தது. பாடினேர் தொகையால் பெரியது என்று எவ்வளவோ சொன்னலும், அதில் உள்ள சில சிறப்புகள் நினைவு கூரத்தக்கன. எண்ணுயிரம் பாடல் கொண்ட அடங்கன் முறையில் காணப்படாத சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையிலே இருக்கிறது. அதைப் பற்றி வேறு எந்த விளக்கமும் நமக்குக் கிடைக்கவில்லை. மற்ருெரு சிறப்பு, சேந்தனர் திருப்பல்லாண்டு பாடியிருக்கின்ருர். வைணவத்தில் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாடிய ஆழ்வார், பெரியாழ்வார் என்று சொல்லப்பட்டார். அது போல சைவத்திலே சேந்தனர் திருப்பல்லாண்டு பாடினும், அந்தச் சேந்தனருடைய வரலாற்றைச் சைவமக்கள் நன்கு அறியவில்லை என்ற கருத்தோடு அவரைப்பற்றிப் பல வார்த்தைகள் சென்ற கருத்தரங்கிலே சொன்னேன். ஒரு வார்த்தை மாத்திரம் ஞாபகப்படுத்துகின்றேன். நம்பியாண்டார் நம்பி திருமுறையைத் தொகுத்துப் பாடிய காலத்தில் சேந்தனர் யார் என்பதைச் சொல்லுகின்ருர், ''பண்டைப் பறைச் சேந்தன் பழைய அவிழைக் கொடுக்க அதுவும் திரு அமிழ்து ஆகியதே'' என்று சொல்லுகின்ற இடத்திலே, சேந்தனர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் என்று நம்பியாண்டார் நம்பி நமக்கு உணர்த்துகின்ருர். பெரிய புராணத்திலே சேக்கிழார் அனேக நாயன்மார்களை அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களாக நமக்கு அறிமுகப்படுத்துகின்ருர். சேந்தனர் அந்த நாயன்மார் வரிசையில் வராவிட்டாலுங் கூட, அவர் திருப்பல்லாண்டு பாடி, அதனலே சைவ சமயத்திலே ஓர் ஏற்றம் பெற்றவர். வைணவத்திலே திருப்பாணழ்வார் பாசுரம் பாடி இருக்கிருர். அது போல சைவத்திலே சேந்தனர் நான்கு பதிகங்கள் பாடி இருக்கிருர். மூன்று பதிகங்கள் திருவிடைக்கழி திருவாவடுதுறை திருவீழிமிழலை என்ற மூன்று தலங்களுக்கும், பாடினர். தில்லைக்குத் திருப்பல்லாண்டு பாடவில்லை. திருவிசைப்பா என்ற ஒன்பதாந் திருமுறையைப் பற்றிய மற்ருெரு சிறப்பு என்ன வென்ருல், அதில் உள்ள திருப்பல்லாண்டு உட்பட இருபத்து ஒன்பது பதிகங்களிலே, பதினறு பதிகங்கள் சிதம்பரத்திற்கு

உரியன. ஆகவே தில்லைத் திருமுறை என்று கூட, நாம் அதனைச் சொல்லலாம். அப்பேர்ப் பட்ட சிறப்பு அதற்கு உரியது. அது மட்டுமல்ல. பாடின ஒன்பது அடியவர்களும் தில்லையைப் பாடி இருக்கிறார்கள்

திருமாளிகைத் தேவர் நான்கு பதிகங்களும் தில்லைக்கே பாடினார். திருவாலி அமுதனார் நான்கு இசைப்பாக்களும் தில்லைக்கே பாடினார். சேந்தனார் பல்லாண்டு பாடினார். இப்படியாக ஒன்பதாம் திருமுறைச் சிறப்பை எவ்வளவு விரித்துச் சொன்னாலும் தகும். திருமுறைகளைத் தொகுத்தமை பற்றி நண்பர் திரு. கி. வா. ஜகந் நாதன் அவர்கள் அருமையான ஒரு கருத்தைச் சொன்னார். முதல் ஏழு திருமுறைகள் அவர் கருத்தின் படி சிவபெருமானையே புகழ்வன. எட்டாந் திருமுறையும் சிவபெருமானையே புகழ் வது. ஒன்பதாம் திருமுறையிலே சிவபெருமா னோடு கூட, திருவிடைக்கழி முருகனும் புகழப் பெறுகின்றார். பத்தாம் திருமுறையிலே மேலும் சக்கரங்கள், அம்மையார் துதி முதலியன கூறப் பட்டுள்ளன. பதினோராம் திருமுறைக்குப் போனால், அங்கே தனியாகக் கணபதி மீதும் முருகன் மீதும் பதிகங்கள் உள்ளன. அடியவர் சிறப்பிக்கப் பெறுகின்றனர். பன்னிரண்டாம் திருமுறை அடியவர்களை மட்டுமே சிறப்பிப்பது என்று ஓர் அமைதி காட்டினார். இது அழகு உடையது. நான் ஓர் அமைதி கூறுகின்றேன். வைஷ்ணவத்திலே பார்க்கலாம். முதலாயிரம் இசைப்பா. இரண்டாவது ஆயிரம் திருமங்கை யாழ்வார் பாடிய பெரிய திருமொழி இசைப்பா. மூன்றாவது ஆயிரம் இயற்பா. இசையில்லாத பாடல்கள். நான்காவது திருவாய்மொழி இசைப்பா. திருவாய்மொழி பாடிய நம்மாழ்வார் பாடிய திருவாசிரியம் திருவிருத்தம் முதலியன, இசைக்குரியன அல்லாத பாடல்கள், மூன்றாவது ஆயிரத்திலே சேர்க்கப்பட்டுள்ளன.

வைணவத்தில் திருமங்கையாழ்வார் பாடிய திரு வெழு கூற்றிருக்கை, திருமடல்கள் முதலிய எல்லாம் இயற்பாவில் சேர்க்கப்பட்டுள் ளன. அப்படி பார்க்கும் போது அங்கேயும் ஒரு நல்ல அமைதி பார்க்கலாம். நான்கு ஆயிரங் களிலே மூன்று ஆயிரங்கள் இசைப்பா. ஒரு பாகம் மட்டும் இயற்பா. நம்பியாண்டார் நம்பி சைவத்திலே திருமுறைகளைத் தொகுத்தபோது, இப்படிப்பட்ட கருத்துக்களை இசைப்பா இயற்பா என்ற கருத்தை மனத்தில் வைத்துக் தொகுத்தார். அவர் தொகுத்த போது முதல் ஒன்பது திருமுறைகளை இசைப்பாக்களாகவும், பத்து பதினொன்று ஆகிய இரண்டு திருமுறை களை இயற்பாக்களாகவும் தொகுத்தார். அவரு டைய காலத்திற்குப் பிறகு பன்னிரண்டாம் திருமுறையாகச் சேக்கிழாருடைய பெரிய புராணம் சேர்க்கப்பட்டது; இது இயற்பாவே. தேவாரம் இசைப்பா. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் இசைப்பா. ஒன்பதின்மார் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இசைப்பா. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமும், பதி னொன்றாம் திருமுறையாகிய பிரபந்த மாலையும், பன்னிரண்டாம் திருமுறையும், இயற்பாக்கள் என்றகருத்தை மனத்தில் வைத்துப் பார்த்தால், திருமுறைப் பாகுபாட்டினுடைய ஒரு பொருத் தம் நன்கு புலப்படும். அந்தப் பொருத்தத்திற்கு மற்றொரு ஆதாரமும் காட்ட முடியும்.

நான்கு ஆயிரம் பாடல் கொண்ட சம்பந்தர் தேவாரம் மூன்று திருமுறைகள்; ஒரு திருமுறைக்கு ஆயிரத்தினும் மிக்க பாடல்கள். பின்னாலே நாலாயிரம் பாடல் கொண்ட பெரிய புராணம் ஒரே திருமுறை. எவ்வாறு முந்நூறு பாடல் கொண்ட இசைப்பா ஒரு திருமுறையாக முடிந்தது? அளவால் மிகவும் சிறிதாயிற்றே? தேவாரங்களைத் தொகுத்தார், திருவாசகத்தைத் தொகுத்தார், திருமந்திரத்தை அப்படியே வைத்துக் கொண்டார்; கிடைத்த தனிப் பாடல்கள் பதிகங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்துக் கொண்டார். இசைப்பாடல்களை ஒரு பகுதியாகவும் இயற் பாடல்களை ஒரு பகுதியாகவும் வைத்தார். இசைப்பாடலிலே திருவிசைப்பா — திருப் பல்லாண்டு கிடைத்தன. அவ்வளவு தான். அங்கங்கே தலங்களிலே வழங்கின பாடல்களை எல்லாம் தொகுத்தார், தேடிப்பெற்றார். ஒரு திருமுறையாகத் தொகுத்துக் கொடுத்தார். பிறகு திருமுகப்பாசுரம் முதலிய பதிகங்களை ஒரு திருமுறையாகத் தொகுக்க வேண்டும் என்று அரசன் வேண்ட, நம்பியாண்டார் நம்பி அந்தப் பிரபந்த மாலையைத் தொகுத்தார். இசை அல்லாத பாடல்களை எல்லாம் அங்கே சேர்த்தார். அதிலே ஒரு விலக்கு மட்டும். காரைக்காலம்மையார் பாடிய பாடல்கள் கிடைத்தன. திருவாலங்காட்டுப் பதிகங்கள் இரண்டு, அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை ஆகிய நூல்கள் கிடைத்தன. பெரும் பகுதி இயற்பாக்களாய் இருப்பதினாலே, நம்பி யாண்டார் நம்பி அந்த அம்மையாருடைய

மூத்த திருப்பதிகங்கள் இரண்டையும் பதினெராம் திருமுறையிலேயே சேர்த்தார். மூத்த திருப்பதிகம் இரண்டு மட்டும் சேர்ப்பதென்றால் இசைப்பாட்டிலே சேர்த்திருப்பார். பெருவாரியான பாக்கள் இயற்பாக்கள் ஆக இருந்ததினாலே அவற்றைப் பதினெனொன்றும் திருமுறையிலே சேர்த்தார். இதுவே சைவத்திலே திருமுறைப் பாகுபாடு ஏற்பட்டதற்கு அமைதி என்று நான் காண்கின்றேன். இதனை நீங்கள் சிந்தனை செய்ய வேண்டும்.

மற்றொரு கருத்து. ஐயா அவர்கள் பேசிய பொழுது மூன்றும் ஆண்டில் திருஞானசம்பந்தர் இப்படி பாடினார். பாடுவாரா — பாட முடியுமா? என்பதைப் பற்றி நாம் ஐயப்படக் கூடாது என்றார். மூன்றுவது ஆண்டு என்பது எதற்கு? உயிருக்கல்ல. இந்த உடலுக்கு. திருஞானசம்பந்தர் பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப்பக்தி பண்ணும் தொண்டர். அவரை அவன்தானே தூய கதியினில் சேர்க்கிறான். அருள் ஞானம் பெற்ற இந்தக் குழந்தை, முந்திய வினைவசத்தாலே பாடுகின்றது. அதற்கு இந்த உடலுடைய வளர்ச்சி பெரிதல்ல. இதை நன்கு நாம் சிந்தனை செய்ய வேண்டும். அது முடியும் என்பது பிரத்தியட்சமாக இன்றைக்குக் கூட நாம் கண் முன்னே காண்கின்றோம். அநேகம் பேர் சென்னையிலே சேதுராமன் என்ற இளைஞர் பாடிய பாட்டுக் கேட்டிருப்பார்கள். ஒப்புமையாகச் சொல்கின்றேனே தவிர, உண்மையைக் கண்டு நீங்கள் மனம் மாறுதல் அடையக் கூடாது. மொத்தம் இரண்டரை மணி நேரம் பாடினார். கையில் தாளம் வைத்துக் கொண்டு சில பாடல்கள் தாளத்திற்கு இசையப் பண்ணோடு பாடினார். சில பாடல்கள் விருத்தமாகப் பாடினார். திருப்புகழ் மாதிரியாகச் சந்தத்திலே அநேக பாடல்கள் பாடினார். எப்படி பாடினார்? அதைப் பார்த்தவர்கள் மனத்தில் மூன்று ஆண்டிலே திருஞானசம்பந்தர் பாடுவாரா என்ற ஐயம் எழாது.

தன்னை மறந்த நிலையை ஆங்கிலத்திலே டிரான்ஸ் (Trance) என்று சொல்லுவார்கள். தன் வசம் இழந்த நிலை. அவர் மனம் அங்கே இல்லை. ஆகவே உடல் வேலை செய்யவில்லை. கை தாளம் போட நா பாடிற்று. கண் பார்த்தது. உலகத்தைப் பார்க்கவில்லை. அந்தத்திருமுருகன் திருமேனியைப் பார்த்துக்கொண்டே இருந்தது. இதை நன்றாகப் பார்த்து மனத்தாலே சிந்திக்க வல்லமை பெற்றவர்கள் நிச்சயமாகத் திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டிலே இப்படி பாடினாரா என்ற கேள்வி கேட்க மாட்டார்கள்.

நம் திருஞானசம்பந்தர் சீர்காழியிலே பிறந்தார். நல்லூர்ப் பெருமணத்திலே முத்தி அடைந்தார். அவர் பிறந்ததும் சோழநாட்டிலே. முத்தி பெற்றதும் சோழ நாட்டிலே. நாயன்மார் தரிசித்த தலங்கள் எல்லாவற்றையும் போய்த் தரிசிக்க முடியாவிட்டாலும் கூட, அவர்கள் பிறந்த தலங்களையும், அருள் பெற்ற தலங்களையும் தரிசிக்க வேண்டும் என்றதொரு கருத்து உண்டு. திருஞானசம்பந்தர் பிறந்தது சீர்காழியிலே. அருள் பெற்றது சீர்காழியிலே. முத்தி அடைந்தது அங்கிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள, இன்று ஆச்சாபுரம் என்று வழங்குகின்ற திரு நல்லூர்ப் பெருமணத்திலே. இரண்டு பதிகளும் இந்தச் சோழ நாட்டிலே இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் நடுநாட்டிலே உள்ள திருவாமூரிலே பிறந்தார். அங்கே உள்ள திருவதிகையிலே அருள் பெற்றார். சோழ நாட்டிலே உள்ள புகலூரிலே முத்தி பெற்றார். சுந்தரமூர்த்தி நடு நாட்டிலே உள்ள திருநாவலூரில் பிறந்தார். திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட் கொள்ளப்பட்டார். சேர நாட்டிலே உள்ள திருவஞ்சைக் களத்தில் சென்று அங்கிருந்து கயிலாயம் சென்றார். மாணிக்கவாசகர் பாண்டி நாட்டிலே உள்ள திருவாதவூரிலே பிறந்தார். உத்தரகோசமங்கையிலும் பெருந்துறையிலும் அருள் பெற்றுத் தில்லையிலே வந்து இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

இவற்றை மனத்திலே வைத்துப் பார்க்க வேண்டும். திருஞானசம்பந்தருடைய வரலாற்றைச் சொல்லுகின்ற காலத்திலே, ஒரு கருத்தினை மனத்திலே வைக்க வேண்டும். சேக்கிழார் ஒரு ஜனநாயகவாழ்க்கையைக் கண்முன்னே காட்டுகிறார். அது சிவஞான ஜனநாயகம். ஜனநாயகத்தினுடைய அடிப்படை ஒருவன் இந்தியனாகப் பிறந்திருக்க வேண்டும். வயது இருபத்தொன்று ஆகியிருக்க வேண்டும். அதே போல் சேக்கிழார் அந்த ஜனநாயகத்துக்கு இரண்டு தகுதிகள் சொல்கிறார். தமிழ் மண்ணிலே பிறந்திருக்க வேண்டும். சிவபெருமானிடத்திலே பக்தி செலுத்த வேண்டும். அப்படி பார்த்தால் அந்த ஜனநாயகத்துக்குள்ளே அடங்காதவர்கள் யார். ஒரு வகையில் அங்கே ஆண்களும் இருக்கிறார்கள். பெண்களும் இருக்கிறார்கள். உயர்ந்தவர்களும் இருக்கிறார்கள்

அரசரும் இருக்கிருர்கள். சோழ மன்னன், சேர மன்னன், பல்லவமன்னன், பாண்டியமன்னன், குறுநிலமன்னன் எல்லோரும் இருக்கிருர்கள். குழந்தைகளும் இருக்கிருர்கள். சிறுத் தொண்டருடைய குழந்தை, அமர்நீதி நாயனுருடைய குழந்தை, இன்னும் எத்தனையோ குழந்தைகளெல்லாம் அங்குப் பங்கு பெறுகிருர்கள். சாக்கிய நாயனுர் இந்த ஜனநாயகத்துக்கு உட்பட்டரவல்லர். அவர் பௌத்தராயிற்றே? அவரையும் அந்த ஜனநாயகத்திலே சேக்கிழார் ஒப்புக்கொள்கிருர். அதுமாத்திரமல்ல. இன்னும் ஒரு விதி விலக்கும் கொடுக்கிருர். 'அப்பாலும் அடிச்சார்ந்தார், என்று ஒன்று. காலத்தாலே இடத்தாலே அப்பால். நமது சுந்தர மூர்த்தி நாயனுர் திருத்தொண்டத் தொகை பாடிய காலத்துக்கு முற்பட்டவர்களாயிருந்தாலும் சரி, அப்பால் என்ருல் காலத்தாலே முற்பட்டவராக, இப்பால் வந்தவர்களும் இனி வரப்போகிறவர்களும் அந்தத் தொகைக்குள்ளே அடங்குகின்ருர்கள். தமிழ் நாட்டின் எல்லைக்கு அப்பால் எந்த நாட்டினராயிருந்தாலும், அது மாத்திரமல்ல, மதத்தாலும் அப்பால் எந்தச் சமயத்தைச்சேர்ந்தவராயிருந்தாலும், சாக்கியர் போல அவர்களையும் சேக்கிழார் அழைத்துக் கொள்கிருர்,

இப்படிப்பட்ட ஒரு ஜனநாயகத்திலே முதல்வராக விளங்குகின்றது, நமது ஞான சம்பந்தர் ஆகிய குழந்தை. பொதுவாக உலகத்திலே எல்லாமக்களிடையினும் குழந்தைகளிடத்திலே ஈடுபாடு மிகுதி. சைவத்திலே திருஞானசம்பந்தர், பிறகு மெய்கண்டாரும் குழந்தையாகத் தான் அருள் பெறுகின்ருர். வைஷ்ணவத்திலும் நம்மாழ்வார் குழந்தையாகத்தான் அங்கே திருப்புளியினடியிலே எழுந்தருளியிருக்கின்ருர். ஆண்டாளைக் குழந்தையாகத்தான் பெரியாழ்வார் பெறுகின்ருர். ஏசுநாதர் சொன்னுர் என்று பைபில் நூலிலே ஒரு வாக்கியமுண்டு. நீ ஒரு குழந்தை போல ஆனுலன்றி, உன் மனம் குழந்தைபோன்றதன்மையைப்பெற்ருலன்றி, நீ பரலோகத்திலே இறைவனுடைய சந்நிதி முன்னே போகமுடியாதென்று. அதுபோல இங்கேபெரியோர் எல்லாரும் குழந்தைப் பருவத்தை மிகவும் பாராட்டி, நம்முடைய சமயத்திலே வைத்திருக்கிருர்கள். முருகப்பெருமான் குழந்தைதான். கிருஷ்ணன் குழந்தைதான். இராமன் பெரியவனுக இருக்கலாம். ஆனுல் கிருஷ்ணன் குழந்தைதான் நமக்கு. முருகன் குழந்தைதான். இது ஒரு சிறப்பான மரபு. அது மாத்திரமல்ல. தமிழ் இலக்கித்திலே பிள்ளைத் தமிழ் என்ற ஒரு இலக்கியமுண்டு. அந்தப் பிள்ளைத் தமிழைக் குழந்தை மேலே தான் பாட வேண்டும். பெரியவர்களைக் குழந்தையாகப் பாவித்து பாடுகிற மரபு இல்லை. இலக்கண நூல் சொல்லும், அரசர்கள் மேலே பிள்ளைத் தமிழ் பாடலாம். முடி சூடிய பிறகு பாடக் கூடாது. அரசனை பிறகு பாடக் கூடாது என்று. அதே போலப் பார்த்தால் திருமால் மேல் பிள்ளைத் தமிழ் பாடியிருப்பார்கள். வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ். அடியவர்கள் மீது பிள்ளைத் தமிழ்; பெண்களின் மீது பிள்ளைத் தமிழ். மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ். ஆண்டாள் பிள்ளைத்தமிழ். முருகன் பிள்ளைத்தமிழ் என்றெல்லாம் பிள்ளைத்தமிழ்கள் உள்ளன. சிவ பெருமான் மீது பிள்ளைத்தமிழ் இல்லவேயில்லை. அது ஒரு இலக்கிய மரபு. சிவபெருமான் மீது பிள்ளைத்தமிழ் கிடையாது. பிறவி அவனுக்கு உரியதன்று என்பது தான் பொருள்.

ஞானசம்பந்தருடைய அவதாரத்தினுடைய கருத்து என்ன? தமிழ் இலக்கிய உலகத்திலே அவருக்குரிய இடம் எது என்பதுபற்றி, ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன். அநேகம் பேர் கேட்டிருக்கிருர்கள். ஞானசம்பந்தர் சமணரைக் கழுவேற்றினுர். அவரைப் பற்றி நீங்கள் மாநாடு கூடுகிறீர்களா, கொண்டாடுகிறீர்களா என்றெரு கேள்வி, என்ன பதில்? தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், கி. பி. மூன்ரும் நூற்ருண்டிலே மதுரையைக் களப்பிரர் என்று ஒரு கூட்டத்தார் பிடித்துக் கொண்டார்கள். பாண்டி நாட்டைக் கைப்பற்றினுர்கள். சோழநாட்டைக் கைப்பற்றினுர்கள். பல்லவ நாட்டைக் கைப்பற்றினுர்கள். களப்பிரன் தமிழ்மொழிக்கு அன்னியன், தமிழ்ப்பண் பாட்டுக்கு அன்னியன். சைவசமயத்துக்கு அன்னியன். ஆகவே தமிழையும் தமிழ்ப் பண் பாட்டையும் ஆலய வழிபாட்டையும் அழித்தார்கள். மதுரையில் 550-ல் கொடுங்கோன் என்ற பாண்டிய அரசன் வந்து அவர்களை அப்புறப்படுத்தினுன். இது சரித்திரம் சொல்லுகின்ற சான்று. சாசனங்கள் மூலமாகத் தெரியவருகின்ற உண்மை. இந்த நிலையிலே பாண்டிய நாட்டில் தெய்வ வழிபாடு நின்று விட்டதென்று சேக்கிழார் சொல்லுவார்.

சீர்காழியில் ஒரு குழந்தை. அங்கிருந்து பாண்டி நாட்டுக்குச் செல்கிறது. சமணர்களை ஒடுக்க வேண்டும் என்பது அதனுடைய நோக்

கமல்ல. நாட்டிலே விளைந்த தீமையைப்போக்க வேண்டும் என்று எழுந்தது, அந்தக் குழந்தை. என்ன தீமை விளைந்தது. சைனர்களின் சித்தாந்தங்களில் ஒரு முக்கியமான சித்தாந்தம். பெண்களுக்கு மோட்சமில்லை, ஜைனசமயத்தில். அதன்படி காரைக்கால் அம்மையாருக்கோ, மங்கையர்க்கரசிக்கோ ஆண்டாளுக்கோ மோட்சமில்லை. அடுத்த ஜென்மத்தில் ஆடவனுகப் பிறந்தால்தான் மோட்சமுண்டு என்பது கொள்கை. நன்ருக யோசித்துப் பாருங்கள். ஆண்களுக்கு மோட்சமுண்டு. பெண்களுக்கு மோட்சமில்லை. இது தமிழ் மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதா? சைவம் ஒப்புக் கொள்ளுமா? வைஷ்ணவம் ஒத்துக் கொள்ளுமா? இதை எதிர்த்துப்போராட ஒரு சைவக் குழந்தை வந்தது. அதுதான் ஞானசம்பந்தர்.

இரண்டாவது இசையினுலே மனிதனுக்குக் கெடுதல். இசை கூடாது என்பது ஒரு சைன சித்தாந்தம். இதை விளக்குவதற்கு என்றே, இதை வலியுறுத்திக் காவியமாக சொல்வதற்கே வந்தது, பின்னுல் 600 ஆண்டுகள் கழித்து யசோதரகாவியம் என்ற ஒரு நூல். மனிதன் பெண்ணுலும் இசையாலும் கெடுகிருன் என்ற சித்தாந்தத்தை நிலை நாட்ட வந்தது யசோதர காவியம் என்ற நூல். இது தமிழுலகம் ஒப்புக் கொள்ளுமா? இராவணன் இசைபாடி விடுதலை பெற்று வாழ்வு பெற்ருன் என்றெல்லாம் புராணங்கள் கூறுகின்ற தமிழ் நாட்டிலே, இசையாலே மனிதன் கெடுவான் என்பதை ஒப்புக் கொள்ள முடியுமா? இந்த நிலையிலே நாம் பார்க்க வேண்டும்.

எட்டாம் நூற்ருண்டிலே இறையனுர் அகப்பொருள் தோன்றிற்று. இறையனுர் அகப்பொருள் தோன்றிய போது என்ன சொல்கிருர் — பாண்டியநாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது. புலவர் எல்லாம் வேறு நாடுகளிலே போயிருந்து விட்டு, வற்கடம் கழிந்த பிறகு வாருங்கள் என்று மன்னன் சொன்னுன்! வந்தார்கள். வந்த போது இலக்கணம்வல்லாரைக் கொண்டு வருக என்று சொன்னுன். எழுத்து சொல் யாப்பு கொண்டு வந்தனர். பொருள் இலக்கணம் வல்லார் கிடைக்கவில்லை என்று சொன்னுர்கள். அரசன், சொல்லுகிருன்—எழுத்தும் சொல்லும் யாப்பும் பெறுவது பொருள் இலக்கணத்துக்காக, பொருளிலக்கணம் இல்லையானுல் பயன் இல்லையே என்று கவலைப்பட்டான், அப்பொழுது ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான் என்று உரை சொல்லும். அவர் செய்து கொடுத்த இலக்கணத்துக்குக் களவியல் என்று பெயர் எழுதித், தன்னுடைய பீடத்தின் கீழே வைத்தார். அரசன் எடுத்தான். சந்தோஷப்பட்டான் என்பது வரலாறு. இப்போது கேள்வி? ஆராய்ச்சியால் வந்த கேள்வி! தொல்காப்பியம் என்னவாயிற்று. எட்டாம் நூற்ருண்டிலே இந்த செய்தி நிகழ்ந்தது என்ருல், பொருள் இலக்கணம் இல்லை. அகப்பொருள் ஆலவாய்க்கடவுள் எழுதிக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்ருல், தொல்காப்பியம் எங்கே போயிற்று? என்பது கேள்வி. அது இன்றும் இருக்கிறது. தொல்காப்பியப் பொருளிலக்கணம். அதிலே களவியல் கற்பியல் அகத்திணை புறத்திணை எல்லாம் இருக்கின்றன. பதினோராம் நூற்ருண்டிலே தொல்காப்பியப் பொருள் இலக்கணத்தை இளம்பூரணர் கண்டு பிடித்து உரையெல்லாம் எழுதி நமக்குக் கொடுத்திருக்கிருர். நச்சினுர்க்கினியர் உரை, பேராசிரியர் உரை எல்லாம் நமக்குக் கிடைக்கின்றன. அன்றைக்கு எங்கே போயிற்று என்று கேட்டால், இச் சைனர்களாகிய களப்பிரருடைய பாண்டிய நாட்டு ஆதிக்கம் காரணமாகக் கூண்டிலே அடைபட்டமாதிரி அகப்பொருள் பயின்றவர்கள், படித்தவர்கள் இல்லை. அதனுலேதான் இறையனுர் நூல் செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த இடத்திலே சம்பந்தர் தோன்றினுர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் என்று சுந்தரர் சொல்லுகிருர். சம்பந்தருடைய பெருமை எல்லாம் பண்ணேடு இசை பாடியது.

மனிதனுடைய கலை, எல்லாவற்றிலும் மேலானது. இசை, கடவுள் படைத்தது என்பதை நிலை நாட்டுகிருர். இத்தன்மை எங்கும் எல்லாப் பாடல்களிலும், இசையிலே வல்லவன் என்றுதான் அவர் சொல்கிருர். ஆகவே சம்பந்தர் வாழ்க்கையிலே முக்கியமானது என்னவென்ருல், இசையைத் தூக்கி நிறுத்தியது. புலவர்கள் முத்தமிழ் என்று முழங்குகிருர்கள். இயல்தமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் எங்கே போயிற்று? இயல்தமிழ் ஒன்றுதானே, இன்று வரையில் வளர்ந்து வந்திருக்கிறது. இசைத்தமிழ் இல்லையே? அந்த இசைத் தமிழை மறுபடியும் உயிர்கொடுத்து எடுத்து நிறுத்தியவர் ஞானசம்பந்தர். ஆகவே தமிழ் வரலாற்றிலே ஞானசம்பந்தர்க்குரிய இடம்

என்னவென்று கேட்டால், வேதத்தைத் தமிழ் செய்தார். பக்தி வெள்ளத்தைப் பரப்பினர். ஊர்தோறும் சென்று தேவாலயங்களையெல்லாம் பார்க்கும்படி செய்தார். அது எல்லாம் ஒரு நிலை. மற்றொரு முறையிலே அகப்பொருள் இலக்கணத்துக்கு உயிர் கொடுத்தார். இசைத் தமிழை எடுத்து நிறுத்தினர். அப்படி இல்லா விட்டால் இசையில்லை.

இன்று கருநாடக சங்கீதம் என்பது ஞான சம்பந்தர் ஒருவர் இல்லாவிட்டால் உலகத்திலே இல்லை, இந்தியாவிலேயில்லை. அப்பர் சுவாமிகள் பண்பாடியிருக்கிறர். சுந்தரர் பண் பாடி இருக்கிறர். இருந்தாலும் நாம் பண்ணுக் காகத்தான் என்று சொல்பவர் சம்பந்தர் ஒருவரே. இந்தச் சைனர்களோடு செய்த போர் சைவர் மாத்திரம்தான் செய்தது. வைணவர்கள் இந்தப் போரிலே கலந்து கொள்ளவில்லை. இருந்தாலும் தமிழ் வளர்த்தார்கள். அவர் காலத்திலே இந்தச் சண்டைக்கு அவர்கள் துணை வரவில்லை. சைவர்கள் மாத்திரம் சண்டை செய்தார்கள். இது வரலாறு சொல்வது. நான் சொல்லுகின்றதல்ல. ஆகவே இதுதான் ஞானசம்பந்தருக்கு நம்முடைய சைவமரபிலே, இலக்கிய வரலாற்றிலே உள்ள ஒரு ஸ்தானம். இசையைத் தூக்கி நிறுத்தினர். இசைத் தமிழ் இறவாது காப்பாற்றினர். இன்று வரையில் இருக்கிறது. பின்னலே அருணகிரி நாதர் வந்தார். அதன் பிறகு கருநாடக சங்கீத மாக அது உயிர் பெற்றது. இப்படிப்பட்ட ஒரு சிறப்பு அவருக்குரியது என்று அதை மாத்திரம் உங்களுக்கு எடுத்துக்காட்டி இப்போதைக்கு நான் நிறுத்திக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று, நீதிபதி அவர்கள் சொல்லும்போது சொன்னர்கள் எல்லோரும் சேர்ந்து தலைக்கு ஒரு ரூபாய் கொடுத்து ஒரு நிதி திரட்டி வைத்தால் இப்பேர்ப்பட்ட திருவிடைமருதூர் ஆகிய பெரியதலத்திலே ஆண்டு தோறும் இந்தக் கருத்தரங்கம் நடைபெற ஒரு காப்பு நிதியாக அது விளங்கும் என்று. இது திருவிடை மருதூர். இங்கே அது நடத்துவதில் எல்லாவிதப் பொருத்தமும் உண்டு. உங்களுக்கெல்லாம் தெரியும். இங்கே சுவாமி மகாலிங்கம். தமிழ் நாட்டிலே எந்தக் கோயில் சுவாமிக்கும் மகாலிங்கம் என்று பேரில்லை. எல்லாருக்கும் சுவாமி மகாலிங்கம்தான். அந்தப் பொதுப்பெயர். இங்கே சிறப்புப் பெயராக இருக்கிறது. மகாலிங்கம் என்ற பொதுப் பெயரானது இங்கே சுவாமிக்கே சிறப்புப் பெயராக இருக்கிறது.

மகாலிங்கம் என்பது ஆலயத்திலிருக்கின்ற நாம் வழிபடுகின்ற சிவலிங்கமூர்த்தி. மகாலிங்கம் என்றுதான் வழிபடுகின்றேம். ஆனல் இந்தத் தலத்து சுவாமியோ மகாலிங்கம். எல்லாத் தலங்களும் கோயில்தான். ஆனல் கோயில் என்றல் சைவத்திலே சிதம்பரம், வைணவத்திலே ஸ்ரீரங்கம். வைணவத்துக்குப் பெருமாள்கோயில் என்றல் காஞ்சிபுரம். இப்படி சில சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அந்த சம்பிரதாயப்படி இங்கே சுவாமி மகாலிங்கம். இதைச் சுற்றிப் பரிவாரக்கோயில்களாக எத்தனையோ கோயில்கள் இருக்கின்றன. இங்கே இன்னும் ஒரு சிறப்பு. தல விருக்ஷம் மருதமரம். இந்த மருதமரம் மரங்களிலே மிகவும் பெரிய மரம். சுவாமி எப்படி மகாலிங்கம் என்ற பெயரைப் பெற்றிருக்கின்றரோ, அந்த மாதிரி தல விருக்ஷமாகிய மருதம் மரங்களிலே பெரியது. ஆலமரத்தையும் விடப் பெரியது, அரசமரத்தையும் விடப் பெரியது. அத்தகைய பெருமை உடைய தலம் இந்த திருவிடை மருதூர்.

இந்தத் திருவிடை மருதூரைப் பற்றி இருக்கின்ற நூல்களையும், பாடல்களையும் சொன்னல் நாள் காணது. தனிமுடி கவித்து ஆளும் அரசிலும் இனியன், தன்னடைந்தார்க்கு இடைமருதனே, கனியினும் கட்டி பட்டகரும்பிலும் பனிமலர்க்குழற் பாவை நல்லாரிலும் இனியன் தன்டைந்தார்க்கு இடை மருதனே, என்றெல்லாம் பாடுகிறர் அப்பர் சுவாமிகள். பட்டினத்தார், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்றொரு நூல் பாடியிருக்கிறர். அந்த ஒரு நூலுக்காகவே ஒரு கருத்தரங்கை நடத்த முடியும். அவ்வளவு பொருள் உடையது அது. அந்தப் பாடல்களைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். ஆகவே திருவிடைமருதூரைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வதற்கு எல்லையில்லாத தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. இந்த இடத்திலே இப்படி கருத்தரங்கம் நடப்பது எல்லா விதத்திலும் பொருத்தம். ஆகவே இங்கே அந்தக் கருத்தரங்கு நிரந்தரமாக ஆண்டு தோறும் நடைபெறுவதற்கு எல்லோரும் உதவி செய்யவேண்டும். சிறப்பாக இந்தக் கோயிலில் பணவசதியிருக்குமானல், மகாலிங்கத்திடமே பணவசதியிருக்குமானல், எல்லோரும் சேர்ந்து நிலைத்த ஒரு நிதியாக ஏற்படுத்தி வைத்து விட்டால், ஒவ்வொரு ஆண்டும் பணம் தேடுகின்ற வேலையில்லை. அல்லல்படுகின்ற வேலையில்லை. எப்படி கோயில்களிலே பிரம்மோற்சவம் நடக்கின்றதோ, மாத உற்சவங்கள் நடக்கின்றனவோ, அதேமாதிரி இதுவும் ஒரு திட்டமாக உரிய காலத்திலே நடைபெற்றுக் கொண்டு வரும். அப்படிப்பட்ட ஒரு நிதியை வைக்க வேண்டும் என்று, இங்கே இந்தக் கருத்தரங்கிலே எல்லாரும் கூடி ஒரு தீர்மானம் செய்து, உதவி செய்வதோடு கூட, சந்நிதானத்தையும் கேட்டுக் கொண்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி, எல்லோரும் செய்ய வேண்டும் என்பது என் வேண்டுகோள். ★

பெரியபுராண நுணுக்கங்கள்

மறைத்திரு. மாணிக்கவாசக தேசிக சுவாமிகள்,
சிவராஜயோக மடம், மேலையூர், பூம்புகார்.

பெரியபுராணம் ஒரு சிறந்த உலகப் பொது நூலாகும். அதனை நமக்கு வழங்கிய சேக்கிழார் பெருமான் அமைச்சராகவும் அருளாளராகவும் ஆழ்ந்த உலகியல் அனுபவம் வாய்ந்தவராகவும் விளங்கியவர். இரண்டாம் குலோத்துங்கனைச் சிவநெறியில் அழுந்தி ஈடுபடும்படி செய்தவர். கவிதைச் சிறப்பைவிடக் கருத்து நுணுக்கத்திற்கே முதலிடம் கொடுத்துப் பாடப் பெற்றது பெரியபுராணம். மேலெழுந்தவாரியாக நோக்குவார்க்குப் பாடல்கள் வெண்மைப் பாடல்களாகத் தோன்றும். ஆனால் ஆழ்ந்து சிந்திப்பவர்க்கு அப்பாடல்களில் விழுமிய பொருளமைதி இருப்பது புலனாகும். பக்தி உணர்வும் அருளுணர்வும் படிக்கின்றவர்கள் மனத்தில் மேற்படும்படியும் ஏனைய உணர்வுகள் தலைகாட்டாதவாறும் மிகவும் விழிப்போடு எழுதப்பெற்ற நூல் அஃதொன்றேயாகும்.

திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் சேக்கிழார் பெருமானும் தீயனவற்றை அடக்கமாகக் குறிப்பிட்டும், நல்லனவற்றைப் பெருக்கிக் காட்டியும் நூல் செய்த சான்றோர்களாவர். உலகத்திலேயே ஈடுஎடுப்பற்ற பாரகாவியம் செய்த கவிஞர்வேந்தனாகிய கம்பனும்கூட, சில இடங்களில் பொருந்தாத கவிதைநெறியைக் கையாண்டிருக்கிறார். ஆனால் சிலம்புநூலும் திருக்குறளும் பெரிய புராணமும் மாசற்ற மணி விளக்குகளாகத் தமிழ்த்தாயின் முடி மணிகளாக விளங்குவன. அவற்றுள் பெரியபுராணத்துட் காணப்படும் நுணுக்கங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

மனுவேந்தன் :

மக்களுக்கும் மன்னனுக்கும் உள்ள உறவு முறை காலம்தோறும் மாறிமாறி வந்திருக்கிறது. சங்க காலத்தில் மன்னன் மக்கட்கு உயிராகக் கருதப்பெற்றான். ஒருவன் தன் உடம்பைப் பாதுகாப்பதுபோல அரசன் தன் குடிமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது சங்ககாலக் கருத்தாக இருந்திருக்கிறது. கம்பன் இக்கருத்தோடு முரண்பட்டு மக்கள் உயிராகவும் மன்னவன் உடம்பாகவும் இருந்து தனது நாடாட்சியை மன்னவன் புரியவேண்டும் என்று கூறுகிறான். சேக்கிழார் இன்னும் ஒருபடி மேல் போய் அரசனது நிலையைத் தெளிவுபடுத்துகிறார்.

''மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியு மாம்பெரும் காவலான்''

என்பது சேக்கிழார் திருவாக்கு. மன்னவன் மக்களின் உயிர்க்குயிராக விளங்குவதோடல்லாமல் உயிர்க்குக் கண்ணாகவும் இருந்து உயிர்களின் துன்பத்தை உணரவேண்டும். அப்படி உணர்ந்தால்தான் உயிர்களின் துன்பம் துடைத்தல் விரைந்து நிகழும். ஆகவே மன்னவன் நிலையைச் சேக்கிழார் மிகவும் அனுபவத்தோடு குறிப்பிட்டுள்ளார் என்பது இங்கே நாம் உணரவேண்டியது.

வரலாறு :

மனுவேந்தனுடைய மைந்தன் வீதிவிடங்கன் திருவாரூர்ப் புற்றிடம்கொண்ட பெருமானை வழிபடத் தேரேறி அரசுலாம் தெருவழியே சென்றான். அப்போது ஒருவரும் அறியாத வகையில் ஓர் பசுங்கன்று தேர்க்காலில் அறைபட்டு இறந்தது. அக்கன்றின் தாய்ப்பசு அதனைக் கண்டு கதறிச் சென்று அரண்மனை வாயிலிற் கட்டியிருந்த மணிநாவினைத் தன் கொம்பாலசைத்தது. மனுவேந்தன் மணி யோசையைக் கேட்டு விரைந்தோடி அரண்மனை வாயிலுக்கு வந்து பார்த்தான். ஓர் பசு கண்ணீரோடு அலறிக் கொண்டிருந்தது. இது நிகழ்ச்சி.

இந்த நிகழ்ச்சியை முதன்முதலில் அரசகுமாரன் சந்திக்கிறான். பின்னர் அமைச்சர்கள் கேட்டறிகிறார்கள். அரசன் அமைச்சர்கள் மூலம் நிகழ்ந்ததை அறிகிறான். அரசகுமாரன் இளைஞனாதலின் கன்றினையும் தாய்ப்பசுவையும் பார்த்து மிகவும் வருந்தித் தனது தந்தைக்குப் பழிதேடியவனாகத் தன்னைக் கருதி மனம் நொந்து கொள்கிறான். மந்திரிகள் அரசன் மிகவும் குரூரமான நீதிமானாதலால் அவனுடைய நீதிக் கடமையிலிருந்து அரசகுமாரனைக் காப்பாற்றுவது எப்படி என்று சிந்திக்கிறார்கள். மன்னவன் மனுவேந்தன் இந்நிகழ்ச்சியை எவ்வாறு ஏற்றுக்கொண்டான் என்பதில்தான் அவனது தனிச்சிறப்புப் புலனாகின்றது. ஆசிரியர் சேக்கிழார் திருவாக்கையே இங்கு நாம் எடுத்துக் கொள்வோம்.

"அவ்வுரை கேட்ட வேந்தன்
ஆவுறு துயரம் எல்லாம்
வெவ்விடம் தலைக்கொண் டாற்போல்
வேதனை அகத்து மிக்கு"

என்ற பகுதியில், இந்நிகழ்ச்சியைக் கேட்ட மாத்திரத்தில் ஆவின் துயரம்தான் மன்னவன் உணர்வில் புலனாயிற்று. நஞ்சு தலைக்கேறியது போல ஆவின் துயரம் தனது உள்ளத்தைக் குடைந்து அலைப்ப, அகத்தே வேதனைமிக்க வனாகி இந்த ஆவின் துயரம் நீங்குவது எப்படி என்றே கவல்கின்றான்.

"வளவநின் புதல்வ னாங்கோர்
மணிநெடுந் தேர்மே லேறி
அளவில்தேரத் தானை சூழ
அரசுலாம் தெருவிற் போங்கால்"

என்ற மந்திரிகள் கூற்று நீதிமன்றத்தில் குற்றம் செய்தவனைத் தப்பித்து விடுவிக்கச் சொல்லும் வாதத் திறனோடு அமைந்திருக்கின்றது. வீதி விடங்கன் இக்கொலைக் குற்றத்திற்குரியவ னல்லன். அவ்வாறு அவனைக் கருதாமல் அவனுக்கும் இக்கொலைக் குற்றம் சாரும் என்று கருதினால் கொலைப் பாவம் நீங்குதற்குரிய கழு வாய்ச் செயல்களை வேதநெறிப்படி செய்யலாம். இதுவே அறநெறி என்று மந்திரிகள் மன்றாடு கிறார்கள். மனுவேந்தன் இவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

அறநெறியின் செவ்விய உண்மைத்திறம்:

மேலெழுந்த வாரியாக எல்லோரும் பேசி வருவது புறத்தோற்றமான அறநெறியாகும். திருவள்ளுவரும் சேக்கிழாரும் குறிப்பிடுவது அகஉணர்வை ஒட்டிய அறநெறியாகும். "உள்ளத்தால் உள்ளலும் தீதே" எனவும், "உள்ளத்தாற் பொய்யா தொழுகின்" எனவும் திருவள்ளுவர் கூறுவது காண்க. பெரிய புராணத்துள்ளும் திருநீலகண்டர்-அமர்நீதியார் வரலாறு நமக்குப் புதிய உண்மையைத் தெரி விக்கின்றது. திருவோடு கொடுத்த தொண்டர் திருவோடோ அல்லது அதன் பெறுமானமோ பெறுவதற்குரியவரே தவிர, தன் மனம்போன படி திருநீலகண்டரை ஆட்டிப்படைக்க உரிய வரல்லர். அமர்நீதியாரிடம் கோவணம் கொடுத்தவரும் அவ்வாறே! இங்கே திருநீல கண்டரும் அமர்நீதியாரும் நினைப்பது வேறு. வந்த தொண்டர் மனத்தை மகிழ்விக்க வேண்டும் என்பதே குறிக்கோளாகத் தங்களையே பணயமாக வைக்கிறார்கள். அது போலவே, மனுவேந்தனும் ஆவுறு துயரம் தீர்வது எப்படி என்பதே, கருத்தாக வேதனைப் படுகிறான். வீதிவிடங்கனை உயிர்பிழைக்கச் செய்வது எப்படி என்று மந்திரிகள் நினைப்பது அறநெறி. ஆவின் துயரம் நீங்குவது எப்படி என்று சிந்திப்பது அறநெறியின் செவ்விய உண்மைத்திறம்.

இந்த ஆவின் துயரம் நீக்கமாட்டாதேன், நானும் இதைப்போல் துன்புறுவதே கடன் எனத்துணிந்து, தனது திருமகனைத் தேர்க் காலில் ஊர்க எனப் பணிக்கிறான். மந்திரி அதனைச் செய்யவும்மனமில்லாமல், மறுக்கவும் துணிவில்லாமல் தன்னையே மாய்த்துக் கொள்கிறான். அதன் பின்னர் மனுவேந்தன் தானே,

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென்
பதும்உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று
தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறஊர்ந்தான்"

என ஆசிரியர் சேக்கிழார் பெருமான் முடித்துக் காட்டுகிறார். இவ்வாறு தன் கடமையை மிகவும் குரூரமாக நிறைவேற்றிய மனுவேந்தன் செயலைக்கண்டு, அதனைத் தாங்காத இறை வனருள் முன்னின்று, அரசகுமாரனையும் ஆவின் கன்றையும் மந்திரியையும் உயிர்ப்பித்தது. உலகமாந்தர் திருவருளின் பெருமையைக் கண்ணாரக் கண்டு போற்றினர். "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ" என அழகாக மனுவேந்தன் வரலாற்றைச் சேக் கிழார் பெருமான் முடித்துக் காட்டுகிறார்.

சைவசித்தாந்த தத்துவ உண்மைகளைத் தெளிவுபடுத்த வந்த உமாபதிசிவம், இவ்வர லாற்றின் மூலம் வினைபற்றிய தத்துவ உண்மை ஒன்றனை நமக்கு அறிவுறுத்துகிறார். நல்வினை யோ தீவினையோ செய்த உடனே அனுபவித் தால், பயன் வினையின் அளவுக்கு அளவாக இருக்கும். காலங் கடந்து பின்னர் அனுபவித் தால் வினை வளர்ந்து, வினையின் பயனும் வளர்ந்து பெருகும். அதாவது நல்வினையின் காலம் செல்லச் செல்ல, அதன் பயனாகிய இன்பம் வளர்ந்து பெருகும். அதுபோலவே தீவினை யாயின், காலம்செல்லச் செல்ல அதன் பயனாகிய துன்பமும் வளர்ந்து பெருகும்.

இந்த உண்மையை மனுவேந்தன் உணர்ந் திருந்தான். தன்மைந்தன் அறிந்தோ அறியா மலோ செய்த கொலைக்குற்றத்தினின்று அவனை இப்போதே தப்புவித்து விட வேண்டும். காலம் தாழ்த்தால் வினைவளர்ந்து தன்மகன் அனுபவிக்க வேண்டிய துன்பமும் வளர்ந்து பெருகிவிடும். ஆதலால் இவனைத் தேர்க்காலி லிட்டுவிட்டால் ஒரு பிறவித்துன்பத்தோடு விடு பட்டுவிடுவான் என்று கருதினான் மனுவேந்தன் என்பது, உமாபதிசிவம் கூறும் கருத்து. அவரு டைய அழகியதொரு வாக்கு பின்வருமாறு:

"ஓடிய தேரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம்இன்றே நீங்குமென
நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே
வழக்காக"

என்பது போற்றிப்பஃறொடை. அடுத்தபடி யாக, தடுத்தாட்கொண்ட புராண நுணுக்கங் களைச் சிந்திப்போம். ★

சிவலிங்கம்

சிவயோகி திரு. மா. இரத்தின சபாபதி பிள்ளை அவர்கள்,
திருவாரூர்.

தெய்வ வழிபாடு :

தெய்வ வழிபாடு மூன்று விதமாக உள்ளது. அது பரம், அபரம், பராபரம் எனப்படும். பரம் என்பது தெய்வம் வேறு, தான்வேறு என்று எண்ணுமல் தனது உயிரையே தேவாலயமாக அமைத்தல். இது மேலான ஞான பூசையாகும். அபரம் என்பது புறத்தே தெய்வத்தை வழிபடும் நெறியாகும். இது சரியை பற்றிய நெறியாகும். பராபரம் என்பது புறத்தும் அகத்தும் வழிபடும் நெறியாகும். இந் நெறி தெய்வத்தைத் தன்னில் இருக்கும்படி செய்தலும், போகும்படி செய்தலுமாகிய பாவனை அடிப்படையில் அமைந்தது. ஆன்மாக்களின் தகுதி பலவாருய் உள்ளபடியால் தகுதிகாரணமாக மிக எளிய முறையிலாவது இறைவனை வழிபடவேண்டும் என்ற எண்ணம் உண்டாதற்காகவே பெரியோர்கள் மக்களுக்கு நெறிகளை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

சதாசிவர் :

சிவம் என்பதும் பரப்பிரம்மம் என்பதும் ஒரே பொருளுடையவை. சிவத்தின் சொரூபம்வேறு. சிவத்தின் தடத்தம்வேறு. சிவத்தின் தடத்தம் சதாசிவமாகும். பரார்த்த பூசையிலும் ஆன்மார்த்த பூசையிலும் உபயோகிக்கப்படுவது சதாசிவர்க்கு உரிய பஞ்சப்பிரம்ம மந்திரமேயாகும், சதாசிவரைச் சிவம் என்பது உபசார வழக்கம். அரசாங்கத்தில் அடிதொட்டுமுடிவரையில் அரசாங்க ஊழியர்களேயாயினும் அந்தஸ்து வேறு வேருக உள்ளது. இதை அறியவேண்டியது முதல் நிலையாகும். சதாசிவர் ஜீவர்களுக்குத் தலைவர். அவரே மந்திரங்களினுல் வழிபடுவோர்க்குப் பலனளிப்பவரும் ஆவர். அவர் பிரமனுதி நால்வரையும் வியூகராகக்கொண்டு பஞ்சகிருத்தியம் செய்பவராவர். இந்த ஐவர்களும் மனிதவர்க்கத்திலோ, தேவவர்க்கத்திலோ பிறந்து மலத்தோடு கூடி அவரவர் பரிபாகத்தின்படி அதிகாரம் வகிப்பதாகத் திருமூலர் கூறியுள்ளார்.

சிருஷ்டியாதி கிருத்தியம் செய்ய மன வேண்டும். மனமற்ற சிவம் அதைச் செய்யாது. சதாசிவராதியர் தொழில் செய்ய மனமும், அதற்கேற்ற ஞானமும் சக்தியும் பொருந்தியுள்ளவர்கள். அதனுல் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன் ஆகிய நால்வர்களை உருவ மூர்த்திகளாகக் கொண்டவர் என்றும் ஆகமங்கள் கூறியுள்ளன.

''பதியெனவே சொலற்குரிய பரமன் மந்திரான்மா; பஞ்சமந்திரதேகி; மந்திரங்கட்கெல் அதிபதியைந் தொழில்புரிவோன்; பதவருணுதிகளாலருச்சனை பண்ணப்படுவோன்; சட புவனங்களினுக்கு உதவி யாதாரங்காமியங்களெல்லாங் கொடுப்போன்; யோக பீடத்திருப்போன்; ஞான கன்மமொப்பான்; அதிதூல சூக்குமமிச்சிரனுமாயிருப்பான் மனேன்மணி அருள் முதல்வன் சதாசிவந்தானே''

(சருவ ஞானேத்திராகமம்

இதன்மேல் சிவத்தை விளக்குகிறேன்.

பரமசிவம் :

''பரமசிவன் சதாசிவனென் பதிக்கு மேலோன்; பகர் நிரஞ்சனன் நிராமயனிராதாரன்; தருவருண ரூபமிலான் சருவக்ஞன் சாந்தன் சருவ பரிபூரணன் சர்வான்மாவாயிருப்பான்; அருள் சர்வதோமுகன் அசிந்தியன் அறிவுக்கெட்டான் அதி சூக்குமன் நிராலம்பனென்று) முள்ளான் ஒருவன் சத்தியினன் வியாபகனப்பிரமேயன் உவமையிலான்; திலதையிலத் துட்புறம் பொத்துறைவோன்.

(சருவ ஞானேத்திர ஆகமம்'

இதன் பொருள் :—

1. பரமசிவன் சதாசிவன் என்கிற பதிக்கு மேலானவர்.

   (இருவரும் வேறு வேறு என்பதை அறிக)

இவரே பரப்பிரம்மம், சிவம் என்ற பெயரி னுக்கு உரியவர்.

2. பகர் நிரஞ்சனன்—சொல்லப்படும் பாசங் களில்லாதவன்.

3. நிராமயன்—பிறப் பிறப்பு என்னும் நோயில்லாதவன்.

4. நிராதாரன்—தனக்கோர் ஆதாரமில்லா தவன்.

5. தருவருண ரூபமில்லாதவன்—மாயை தருகின்ற வடிவமும் நாமமுமில்லாதவன்

6. சர்வக்ஞன்—எல்லாம் அறிபவன்.

7. சாந்தன்—விருப்பு வெறுப்பு என்னும் விகாரமில்லாதவன்.

8. சருவபரிபூரணன்—எங்கும் நிறைந்திருப் பவன்.

9. சருவான்மாவா யிருப்பவன்—சமஷ்டி ஆன்ம நிலையே சிவநிலையாகும்.

10. சர்வதோ அருள்முகன்—எல்லா உயிர் களிடத்தும் அருள் மயமாய் விளங்கு பவன்.

11. அசிந்தியன்—சிந்தனைக்கு அதீத மானவன்.

12. அறிவுக் கெட்டான்—ஆன்மாவின் ஆராய்ச்சி அறிவினல் அறியமுடியா தவன்.

13. அதிசூக்குமன்—மேலான சித்து ரூபன்.

14. நிராலம்பன்—தனக்கென ஒரு பற்றுக் கோடுமில்லாதவன்.

15. என்றுமுள்ளான்—அழிவில்லாமல் மாறு பாடடையாமல் என்றும் உள்ளவன்.

16. ஒருவன்—ஒப்பற்றவன்.

17. சத்தியினன்—அளவிலாற்றலுடையவன்

18. வியாபகன்—ஜீவர்களிடம் உள்ள பாசங் களிலும், ஆன்மாவிலும் கலந்து நிற் பவன்—அதாவது ஆன்மாவின் தத்து வங்களெல்லாம் சிவத்தில் வியாப்பியம் எனப் பொருள்.

19. அப்பிரமேயன்—எவ்விதமான பிரமா ணங்களினுலும் அறியப்படாதவன்

20. உவமையிலன்—உவமைகளை வைத்து அறியப்படாதவன்

21. திலதயிலத்து ஒத்து உட்புறம்பு உறை வோன்—எள்ளினுள் எண்ணெய்போல் அசையும் பொருள் அசையாப்பொருள் யாவற்றிலும் நீக்கமின்றி நிறைந்து உள்ளும் புறம்புமாக விளங்குபவன்.

148703

பிரணவயோகம் :

இத்தகைய ஞானத்தை அடைய மேலோர் கண்ட நெறி பிரணவயோகமாகும். கிரியை வழியில் நிற்போர் பிரணவத்தை உபாசனை செய்யும் நெறியைப் பிராசாத நெறி என்பர். அதில் மூலாதாரத்திலிருந்து அக்கினியைச் சிரசில் கொண்டு சேர்க்க வழி கண்டுள்ளனர். இதுவும் பலன் தருவதேயாகும். எனினும் ஞானயோகிகள் தங்கள் பார்வையாலேயே மூலாதார அக்கினியை மேலெழுப்ப வழி கண் டுள்ளனர். “நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே” (சிவபுராணம்—திருவாசகம்)

இதனுல் சிரசில் ஒளியையும் ஒலியையும் பெறலாம். இதுவே பிரணவத்தின் சொரூபம் ஆகும். அதன் தடத்தமே அ-உ-ம வாகும். இந்நெறி பதஞ்சலி கூறும் ராஜயோகமுமன்று, ஹடயோகப் பிரதீபிகை கூறும் நெறியுமன்று. திருமூலர் மூன்ருந்தந்திரத்தில் கூறிய அட்டாங் கயோகமுமன்று. இந்த உண்மையை அறிந்த பிறகு தான் திருமூலர் கூறும் சிவலிங்கத்தைப் பற்றிய உண்மைவிளங்கும்.

சிவலிங்கம் :

திருமந்திரத்தில் அண்டலிங்கம், பிண்ட லிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞான லிங்கம், சிவலிங்கம் என ஆறு லிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. சரியை கிரியை பற்றிய வர்க்கு அண்ட லிங்கம், சதாசிவ லிங்கம் விளக் கப்பட்டுள்ளன. பிண்டலிங்கம் யோகிகளுக்குக் கூறப்பட்டுள்ளது. ஆத்ம லிங்கம், ஞான லிங்கம், சிவலிங்கம் ஞானயோகத்திற்குக் கூறப்பட்டுள்ளன. புறத்தே காணப்படும் லிங் கத்தில் அகார உகாரம், மகாரம் உள்ளது. லிங்கத்தின் உள்ளும் புறமுமாகப் பிரணவத்தில் உள்ள விந்து நாதங்கள் வியாபித்துள்ளன. மனிதன் தோளுக்கு மேலுள்ள சிரசு எவ்விதம் உள்ளதோ, அதுபோல் லிங்கத்தின் பாணம் உள்ளது. பூத வெளியாகிய ஆகாயத்தை லிங்கத்தின் பாணத்தின் ஊடுருவி உயர்ந் துள்ளது என்பது இந்த யூகத்தால் புலனுகும். ஆனுல் நிலை கீழ் வரையில் வியாபித்தும் உள்ளது என்பதை லிங்கத்தின் மூன்று உறுப்பு களையும் இணைத்துக் காட்டியுள்ளார்.

இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்ட நிறையும் மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே

(திருமந்திரம்-1753)

மானிடரின் உடல் பஞ்சபூதக்கூருகவும், சூரிய சந்திர, ஆத்ம ஒளியாகவும் அமைந்துள்ளது. இவ்விதமான எட்டு நிலைகளும் பிரணவத்தில் உள்ளது.

தரணி சலங்கனல் கால் தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே

(திருமந்திரம்-859)

சுவயம்புலிங்கம்:

அகர உகரங்களைச் சந்திரன் என்றும் சூரியன் என்றும் அழைப்பர். இவை உடலில் நாடியாக இடாபிங்கலை என்று பெயர்பெறும். இவைகளைச் சந்திர சூரிய ஒளிகளாகக்கண்களில் உள்ளனவாக யோகிகள்கண்டு அவைகளைத் தகுந்த முறையில் சேர்ப்பதில் உடலில் இயல்பாக உள்ள ஒரு ஜோதியை அறிந்தனர். இந்தஜோதி பூமிமுதல் அண்டம் முடிய வியாபித்து எல்லாப் பொருள்களையும் ஊடுருவும் ஆற்றல் கொண்டது. இதற்குச் சுவயம்புலிங்கம் என்றுபெயர். பிரணவத்தின் சொரூபம் விந்துநாதங்களாகும். இவைகளை அறிந்து அவைகளில் லயிப்பதில் நடனுனந்தம் நாதாந்தம் அமையும். ஓங்காரத்தின் ஆளுகை சதாசிவரது ஆகும். ஓங்காரத்திற்கு அப்பாற்பட்டதே ஆன்மாவும் சிவமும் ஆகும். நாதத்திற்கு அதிபர் சதாசிவர். நாதாந்தத்திற்கு மேல் உள்ள நிலைகள் சிவத்தினதும் சத்தியினது மாகும்.

ஆத்மலிங்கம்:

இந்தக் கருத்துக்கள் மனத்தில் பதிந்தால் ஆத்மலிங்கம் விளங்கும். ஆத்மா பிரணவ சொரூபம். பிரணவத்தின் உறுப்பான அகரம் அன்பினுல் வளர்வது. உகரம் அறிவினுல் வளர்வது. அன்புநெறி துன்பமில்லாததாய் உள்ளது. அறிவுநெறி அதன் தன்மைக்கேற்ப வளர்ச்சியடைந்தாலும் வெப்பத்தை அளிப்பதாகும். இறைவனிடம் இரு ஒளிகளும் இருப்பினும் சந்திரனையே விதந்து கூறப்படுகிறதின் காரணம் வெப்பமற்ற குளிர்ந்த கிரணங்களே ஆகும். இந்த சந்திரயோகத்தையே திருவாசகத்தில் ''சந்திர தீபத்துச் சாத்திரனுகி'' என்ருர். சந்திரயோகம் என்று ஒரு தலைப்புக்கொடுத்து மூன்ருந் தந்திரத்தினிறுதியில திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. வைராக்கியத்தில் அறிவாராய்ச்சியினுல் அடையப்படும் சூரிய நெறியும் இந்நெறிக்குள் அடங்கிவிடும்.

குண்டலினி சத்தி:

பேசப்படும் சகல எழுத்தோசைகளிலும் சம்புடமாய்ச் சேர்ந்த நிலை அங்காத்தலிலும் வாய்விரிந்துள்ளதிலும் உதடுகுவிவதிலும் முடிவுறும். எண்ணங்கள் கருத்தாக உள்ளபோது வைகரிவாக்காக அமையாமல் சூக்குமமான நாதத்தைச்சிரசில் உண்டாக்கும். அன்பு உலகமயமானபோது அதன் பெயரே பாசமாகி ஜீவனைப் பந்திக்கின்றது. அன்பு அகண்டமான சிவத்தையோ, சத்தியையோ தனது ஆன்மாவையோ பற்றி நின்ருல் கீழான பாசமயமான காமம் கெட்டு அழிந்துவிடும். இந்தநிலை மாற்றமடைந்தால் சிரசின்மேல் விந்துமண்டலம் நாதமண்டலம் விரிவுறும்.

எண்ணமற்ற நிலை அமையும்போது ஜீவனின் கீழிழிப்பு நிலைமாறி மேலே உயர்ந்து செல்லும் ஆற்றலையடைகிறது. இவ்வித இருசத்திகளையும் கீழ்முகங்கொண்டு தேக ஆற்றலைக் காப்பாற்றும்போது குண்டலினி சக்தியென்றும் தேகத்தைக் கடந்து மேலே செல்லுவதைச்சித்த சத்தி என்றும் பெயர் கூறுகின்றனர். இரு சத்திகளாகக் கூறினும் அவைகள் பலவேறு சக்திகளாய் இடம் பெற்றுள்ளன. இந்த சக்திகளை மாற்றி அமைப்பதே ஞானமாகும். இவ்விதம் மாற்றி அமைத்தால் யாவற்றையும் அறியும் ஞானக்கண் (ஆத்மாவின் அறிவு) விளங்கும். சகல உருவமும் சத்தியாகும். சகல அறிவும் சிவமாகும்.

ஞானயோகம் :

இம்மந்திரக் கருத்துக்களை அறிவதில் ஞானயோகம் உள்ளது. உலகநிலைக்கு உள்ள இறைநிலைக்குச் சமஷ்டிநிலை என்றும், தனிமனிதன் நிலைக்கு வியஷ்டிநிலை என்றும் பெயர். உலகநிலையில் வழங்கப்படும் மூர்த்தங்களின் பெயர்களையே தனிமனிதன் பஞ்சபூத நிலைக்கும் அந்தக்கரண நிலைக்கும் பெயர்களாக வைத்துள்ளனர்.

உடலின் கிரியைக்கும் உடலின் அறிவுக்கும் அதிபராக உள்ளவர் சதாசிவர் ஆவர். அவரது சக்தி மனோன்மணியாகும். தேகம் தானன்று. தேகியே தான் என்னும் திட ஞானம் உதித்து ஆகாய மயனுகத் தன்னைக்காணும் பேறு பெற்றபோது சிறிது சிறிதாகத் தேகம் பற்றிய அறிவு குறைந்து ஆகாயமயமான தன் மாத்திரை அறிவுகளை உடலன்னியிலே அறியும் திறமை கிட்டும். சத்தியும் சிவமும் ஞானமய மானவைகள். அவை எவ்வளவுக்கு ஞானம் சூக்கும நிலைமையை அடைகிறதோ அதற்கேற்பச் சத்தியும் மாற்றத்தை அடைகிறது. இதன் காரணமாக மனிதனின் உடலைச் சூழ உள்ள ஆகாயக் கூறு முன்னர் இருளாக இருந்தது, ஒளியாக மாறியும் அவ்வாகாய அணுக்களின் உரசுதலில் ஒருவித நாதத்தையும் அறிவில் உணரலாம். இவ்வொளி அகக் கண்ணுக்குப் (அறிவுக்கு) புலப்படக்கூடியது. அவ்விதமே அகத்தில் உள்ள செவி அறிவில் இந்த நாதம் கேட்கும் உடலின் கருவியின்றிக் காணப்படுவதால், கேட்கப்படுவதால், இன்பம் அனுபவிக்கப்படுவதால், பஞ்சபூத நிலையில் தேயு வாயு, ஆகாயம் என்ற நுண்பூதங்களாகிய பிருதிவிதத்துவமும் அப்புதத்துவமும் பூமியை நோக்கிப்பாயும் ஆற்றலை இழந்து விடுகின்றன. அக்கினிக்குச் சூடும் ஒளியும் இருதன்மைகள் உள. வெப்பம் கீழ்நிலை பற்றியது. ஒளி மேல் நிலைபற்றியது. வெப்பமற்ற ஒளி என்ற போது, அது தண்ணொளியாகி மனிதனின் சாந்த குணத்தை விருத்தி செய்வதாகிறது. இந்த உண்மையை உலகினர் அறிய நமசிவாய என்ற இறைவனது நிற்கும் நிலையை சிவாயநம எனக் கொண்டு அறிய ஞானிகள் வற்புறுத்தினர். நமசிவாய என்பதில் அக்கினி மண்டலம் உள்ள உடல் அடிப்படையில் நிற்கும் நிலையுள்ளது அவன் எவ்விதம் ஆகாய வண்ணனே, அவ்விதமே தேகத்தையுடையவனும் மாறினலன்றி அவனுடன் பொருந்துதல் இயலாத காரியம். இந்த அடிப்படையில் ஞானயோகம் உள்ளது. அதைச் சைவர்களும் சாக்தர்களும் அறிந்து சாமானியர் அறிவில் புலப்படாதவாறு எழுத்துக்களை அமைத்து மந்திர யோகம் கண்டனர். மந்திரமல்லாத பிரணவயோகத்தை அறிய மந்திரங்களைக் கண்டு அதன் திறவுகோலைப் பக்குவம் பெற்றபிறகு குருமார் உணர்த்தினர். தகுதியில்லாத குருமார்களால் மந்திரயோகத்தின் மதிப்பு கெட்டது. குல சூடாமணி நிகமம் என்ற நூலில் எம் மந்திரத்தைக் கற்றுக்கொடுத்தாலும் மந்திரங்களுக்கு மூலமான பிரணவத்தைக் கூருதே என்று கூறப்பட்டுள்ளது. திருமூலர் அவ்வாறு குறுகிய எண்ணம் படைக்காமல் பஞ்சாக்கரத்தில் முக்கிய மான 'சி' காரம் எங்கு உள்ளது என்பதைத் தெளிவாகவே கூறி விட்டார்.

திருவைந்தெழுத்து:

தோளுக்குமேல் சிகாரம் நிலை பெற்றுள்ளது என்று சொல்லாமல் இரு தோள்களிலும் சிகரம் நிலை பெற்றுள்ளது என்ருர். அதன் கருத்து நுட்பமானது. தோளுக்குமேல் உள்ளது சந்திர மண்டலமாகும். அங்குள்ள ஒளியைப் பிரகாசப் படுத்து என்பது பொருள். அவ்வொளியைப் பிரகாசப் படுத்திஞல் மூலாதாரத்திலுள்ள அக்கினி மண்டலத்தின் செயலான காமக்குரோதாதிகள் கெட்டு சாந்திகலாமண்டலம் பெருகும். சாந்திகலை வியாபகப்பட்டால் 'ந'-வைக் குறிக்கும் நிவர்த்தி கலையும், 'ம'-வைக் குறிக்கும் பிரதிஷ்டா கலையும் கீழ்ப்படுத்தப்படும் என்று குறிப்பால் உணர்த்தும் முறை சிவாய நம வாகும். இந்த உண்மையை உணர்ந்தால் தோளுக்கு மேலாகவுள்ள அக்கினி குண்டத்தைச் சொலிப்பிக்கமுடியும். அதற்கு உபாயம் வாக்கு ரூபமான தோத்திரம் வாயில் உள்ளதாகும். இந்த இரு நிலைகளாகிய விந்து நாதங்களை அறிந்து மேலே சென்ருல் 'ய' காரமான உயிர் ஜோதியாக வெளிப்படும் என்ருர். இந்தக் குறிப்பை வெளிப்படுத்தும் உபாயத்தைக் காட்ட வல்லவரே குருவாவர். பஞ்சாக்கரம் விஞ்ஞான முறையில் அமைந்தது. இரு கண்களிலும் நெகடிவ் பாசிடிவ் தன்மைகள் உள்ளன. இதை அறிந்து சேர்த்தால் முகத்தின் முன் ஒளியையாரும் காணலாம். இதுவே உண்மைச் சமயம் உணர்த்தும் நெறியாகும்.

எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகும் மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகையிட் டுப்பொன்னுக்குவன் கூட்டையே

(திருமந்திரம்-2709)

இந்தச் சாதனம் தான் பிரணவயோகத்திற்கும் வேண்டும். சாக்த சம்பிரதாய ரகசியமும் இதுவேயாகும். சாக்த மந்திரங்களில் ஹ்ரீம் என்பதை மகாமாயா பீஜம் என்றும் புவனேஸ்வரி ஏகாக்ஷரம் என்றும் கூறுவர். ஆகாய மண்டல ஜோதியில் ஞானத்தினுல் பராசக்தியை அறிந்து வழிபடு என்பது பொருள்.

பிரணவத்தின் சொரூபமும் விந்து நாதமே ஆகும். அதன் நிலை சிரசில் தோன்றும் ஒளி ஒலிகளாகும். இதுவே ஜீவசக்கரமாகும். இதுவே சிதம்பரச்சக்கரம். இங்குக் காணும் ஒளியே பராசக்தியாகும். இங்குள்ள தொனியே கூத்தனது நடனமாகும். (திருமந்திரம் 2812, 16, 17, 18)

சிவமும் சக்தியும்:

சிவமும் சக்தியும் எல்லா உயிர்களிடத்தும் உள்ளன. ஆன்மாவின் அறிவு சிவமாகும். ஆன்மாவின் ஒளி சத்தியாகும். அறிவின் நிலைக்கேற்ப இருளும் ஒளியும் உள்ளன. ஆன்ம அறிவு உலகப்பற்று உள்ளபோது இருளாகவும், உலகை விட்டு நின்றபோது ஒளியாகவும் உள்ளது. உலகைவிட உபாயம் அகண்டமான ஆகாய அறிவுவேண்டும். எந்த ஒரு உலகமய அன்பாக இருந்ததோ அதுவே அகண்ட வியாபகப் பொருளில் அன்புகொண்டபோது அதன் சுருங்கிய நிலை கெட்டுவிடும். இதன் விளக்கம் காமம் கெடும், பாசம் கெடும். அதன் தொடர்பான குரோதாதிகள் கெடும், இவை கெட்டபோது ஆன்மாவின் அண்டகோசத்திலுள்ள இருள் கெடும். இந்த நிலை மாற்றம் அடைய ஞான நெறியில் சிவத்தைச் சிந்தனை செய்வதில் ஞானக்கினி தூண்டப்பட்டு நமசிவாய என்ற சதாசிவர் உருப்பெற்று விடுவர். அது எவ்விதம் உருப்பெறும் என்பதை அறியும் வகையை விளக்கும் மந்திரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (திருமந்திரம் 2700, 701)

பஞ்சாக்கரநிலை:

உயிர் எழுத்துக்கள் பராசத்யாக ஸ்வரரூபமாக உள்ளன. மற்றைய எழுத்துக்கள் அவள் சத்தியாக உள்ளன. இம்முறையில் உடலில் சொற்களின் எழுத்தோசை தொழிற்படுகின்றது. வேதங்களில் கூறப்பட்ட சிவ மந்திரத்தை அறிந்து கொள்வதில் நகாராதி என்ற நமசிவாய உருவம் பெறும்.

அது எவ்விதமென்னில் வாய், கண்டம் இதயம், உந்தி, லிங்கம் பொருந்தி மூலதார முதலாக உள்ள அக்கினி மண்டலம் சுழுமுனை வழியாக மேலே சென்று ஒளியாகப் பொருந்தும். (துண்டம்—நடு நாடி) இதனால் ஞானேந்திரியம் புறத்தே செல்லாது. இது பஞ்சாக்கர நிலையாகும்.

இவ்விதமாக உள்ள சிவத்தின் அகண்ட சொரூபத்தை உணரும் திறம் படைத்தவர்களை விட்டுச் சிவம் எங்கும் அகன்றுபோகமாட்டான் உபாயத்தை அறிய மதி நுட்பம் வேண்டும்.

(திருமந்திரம் 1774)

வரைத்து வலஞ்செய்யு மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மலர் ஏந்தி
உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே

(திருமந்திரம்-1774)

நிரைத்து வருநீர்மலர் என்பது நீரைப் பெருக்கி நிற்கும் சுவாதிஷ்டான சக்கரம் (குறித்தானம்) ஆகும். அதன் தன்மையான கீழ்ச் செலுத்தும் சத்தி மேலுந்து சத்தியாக மாறவேண்டும். அப்படி மாற்றுவது சிவசிந்தனையாலாவதுதான் என்றார். இதைச் சபித்தல் என்று கூறவில்லை என்பதை அறியவும். "உரைத்து அவன் நாமம் உணரவல்லார்" அவனுடைய நாமத்தை நினைத்த உடனே காமவுணர்வு எவ்விதம் கீழ் நோக்குதலைச் செய்யுமோ அவ்விதம் சிவநாமம் சிரசில் உணர்வாக வெளிப்பட்டுவிடும். அப்போது நமசிவாய நிலை உடலில் அமைந்துவிடும். மனிதருக்குக் காமம் எவ்வளவு தூரம் உண்மையோ அவ்வளவு சிவப் பேறு உண்மையே தவிரப் பொய்யன்று.

அதுக்கென் றிருவர் அமர்ந்தசொற் கேட்டும்
பொதுக் கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரும் அன்றே

— (திருமந்திரம்–2950)

சகல சமய முடிவு:

இவ்விதம் வெளிப்பட்ட சிவம் உலகுக்கு உரிய ஏகநாதர் என்பதை அறிந்து அவனைத் தொழ, நான் ஐம்புலன்களையும் வென்று ஏக உருவில் கலந்து இன்புற்று என்னை மறந்து நின்றபோது அவன் எனக்கு அருள் வழங்கினன். அப்போது பிரமன், திருமால், உருத்திரன் மகேசுவரன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், சத்தி, சிவம் என்ற ஒன்பது நிலைகளும் ஒன்ருகத் தூணுகாரச் சோதியாக நிலை பெற்றது.

அவ்விதம் மூலாதாரத்திலிருந்து எழுந்து மேற்செல்லும் செவ்வொளியுடன் பொருந்திச் சிரசின்மேல் உள்ள ஆத்ம ஜோதியினை அறிந்து அதில் நிற்பதையும், அத்துடன் உடலை விட்டுப் பிரிந்து செல்வதையும் உணர்ந்து இந்திரியங்களைச் சயித்தவருக்கு மேலான பரநிலை பொருந்தும். (திருமந்திரம் 1775, 6, 7)

இதுவே சகல சமய முடிவாகும். இந்த உண்மையில் எச்சமய ஞானிகளின் கொள்கைகளும் ஒத்த கருத்தாகப் பொருந்தும். ★

பன்னிரு திருநாமத்தின் தத்துவம்

டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார் M.A., Ph.D.,
தமிழ்ப் பேராசிரியர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

முன்னுரை:

இறைவனின் ஐந்து நிலைகளில் வியூக நிலையிலுள்ள எம்பெருமான் நான்குகினை வியூகங்களாகப் பரிணமித்து இந்த நிலவுலகின் படைப்பு, அளிப்பு, அழிப்பு முதலிய செயல்களைப் புரிந்து வருவான் என்பதையும், இந்த நான்கு நிலைகளிலுள்ள எம்பெருமான்கள் ஒவ்வொருவரும் மும்மூன்று கிளை வியூகங்களாக வடிவங்கள் கொள்வர் என்பதையும் நாம் அறிவோம். இந்தப் பன்னிரு எம்பெருமான்களும் பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரண்டு ஆதித்தியர்களாக நின்று தலைமைக் கடவுளர்களாகத் திகழ்வர். இவர்களைப் போற்றும் முறையில் நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் பன்னிரண்டு பாசுரங்களை அருளியுள்ளார். அப்பன்னிரண்டு பாசுரங்களும் அடங்கிய பதிகம் 'பன்னிரு திருநாமப்பாட்டு' (திருவாய்மொழி 2.7) என்ற பெயரால் போற்றி வழங்கப் பெறுகின்றது.

எம்பெருமான் தம்மோடு (ஆழ்வாரோடு) வந்து கலந்த கலவியில் பிறந்த காதல் தம்முடன் நில்லாது தம்முடன் பரம்பரையாகச் சம்பந்தமுடையவர்கள் அளவும் வெள்ளங்கோத்துப் பெருகினபடியைக் கண்டு 'இஃது இறைவன் என்பக்கல் செய்த பட்சபாத மிகுதியன்றோ?' என்று பேசி இனியராகின்றார் இப்பதிகத்தில். தம்மை ஏற்றுக் கொள்வதற்கு ஈடான திருக்குணங்கள், திருச்செயல்கள் முதலியவற்றை அநுசந்தித்து அவற்றிற்கும் பற்றுக்கோடான பன்னிரண்டு திருப்பெயர்களால் அவனைப் போற்றிப் புகழ்கின்றார். எம்பார் இத்திருவாய்மொழியை அருளிச் செய்யப் புக்கால் "ஸ்ரீ வைஷ்ணவனுனேன் என்கிறார்" என்பராம் என்பது 'ஈடு'. இந்தப் பன்னிரண்டு எம்பெருமான்களுக்கு அறிகுறியாக வைணவர்கள் தம் திருமேனியில் பன்னிரண்டு திருமண்காப்புக்களைத் தரித்துக் கொள்வர். இவர்கள் பன்னிருவரும் சேதனர்களின் திருமேனியைக் காப்பர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. திருமண்காப்பின் பெருமையைப் பின்னர் விளக்குவேன்.

திருநாமங்களின் விளக்கம் :

வேதாந்த தேசிகர் இப்பன்னிரண்டு எம்பெருமான்களின் திருமேனி, நிறம், அவர்கள் அணிந்திருக்கும் ஆயுதங்கள், அவர்கள் தலைவர்களாக வீற்றிருக்கும் திசை, அடியார்களின் திருமேனியில் திருமண்காப்பு வடிவமாகத் திகழும் பகுதிகள் ஆகிய விவரங்களை மிக அழகாக விளக்குவர்.

கேசவன் :

'' கேசவ னுய்நின்று கீழைத்
திசையிலும் நெற்றியிலும்
தேசுடை ஆழிகள் நான்குடன்
செம்பசும் பொன்மலைபோல்
வாசி மிகுந்தெனை மங்காமல்
காக்கும் ''

[தேசு-பேரொளி; வாசி-சிறப்பு; மங்காமல்-கெட்டுப்போகாமல்]

என்ற பாசுரத்தில் (தேசிகப் பிரபந்தம் 280) விளக்கப்பெறுகின்றது. இவன் பொன்னிற வடிவினன்; நான்கு புயங்களிலும் நான்கு திருவாழிகளைத் தரித்துக் கொண்டு சீதேவிப் பிராட்டியுடன் கீழ்த்திசைத் தலைவனாக விளங்கு

வான். இவன் அறிகுறியாக நெற்றியில் திருமாண்காப்பு தரிக்கப்பெறும்.

நாராயணன் :

இவன் நீலமேக நிறத்தினன். நான்கு திருச்சங்குகளுடன் திகழ்பவன். இவன் அம்ருதோத்பவைப் பிராட்டியுடன் மேற்குத் திசைக் காவலனாகத் திகழ்வான். இதனைத் தேசிகர்,

" நாரண னய்நல் வலம்புரி
நாலும் உகந்துஎடுத்தும்
ஊர்அணி மேகம் எனவே
உதரமும் மேற்குநின்று
ஆரண நூல்தந்து அருளால்
அடைக்கலம் கொண்டருளும் ''

[உகந்து-மகிழ்ந்து ; ஊர்-சஞ்சரிக்கும்; உதரம்-வயிறு ; ஆரணம்-வேதம்]

என்று (தே.பி.281) குறிப்பிடுவர். இவன் அறிகுறியாக வயிற்றில் திருமண்காப்பு இடம் பெறும்.

மாதவன் :

மாதவன் ஊர்த்துவ (மேல் நோக்கு) திசைக்கு நாதன்; நான்கு திருப்புயங்களிலும் நான்கு கதைகளுடன் விளங்குவான். இந்திர நீல நிறத்துடன் திகழும் இவன் கமலைப் பிராட்டியுடன் சேவை தருவான். இவன் நிலையை,

'' மாதவ நாமமும் வான்கதை
நான்கும் மணிநிறமும்
ஓதும் முறைப்படி ஏந்தி
உரத்திலும் மேலும்அல்கிப்
போதுஅவல் மாதுடன் புந்தியில்
அன்பால் புகுந்து அளிக்கும் ''

[வான்கதை-வலிய கதை ; மணி-இந்திர ரத்தினம், உரம் மார்பு; மேலும்-மேல் நோக்கு திசையிலும், அல்கி-இருந்து ; புந்தி-மனம்; அளிக்கும்-காக்கும்]

என்ற பாசுரப் பகுதி (தே.பி.282) விளக்குகின்றது. மார்பில் அணியப் பெறும் திருமண் காப்பு இவனைக் குறிக்கும்.

கோவிந்தன் :

கோவிந்தன் என்ற திருப்பெயருடைய எம் பெருமானைப்பற்றி வேதாந்த தேசிகர்,

'' கோவிந்தன் என்றும் குளிர்மதி
ஆகிக் கொடியவரை
ஏவும் தனுக்க ளுடன்தெற்
கிலும்உள் கழுத்து நின்று
மேவும் திருவரு ளால்வினை
தீர்த்துஎனை ஆண்டருளும் ''

[என்றும்-எப்பொழுதும் ; மதி-சந்திரன் தனு-வில்; மேவுர்-பொருந்திய]

என்ற பாசுரப் பகுதியால் நன்கு தெளிவாக்குவர். சந்திரகாந்தி நிறத்தையுடைய இந்த எம்பெருமான் நான்கு திருப்புயங்களிலும் நான்கு விற்களை ஏந்திக்கொண்டு சாதுதேவிப் (சந்திரசோபிநி) பிராட்டியுடன் தெற்குத் திசை நாதனாகத் திகழ்வான். இவன் நினைவாக இடப்பெறும் திருமண்காப்பு உட்கழுத்தினை அணி செய்யும்.

விட்டுணு :

விட்டுணு என்ற திருப்பெயரையுடைய எம்பெருமான் தாமரைப் பூந்தாதின் நிறத்துடன் விளங்குவான். அவனுடைய திருக்கரங்களை நான்கு கலப்பைகள் அணி செய்யும். இவன் வடதிசைக்குத் தலைவன். விட்டுணு பத்தினிப் பிராட்டியுடன் சேவை சாதித்து நிற்பான்.

'' விட்டு வலவயிற் றின்கண்
வடக்கும் விடாதுநின்று
மட்டுஅவிழ் தாமரைத் தாது
நிறங்கொண்ட மேனியனைத்
தொட்ட கலப்பைகள் ஈரிரண்
டாலும் துயர்அறுக்கும் ''

[விட்டு-விஷ்ணு ; மட்டு-தேன் ; தாது-மகரந்தம்; அறுக்கும்-போக்குவான்]

என்ற பாசுரப்பகுதி (தே.பி. 284) இவன் இருப்பை விளக்குகின்றது. இவனைக் குறிப்பதற்கு வயிற்றின் வலப்புறம் திருமண்காப்பு இடப் பெறும்.

மதுசூதனன்:

மதுசூதனனைக் குறிக்கும் பாசுரம் அவன் தாமரை மலர் நிறத்தினன் என்றும், நான்கு உலக்கைகளை நான்கு திருக்கரங்களிலும் ஆயுதங்களாகக் கொண்டவன் என்றும், தென் கிழக்கு நாதன் என்றும் கூறும்.

"மதுசூ தனன்என் வலப்புயம்
தென்கிழக்கு என்றுஇவற்றில்
பதியாய் இருந்துபொன் மாதுஉறை
பங்கய வண்ணனுமாய்
முதுமா வினைகள் அறுக்கும்
முயலங்கள் ஈரிரண்டால்"

[பதி-தலைவன்; பொன்மாது-இலக்குமி; பங்கயம்-தாமரை; முதுமா வினைகள்-அநாதி யான பெரிய கருமங்கள்; முயலம்-முசலம், உலக்கை; அறுக்கும்-ஒழிப்பான்]

என்ற பாசுரப் பகுதி (தே.பி. 285) இவன் நிலையைப் புலனாக்கும். இவன் வைணவிப் பிராட்டியுடன் காட்சி தருவான். வலப்புயத்தில் இடப் பெறும் திருமண்காப்பு இவனைக் குறிக்கும்.

திரிவிக்கிரமன்:

நெருப்பு வண்ணத்துடன் திகழும் இவன் நான்கு வாள்களை ஏந்தியவண்ணம் வரா ரோகினிப் பிராட்டியுடன் தென்மேற்குத் திசைக் காவலனாக நின்று சேவை சாதிப்பான். இவன் நிலையை;

"திரிவிக் கிரமன் திகழ்தீ
நிறத்தன் தெளிவுஉடைவாள்
உருவிக் கரங்களில் ஈரிரண்(டு)
ஏந்தி வலக்கழுத்தும்
செருவிக் கிரமத்(து) அரக்கர்திக்
குஞ்சிறந்(து ஆகும்"

[தீ-நெருப்பு; ஈரிரண்டு-நான்கு; செருவிக் கிரமத்து-போரில் வலிமையைக் காட்டுகின்ற; அரக்கர் திக்கு-தென்மேற்கு: ஆளும்-காப் பான்]

என்று குறிப்பிடுவர் (தே.பி. 286) வேதாந்த தேசிகர். இவனைக் குறிப்பதற்காகக் கழுத்தின் வலப்புறத்தில் திருமண்காப்பு இடம்பெறும்.

வாமனன்:

வாமனன் என்ற எம்பெருமான் இள ஞாயிற்றின் நிறத்தையுடையவன் என்றும், நான்கு திருக்கரங்களிலும் நான்கு வச்சிராயு தங்களை ஏந்தியவன் என்றும், இவன் வடமேற் குத் திசையில் நின்று காவல் புரிவான் என்றும் பாசுரம் இட்டு அருளுவர் வேதாந்த தேசிகர்.

"வாமனன் என்றன்வா மோதர
ம்வாயு வின்திசையும்
தாமம் அடைந்து தருண
அருக்கன் நிறத்தனுமாய்ச்
சேம மரக்கலம் செம்பவி
ஈரிரண் டால்திகழும்';

[வாமஉதரம்-இடப்புறவயிறு. வாயுவின் திசை-வடமேற்கு. தாமம்-இடம்; தருணஅருக்கன்-இளஞாயிறு; சேமமரக்கலம்-காக்கும் ஓடம்; செம்பவி-சிவந்த வச்சிராயுதம்]

என்ற பாசுரப்பகுதி (தே.பி. 287) இவன் நிலையை விளக்குவதைக் காண்க. இவன் அரிப்பிரியைப்பிராட்டியுடன் கருணை புரிவான். வயிற்றின் இடப்புறத்தில் இடப்பெறும் திருமண் காப்பு இவனை நினைவுறுத்தும்.

சீதரன்:

சீதரன் என்ற எம்பெருமான் நிலையைக் குறிப்பிடும் பாசுரப் பகுதி இது.

"சீரார் சிரீதர னுய்ச்சிவன்
திக்கும் இடப்புயமும்
ஏரார் இடம்கொண்(டு) இலங்குவெண்
தாமரை மேனியனுப்ப்
பாராய பட்டயம் ஈரிரண்
டாலும் பயம்அறுக்கும்"

[சீர்ஆர்-சிறப்பு நிறைந்த; சிவன்திக்கு-வடகிழக்கு (ஈசானியம்); ஏர்ஆர்-அழகு பொருந்திய; இலக்கு-ஒளிவிடும்; பார்ஆய-பருத்த; பட்டயம்-பட்டாக்கத்தி]

இந்த எம்பெருமான் வெண்தாமரை வண்ணம்; நான்கு திருப்புயங்களிலும் நான்கு வாள்களைத் (பட்டாக்கத்திகளைத்) தரித்துக்கொண்டு சார்ங் கினிப் பிராட்டியுடன் வடதிசைக் காவலனாய்க் கருணைமழை பொழிவான். இவன் நினைவாக இடப்புயத்தில் திருமண்காப்பு இடப்பெறும்.

இருடிகேசன் :

இந்த எம்பெருமான் மின்னல் நிறத்தை யுடையவன்; இவனுடைய நான்கு திருக் கரங் களை நான்கு சம்மட்டி ஆயுதங்கள் அணி செய்யும். தேவதேனி பிராட்டியுடன் சேவை சாதிக்கும் இவன் நிலையை,

'' என்இடி கேசன் இறைகீழ்
இடக்கழுத்(து) என்(று) இவற்றில்
நல்நிலை மின்உரு வாய்நாலு
முற்கரம் கொண்டளிக்கும் ''

[இடிகேசன்-இருடிகேசன் (தளைநோக்கி மருவியது); இறை-சுவாமி; கீழ் இடக்கழுத்து-கீழ்க்கழுத்தின் இடப்புறம்; உரு-நிறம்; முற் கரம்-சம்மட்டி; உழலைத்தடி. அளிக்கும்-காப்பான்]

என்ற பாசுரப்பகுதி (தே.பி. 289) விளக்கும். கழுத்தின் இடப்புறமாக இடப்பெறும் திருமண் காப்பு இந்த எம்பெருமானை நினைக்கச் செய்யும்.

பத்மநாபன் :

பத்மநாபன் என்று இந்த எம்பெருமான் கதிரவனின் நிறத்தையுடையவன். திருவாழி திருச்சங்கு வாள் வில் தண்டு என்ற ஐந்து ஆயுதங்களைக் கொண்டவன். மகாலட்சுமி யுடன் சேர்ந்த நிலையில் இவன் சேவை சாதிக்கும் இடம் மனம் ஆகும். இவன் நினை வாகப் பின்புறம் திருமண்காப்பு இடப்பெறும். இவன் நிலையை,

'' எம்பற்ப நாபனும் என்பின்
மனம்பற்றி மன்னிநின்று
வெம்பொற் கதிரவன் ஆயிரம்
மேவிய மெய்உருவாய்
அம்பொற் கரங்களில் ஐம்படை
கொண்(டு) அஞ்சல் என்று அளிக்கும்''

[என்பின்-என்னுடைய பின்பாகம் (முதுகு அடி); மன்னி. நிலைபெற்று; மெய்-திருமேனி. வெம்-சூடான; பொன்-சிவந்த; மேனிய-அம்-அழகிய; ஐம்படை-ஐந்து ஆயுதங்கள்]

என்ற பாசுரப் பகுதி (தே.பி. 290) விளக்கி நிற் கின்றது.

தாமோதரன் :

இறுதியாகத் தாமோதரன் என்ற எம்பெரு மான் நிலையை,

'' தாமோ தரன்என்றன் தாமங்கள்
நாலும் கரங்களில்கொண்(டு)
ஆமோ தரம்என ஆகத்தின்
உட்புறம் பின்கழுத்தும்
தாம்ஓர் இளங்கதி ரோன்என
என்உள் இருள்அறுக்கும் ''

[தாமங்கள்-பாசங்கள்; தரம்-பெருமை; ஆகம்-உடல்; இருள்-அஞ்ஞானம்; அறுக்கும்-போக்குவான்]

என்ற பாசுரப் பகுதி (தே.பி. 291) தெளிவாக்கு கின்றது. இவன் இந்திரகோபம் என்ற பூச்சி யின் (உதிக்கும் கதிரவனின்) நிறத்தையு டையவன். நான்கு திருக்கரங்களிலும் நான்கு பாசக்கயிறுகளை ஆயுதங்களாகக் கொண்டு திகழ்வான். சர்வலோக சுந்தரி (சர்வாங்க சுந்தரி) பிராட்டியுடன் உள்ளும் புறமுமாக எழுந்தருளியிருந்து காத்தருள்வான். இவன் நினைவாகக் கழுத்தின் பின்புறம் திருமண்காப்பு இடப்பெறும்.

இங்ஙனம் போற்றிப் புகழப்பெறும் பன்னிர ண்டு எம்பெருமான்களையும் பற்றிய பண்ணோடு கூடிய திருவாய்மொழிப் பாசுரங்கள் ஓதி மனங் கரையப்பெற்றால் அவை ''அண்ணல்தாள்அணை விக்கும்'' (திருவாய் 2·7 : 13). அங்ஙனமே முக்திக்கு மூலம் என்று கூறி வேதாந்த தேசிகர் அருளிய பாடல்களும் எம்பெருமானுடைய அடியார்கட்கு ஆரா அமுதமாகத் தித்திக்கும். அவற்றை அநுசந்திப்பவர்கள் எம்பெருமான் மீது ஆராக்காதல் கொண்டு, உபாயங்களை மேற்கொண்டு, வீட்டின்பம் எய்தப்பெறுவர்.

★ ★ ★

விசிட்டாத்துவைதம்

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.,

செயலாளர், ஸ்ரீவைஷ்ணவ மகாசங்கம், சென்னை.

விசிட்டாத்துவைதம் என்பது வடமொழித் தொடர். துவைதம் என்ருல் இரண்டாக இருக்கும் நிலை எனப் பொருள்படும். உலகம் இரு நிலையில் இருக்கிறது என்பது இதன் விரி பொருள். அதாவது, உலகம் ஆத்மா பரமாத்மா என இரு கூறுகளாக உள்ளது எனப் போதிக்கும் சித்தாந்தம். சித்தமாகிய மனத்திஞல் ஆராய்ந்து தெளிவாகக் காணப்பட்ட, முடிவான கருத்துக்கு, சித்தாந்தம் என்று பெயர். மாத்வாச்சாரியர் துவைதமதத்தின் தலைசிறந்த ஆசாரியர். இந்த மார்க்கத்தை அநுட்டிப்பவர் கட்கு மாத்வர் என்றே பெயருண்டு.

இறைவன் வேறு இல்லை, உயிர் இனம் வேறு இல்லை, எல்லாம் இறைவன் மயமே. உயிர் இனம் இறைவனின் திருக்கோலங்களே என்பது அத்வைதமதம். அதாவது இரண்டல்ல ஒன்றே என்பது. உலகம் மாயை, இறைவனே உண்மை. இறைவனுகிய ஒரே உண்மைதான் உலகில் உண்டு என்பது துவைதம். அல்லாதது துவைதம். காரணமற்றது அகாரணம்; அதுபோலத் துவைதமல்லாதது அத்வைதம். அத்வைத மதத்தின் தலைசிறந்த ஆசாரியர் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர். நீயும் அஃதே என்று பொருள்படும் தத்வம்அசி என்ற சொற்றொடர் வேதத்துள் உள்ளது. இதை வைத்தே அத்வைத மதம் காணப்பட்டது. "உயிராகிய ஆத்மாவே! நீயும் பரமாத்ம சொரூபமே! நீ வேறு பரமாத்மா வேறு அல்ல. கடைசியில் உயிர் இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒன்ருகி விடுகிறது" என்பது அத்வைதம்.

உயிர் இறைவனுடன் இரண்டறக் கலக்குங் காலம், உடலைவிட்டுப் பிரிகிற பின்பே. உயிர் உடலில் இருக்கும் போது இரண்டறக் கலத்தல் இயலாது. அந்த நிலையில் உடலுடன் கூடிய உயிர்வேறு, இறைவன்வேறு என்று இரண்டு நிலையில் இயங்குவதாகக் கொள்ளப்படுகிறது.

உடலிலிருந்துஉயிர்பிரிவதால், உயிர் வேறு உடல் வேறு என்பது பெறப்படுகிறது. உடல் என்பது மண் நீர் எரி காற்று ஆகாசம் என்ற ஐம்பெரும் பூதங்களின் கலந்த அமைப்புதான். உடல் இயங்குகையிலும் ஐம்பெரும் பூதங்களின் உதவியால் தான் இயங்கும். உடலிலிருந்து உயிர் பிரிந்த பின், உடல் ஐம்பெரும் பூதங்களில் தான் கலந்து விடுகிறது.

எனவே, இறைவன்-உயிர்-ஐம்பெரும் பூதங்கள் அதன் சின்னமான உடல் அல்லது சடஉலகம் என்ற மூன்று கூறுகள் உள்ளனவாகப் பெறப்படுகிறது. இதனை முறையே ஈசுவரன், சித்து, அசித்து என்று கூறுகிருேம். உரித்ததேங்காயின்வெளிப்பாகம் மூன்று பாகங்களாகக் கோடு கொண்டு பிரிந்து இருக்கும். கண்ணை மூடிக்கொண்டு எந்த இடத்தைத் தொட்டாலும், மூன்றில் ஒரு பாகத்தில் அது அடங்கி இருக்கும். அப்படித்தான் உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் சித்து அசித்து ஈசுவரன் என்ற முப்பிரிவில் ஒரு பிரிவில் அடங்கியிருக்கும். உதாரணமாக ஓடும் ரயிலில், ரயிலும் — ஓட்டுகிறவரின் உடலும் அசித்து. அவர் உடலில் உள்ள உயிர் சித்து. அப்படியே அநுமானத்தால் உடலில் உள்ள உயிராகிய சித்தை இயக்குபவன் ஈசுவரன். சித்து அசித்து ஈசுவரன் அல்லது என்னும் மூன்று பொருள்களின் இயல்பை அறிவதே அறிவு.

இப்படி முப்பிரிவாக உள்ள இந்த உலகம் தொடர்பும், கட்டுப்பாடும் இல்லாமல் தனித்துத் தனித்து இயங்க இயலாது! உடலை இயக்குவது உயிர். உலகத்தில் உள்ள ஐம்பூதங்களையும் அவைகளின் சேர்க்கையாலான எப்பொருளையும் உடலால் இயக்குவதும் உயிரே! இதை ஒப்புக் கொள்ள முடிவது போல, அதாவது உடலை உயிர் இயக்குவது போல, உயிரை

இயக்குவது இறைவன் என்பதையும் அநுமானத்தால் உணர வேண்டும். உயிருக்கு உடல் சரீரம் — உடலை உயிர் இயக்குகிறது. அதுபோல இறைவனுக்கு உயிர் சரீரம் — உயிர்களை இறைவன் இயக்குகிருன். இதைச் சரீர சரீரி சம்பந்தம் (உடலுக்கும் உடலைத் தொழிற்படுத்துகிறவனுக்கும் உள்ள தொடர்பு) என்பார்கள்.

இக்கொள்கையால் உயிர், இறைவன் என்ற இரு பாகுபாடுகள் உள்ளனவேனும் உயிரைச் சரீரமாகக் கொண்டு இறைவன் இயங்குவதால், ஈசுவரனுகிய உயிரும் உலகமாகிய உடலும் கலந்து ஒன்ருகக் காணப்படுகிறது. இந்த விசேட ஒற்றுமையை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார் இராமாநுசர்.

இதனை விசேடத்துடன் கூடிய அத்வைதம் அல்லது விசிட்டாத்வைதம் என்பர். வேதத்தில் பிரித்துக் கூறும் வாக்கியங்களை இணைத்துப் பாடியம் (விரிவுரை) இயற்றியவர் இராமாநுசர். இதற்காக வேதத்திற்குப் போதாயனர் இயற்றிய விரிவுரையைக் காசுமீரம் சென்று வாசித்தறிந்து ஆதாரமாகக் காட்டினர். இதனுல்தான் விசிட்டாத்துவைத மதத்திற்கு இராமாநுச தரிசனம் என்று பெயரிடப்பட்டது. இப்பெயரைச் சூட்டியவர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள சாட்சாத் திருவரங்கநாதப்பெருமான்தான்! "எம்பெருமானுர் தரிசனம் என்றே, இதற்குநம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்" என்பது உபதேச ரத்தினமாலையிலே அமைந்த மணவாள மாமுனிவரின் திருவாக்கு!

ஆழ்வார்களின் பாசுரங்களாலும் இத்தெளிவை ஸ்ரீராமாநுசர் பெற்ருர். நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி முதற்பாசுரத்தில் "துயர் அறுசுடரடி தொழுது எழு என் மனனே" என்று பாடுகிருர். துயரை அறுக்கிற சுடரடி வேறு; துயர்வேறு, துயரால் அவதிப்படும் மனம் வேறு. துயர்அறுசுடரடி என்பது ஈசுவரனுகிய இறைவன். இறைவனுக்குத் திருமேனி உண்டு. என்பது இதனுல் தெளிவாகிறது. 'இறைவனடி' என்கிருர் பொய்யாமொழியாரும். துயர் என்பது உடல்; ஐம்பொருள்களால் ஆன உலகம் அல்லது அசித்து. தொழுது எழும் மனம் என்பது சித்து அல்லது உயிர்.

நம்மாழ்வார் ஆழ்வார்களிலே தலைமை இடம் வகிக்கிருர். காரணம், விசிட்டாத்துவைதக் கொள்கையைத் தம் ஆயிரம் பாடல்களான திருவாய் மொழியிலே சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் அவர் தெளிவுபடுத்தியருளினர். இந்த ஆயிரம் பாடல்களின் சுருக்கமே முதல் நூறு பாடல்களாகிய முதற் பத்து. நூறு பாடல்களால் ஆன முதற் பத்தின் சுருக்கமே முதல் பதிகம். அதாவது பத்துப் பாடல்கள். முதல் பதிகம் அல்லது பத்துப் பாடல்களின் சுருக்கந்தான் முதல்பாடல். முதல் முதல் பாடலின் சுருக்கந்தான் "துயர் அறு சுடரடி தொழுது எழு என் மனனே!" என்றும் கூறலாம்.

இக்கொள்கையை மேலும் விளக்குகிருர் முதல் பதிகத்திலே உடலில் உயிர்த் தத்துவம் ஓர் இடத்தில்தான் இருக்கிறது எனக் கூறுவது தவறு. உயிர்த்தத்துவம் உடல் முழுவதும் பரவி எல்லா அங்கங்களையும் வளரச் செய்கிறது. ஒரு குண்டூசி கொண்டு எங்குக் குத்தினுலும் உயிர் அறிந்து விடுகிறது. உயிர் அற்ற பிணம் அறியாது. உடல் முழுவதும் உயிர் பரந்து தொழிற்படுவது போல, உலகமாகிய உடல் முழுவதும் பரிணமித்துத் தொழிற்படுகிருன் இறைவன். 'உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து உளன்' என்கிருர் நம்மாழ்வார். உலகை உடலாகக் கொண்டும் இயங்குகிருன் இறைவன். இது வேதக் கொள்கைதான். தம் ஒண் தமிழ் வேதத்தாலே நம்மாழ்வார் வடமொழி வேதத்தை வெளிப்படுத்துகிருர். 'சுடர் மிகு சுருதியில் இவை உண்ட சுரனே' என்னும் அடை மொழியினுல் இது வேதக் கருத்தே எனப் புலப்படுத்துகிருர் நம்மாழ்வார்.

"வேதத்தின் விழுமிய வார்த்தை"

திரு. ஆர். அரங்கராசன், M.A.,B.T.,

மதுரை.

திருக்கோட்டியூர் நம்பி என்ற மகான், கற்றுணர்ந்த கலைவல்லவராகத் திகழ்ந்தார். தேனைநாடிச் செல்லும் வண்டு போல் இராமானுசர் நம்பியின் திருவடிகளைத் தேடிச் சென்று அவருடைய பாத கமலங்களிலிருந்து பெருக்கெடுத்த தேனுகிய அருமறைப்பொருளை நுகர்ந்தார். திருமந்திரம், சரமசுலோகம் இவற்றின் ஆழ்பொருளை உபதேசிக்கப் பெற்று, அங்ஙனம் பெற்றதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்ததால், பெருவள்ளல் என்று ஊரும் உலகும் கொண்டாடிய இராமானுசரை எம்பெருமானுர் ஆக மாற்றிய சிறப்பு, திருக்கோட்டியூர் நம்பிக்கு உரியதாகும். எம்பெருமானுரைச் சீடராகப் பெற்ற பின்னர்க் கல்வி வேட்கை கொண்ட பலரும் நம்பியைத் தெண்டனிட்டுத் திருவடிகளில் அளவற்ற பிரேமை செலுத்தி அவருடைய உபதேச மொழிகளை நாளும் கேட்டுப் பொழுதைக் கழித்தனர். நம்பிகள் தமது ஆசிரியரான ஆளவந்தார் பக்கலில், தாம் கிரகித்திருந்த அர்த்த விசேடங்களைச் சமயங்களில் சீடர்களுக்குப் போதித்து வந்தார்,

ஒரு சமயம் திருக்கோட்டியூர் நம்பிகள் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய் இட்டகால் இட்டகையினராய்க் கிடந்தார். நம்பிகள் நோவுசார்த்திக் கொண்டிருந்ததைக் கேள்வியுற்ற அடியார்களும், அந்தரங்க சீடர்களும் மனம் சோர்ந்து கண்ணநீர் பெருக்கி நம்பிகளின் திருவடியருகே சோகமே உருவெடுத்து நின்றனர்.

வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்த நிலையிலும், நம்பிகள் சீடர்களை அருகே யழைத்துப் பல நல்லுரைகளை வழங்கினுர். சீடர்களின் உள்ளத்தே எழுந்த பல சந்தேகங்களை அகற்றினுர். மரணத்தோடு போராடிய நிலையிலும் அறிவுப்பிரசாரத்தையும், ஆன்மீக விசாரத்தையும் செய்தருளிய நம்பிகளின் பயன்கருதாத தொண்டுள்ளத்தைப் புகழ்வதற்குச் சொற்கள் இல்லை! கிரேக்க தேசத்தில் சிறையிலே தள்ளப்பட்ட தத்துவ மேதை சாக்கரட்டீஸ், இறக்கும் வரை அறவுரைகளை அள்ளிவீசினதாகச் சரித்திரம் கூறுகிறது. அந்த சாக்கரட்டீசையும் விஞ்சிய பெருமை திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு உண்டு. விடத்தைக்குடித்துவிட்டு மரண வேதனைகளை நினைத்து நினைத்து அஞ்சினுர் சாக்ரடீஸ்.

ஆனுல் நம்பிகளோ இறைவன் தன் திருவடிகளில் "கூவிக்கொள்ளும் காலம் இன்னங் குறுகாதோ" என்று, பிரிவை எதிர் நோக்கி அமைதியுடன் காத்திருந்தார். அப்போதுதான் அருகில் நின்றுகொண்டிருந்த அன்பர்கள் சிலர், நம்பிகள் திருவாய் திறவாது நெடுநேரம் திருக்கண்களை மூடிக் கொண்டதைக் கண்டு, அருகே நெருங்கிச் சென்று பயபக்தி வினயத்துடன் கேட்டார்கள்!

"சுவாமி, தேவரீர் திருவுள்ளத்தில் என்ன நினைவு ஓடுகிறது, கூறியருள வேணும்."

நம்பிகளின் இறுதி ஆசை ஏதேனும் உண்டாகில், அதை நிறைவேற்ற நினைத்தார்கள் குழுமியிருந்த சீடர்கள். நம்பிகள் மெல்லத் தமது திருக்கண்களைத் திறந்து அகல நோக்கினுர். திருக்கைகளால் அனைவரையும்

ஆசிகூறி வாழ்த்தினர். பலர் நம்பிகளின் திருவடிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். நம்பிகள் ஏதோ சொல்ல முயன்றார். நா தழுதழுத்தது. திருக்கண்களி லிருந்து கண்ணீர் பெருகிற்று. அது ஆனந்தக் கண்ணீராகத் திகழ்ந்தது. மெல்ல முயன்று சிறுகுரலில் நம்பிகள் அருளிச் செய்ததை அனைவரும் கூர்ந்து கேட்டனர். எங்கும் அமைதி நிலவியது. நம்பிகள் உதிர்த்த பொன் மொழி என்ன தெரியுமா?

“சக்கரவர்த்தித் திருமகனான இராகவனின் திருவுள்ளத்தை ஒரு பட்சி புண்படுத்தியதே”- மேலே பேசமுடியாமல் கண்ணீர் பெருக் கெடுத்தது.

இராகவன் கருணாசாகரம், அதில் மூழ்கித் திளைத்த நம்பிகள் இராகவனின் கருணைத்திறம் தம்மை ஆட்கொள்வதில் காலதாமதம் செய்யாது என்றும், தம்மை ஏற்றுக்கொள்வது அவனுக்குக் கடமையாகிவிட்டது என்றும் உறுதியான எண்ணங்கொண்டார். அவருடைய மனத்திரையில் சக்கரவர்த்தித் திருமகனான இராகவன் விபீடணாழ்வானுக்கு அடைக்கலம் அருளியபோது, வானரமுதலி களுக்கு விளக்கிக்கூறிய கதையொன்று நிழலாடியது,

அன்பர்களின் இடம் தேடிச் சென்று அவர்களைக் காத்தருளல் வேண்டுமென்ற கொள்கை பூண்டவன் இராகவன். தன் நிலையி லிருந்து தாழ்த்திக் கொண்டாவது பிறருக்கு நன்மை செய்பவனே உத்தமன். இந்திரனு டைய காரியத்திற்காகச் சிறிய மாணுருவாகி மகாபலி முன்பு சென்று மூவடி மண் யாசித்தவன் தானே, சக்கரவர்த்தித் திருமகனுய்க் கௌசலை தன் குலமதலையாய் அவதரித்திருக்கிறன். மற்றவர்க்காகக் காரியஞ் செய்யும்போது தன் உயிரைப் பலிகொடுக்க நேரிட்டால் அதைக் காட்டிலும் மாபெரும் தியாகம் உண்டா?! அரக்கர் குடியான இலங்கைக்கே சென்று விபீடணாழ்வானை அரவணைத்து அடைக்கலங் கொண்டு அன்பனாக ஏற்றுக் கொள்வதுதான், இராகவன் திருவுள்ளத்தில் நேர்மையான செய லாகப்பட்டது. அப்படி விபீடணனை ஆட் கொள்ளும்போது தன்னுயிர் கொடுக்க நேரிட் டால் அதைக்காட்டிலும் சிறப்பொன்று இருக்க முடியுமோ! ஆனால் விபீடணாழ்வான் இராக வனிருப்பிடத்தைத் தானாகவே தேடிச் செல்லும்படி சந்தர்ப்பம் அமைந்து விட்டது. தேடிச் சென்றானே, சென்ற மறுகணமாவது அபயம் அளித்தானா இராகவன்? கல்லும் மரமும் கொண்டு வானரவீரர்கள் விபீடண னுக்கு வரவேற்பு அளித்தார்கள்! அடி, உதை, கொல்லு என்று வரவேற்பு வாசகங்களை நல்கி னரே அவ்வீரர்கள்! அதையடுத்தாவது இராகவன் விபீடணாழ்வானை எதிர்கொண்டு ஏற்று அபயமளித்தானா? மந்திராலோசனைச் சபை கூட்டி நெடும்போது வாதவிவாதங்கள் நிகழ்த்தியது என்ன நியாயம்! மற்றவர் களுக்குச் சமாதானங்கூறுவதற்கே என்றாலும், இராகவனுடைய திருவுள்ளத்தில் ஆலோசனைச் சபை கூட்டியது தவருகவே பட்டது. தனது தவற்றை உணர்ந்துதான், இராகவன் இரு புருக்களின் தியாக வரலாறு ஒன்றைக்கூறிக் கேவலம் பறவைகளாகப் பிறந்த அப்புருக்கள் ஆற்றிய அருஞ்செயல், தன்னை நாணமுறச் செய்தது என்று விளக்கினான்.

ஒரு காட்டில் ஒரு புரு இருந்தது. ஒரு நாள் ஒரு வேடன், அது வாழுமிடத்திற்கு வந்து, அதன் மனைவியை வலைபோட்டுப் பிடித்துவிட்டான். பிறகு இருள் சூழ்ந்து பெருங்காற்றுடன் மழையும் பிடித்துக் கொண்டது. அதனால் வேடன் மிகவும் வருந்திப் பசியுடன் கண்டவிடமெல்லாம் திரிந்து, ஆண் புரு இருந்த மரத்தடியில் வந்து சேர்ந்தான். மிகவும் சோர்வுற்றிருந்த வேடனைக் கண்டு மனமிரங்கி, அவனுடைய பசியைப் போக்கவும் குளிரை நீக்கவும், அவ்வாண்புரு நினைத்தது. ஆனாலும் அவன் பறவைகளுக்குப் பகைவனான வேடனாக இருப்பதைக் கருதிச் சற்றுத்தயங்கியது. அப்போது வலையிலகப் பட்டிருந்த பெண்புரு தன் கணவனைப் பார்த்து, “நாதா! நான் வலையிலகப் பட்டுவிட்டேன். எனக்காக வருந்தவேண்டாம். அந்த வேடன் நம் இருப்பிடம் தேடி வந்தான். நம்வீடு தேடி வந்த விருந்து ஆகிய அவனைக் காக்க வேண்டியது நமது தருமம்” என்றது. ஆண் புரு பறந்து சென்று சருகுகளையும் சுள்ளி களையும் கொண்டு வந்து நெருப்பு மூட்டி வேடனைக் குளிர்காயச் செய்து தனக்கு அகப் பட்ட கனிவர்க்கங்களைக் கொணர்ந்து கொடுத்தது. அப்படியும் வேடனுடைய கடும் பசி தீராததைக் கண்ட அந்த ஆண் புரு, ஒரு

முடிவுக்கு வந்தது. வேடனுக்குத் திருப்தியான வேறு மாமிசத்தைச் சம்பாதித்துக் கொடுக்க முடியாமல், தான் மூட்டின தீயில் தன் உடலை அர்ப்பணம் செய்து, வேடனைப் பசி தீர்த்துக் கொள்ளும்படி பிரார்த்தித்து உயிரைவிட்டு உத்தமலோகத்தை அடைந்தது. தற்செயலாய் மரத்தடியில் மழைக்கு ஒதுங்கினவனைத் தன் இல்லம் தேடிவந்த அதிதியாகக் கொண்டு ஆராதனை செய்து, உயிரையே அர்ப்பணித்த புருவின் செயல், இராகவனுடைய உள்ளத்தை உருக்கிவிட்டது.

இராகவன் நினைத்தான் : ''என்னைப்போல் சகல தருமங்களையும் கடைப்பிடிக்கத் தகுதி யுடைய மனித குலத்தில் அந்தப்புரு பிறக்க வில்லை. சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்று வதையே விருதாகவுடைய இட்சுவாகு குலத்தில் என்னைப் போல் பிறக்கவுமில்லை. வேடனோ பிறப்பாலும் சுபாவத்தாலும் அற்பன். வேறு கதியற்றவன், இரக்கமில்லாவன், நல் வார்த்தை பேசியறியாதவன். அவனையும் அந்தப்புரு உயிரைக் கொடுத்து உபசரித்ததே! முன்பு சிபிச்சக்கரவர்த்தியைச் சோதிக்கவந்த பறவையைப் போல மாறுவேடமெடுத்துவந்த தேவதைகளுமல்ல! ஒரு சாதாரணப்புரு அசாதாரணமான பேறுபெற்றதே! என்றெல் லாம் விபீடணனை ஆட்கொண்டதிலேற்பட்ட காலதாமதம்தான் இராகவனின் இதயத்தில் என்றும் நீங்காத புண்ணை ஏற்படச் செய்து விட்டது.

திருக்கோட்டியூர் நம்பிகளின் மனத் திரையில் ஓடிய காட்சிதான் மேலேகண்ட வரலாறு. புரு ஒன்றின் செயலுக்கு நாணின பெருமாள், தன்னை ஒருக்காலும் நெகிழ விட மாட்டான். மிக விரைவில் தன் அடிசேர் வண்ணம் ஆட்கொண்டு அருள்புரிவான் என்ற நம்பிக்கையைத்தான், அடியவர்களுக்குச் சூத் திரம் போன்ற வாக்கியத்தால் உணரவைத்தார் நம்பிகள். ஒரு சிறு சொற்றொடர் இவ்வளவு வரலாற்றுப்பின்னணியோடு ஆழ்ந்த கருத்தை உட்கொள்ளுமாறு அமைந்த அழகைக்கண்ட நம்பிகளின் சீடர்கள், அதைத் திருக்கோட்டியூர் நம்பிகள் அந்திம தசையில் அருளிச் செய்த வார்த்தை எனக் கொண்டாடினர். இவ் வார்த்தை பின்னால் வழிவழியாகப் பேணப் பட்டது. இவ்வார்த்தையை நம்பிகள் தாமாக அருளிச் செய்தாரல்லர். தமது ஆசிரியரான ஆளவந்தாரிடத்தே இவ்வார்த்தையைக் கேட்டிருந்து, அதைத்தான் தக்க சமயத்தில் தம் சீடர்களுக்கு அறிவித்து, நாடும் நகரமும் நன்கறியுமாறு வெளிப்படுத்தினர். ஆளவந்தார் குழுவில் விசாரணை செய்யப்பெற்ற இவ் வார்த்தை கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானுக்கும் எட்டியது என்று கருதுவதற்கு ஆதாரமிருக்கிறது. விபீடணன் அடைக்கலப் படலத்தில் இப்புருவின் கதையைக் குறிப்பிடு கின்ற கம்பர் பாசுரம், மிகவும் சொற்செறிவு பொருந்தியது.

பேடையைப் பிடித்துத் தன்னைப்
 பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான் விறகிடை
 வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
 தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடு பெற் றுயர்ந்த வார்த்தை
 வேதத்தின் விழுமி தன்றோ (112)

புருவின் தியாக வரலாறு, வேதப்பொருளைக் காட்டிலும் சிறந்தது என்பது கம்பர்பெருமான் கண்டமுடிவு ஆகும்.

'வீடுபெற்றுயர்ந்த வார்த்தை' என்ற அடியானது நம்பிகள் அந்திம தசையில் அருளிச் செய்த வார்த்தையைச் சுட்டிக் காட்டுகிறது. கம்பரும் 'வார்த்தை' என்ற சொல்லை உரிய இடத்தில் பயன்படுத்தியி ருப்பது உற்று நோக்குதற்குரியது. இதனால் வார்த்தை என்ற சொல்லுக்குப் பொருள், வரலாறு என்று எளிதில் அறியலாம். திரு வரங்கத்தில் கூடியிருந்த ஆசாரியர்களின் கோட்டியில் விசாரிக்கப்பட்ட பல பொருள் நலங்களையும் வார்த்தைகளையும் கேள்வியுற்ற கம்பநாட்டாழ்வார், தம் இராமகாதையில் ஆங்காங்கே அவற்றை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் சம்பிரதாயம் வல்லார்கள் கூறுவர்.

○○○

திருமுருகாற்றுப்படை

பேராசிரியர். பல்கலைச் செல்வர்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A., B.L., M.O.L.,

''உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு,
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி,
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன் தாள்,
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை,
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்''

உறழத் தோன்றல் :

ஆற்றுப்படையில் ''ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றும்'' என்கிருர் தொல்காப்பியர். புரவலனிடத்தில் செல்வம் பெற்ற கலைஞனது காட்சி ஒரு புறம். அதன் எதிரே அத்தகைய புரவலனைப் பெருது வறுமையில் வாடும் கலைஞனது காட்சி மற்ருெரு புறம். இருவேறு காட்சிகளும் ஒன்றுக்கு ஒன்று மாருகத் தோன்றுவதைத்தான் தொல்காப்பியர் குறிக்கிருர். இந்த இரண்டாட்டம் ஒருவகையில் உலகின் இயல்பு. இது தீரும் வழி என்ன? புரவலன் இருக்கும் போதும் கலைஞன் வாடுவது, அவன் இருப்பை அறியாமையாலே ஆம். அந்த அறியாமையைத் தான் புரவலனைப் பெற்ற கலைஞன் தீர்க்கின்ருன். ''பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறுத்துகிருன்'' என்கிருர் தொல்காப்பியர்.

இரண்டாட்டம் :

கடவுளைப் பற்றிக் கூறும்போது கடவுள் அருளைப்பெற்ற ஒருவன், அந்த அருளைப் பெருதவனுக்கு அந்த அருளை அறிவுறுத்தல் வேண்டும். அப்படித்தான் திருமுருகாற்றுப்படை ஒரு வகையில் அமைகிறது. ஆனுல் அருளைப்பெற்றவனுக்கும், அருளைப் பெருதவனுக்கும் உள்ள வேற்றுமை வெளிக் கோலத்தில் இல்லை; உள்ளுக்குள்ளே பொங்கும் உள்ளத்தின் இனபத்தில் தான் உண்டு. கடவுளைச் சிறப்பாகச் சென்று காணும் இடங்களைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது ஆனுல் கடவுள் இல்லாத இடம் எது? 'முருகு' என்பது ஐம்புல இன்பங்களின் இடையே அடிப்படைக் கடவுள் அனுபவமாக விளங்குமானுல் அது இல்லாத இடம் எது? கடவுள் நம்மை நோக்கி எங்கும் கோயில் கொண்டு காட்சி அளிக்கின்ருன்; இன்பம் பொழிகின்ருன். 'முருகு' என்ற சொல்லின் நுட்பம் இதுதான். ஆனுல், இதை உணர்வார் யார்? இன்பமே எங்குமானுல் துன்பம் உலகத்தில் இருப்பானேன்? இன்பமும் துன்பமும் ஆக எழும் இரண்டாட்டம் தான் இந்த உலகத்தின் ஆற்றிடைக் காட்சியாக உறழத் தோன்றுகிறது. ஒளி என்றும் இருள் என்றும், மழை என்றும் வெயில்என்றும், வேலை என்றும், விளையாட்டு என்றும், தேவர் என்றும் அசுரர் என்றும் கூறப்பெறுகின்ற இரண்டாட்டம் எல்லாம் இந்த அடிப்படையில் எழுவதாம்.

தீரும் வகை :

இந்த இரண்டாட்டம் தீரும் வகை என்ன? எங்கும் முருகன் ஆனுல், எங்கும் இன்பம் பொங்க வேண்டாமா? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்யிற்கு அலைகின்ற கதை தான் இங்கும். எங்கும் கடவுள் என்ருல் அவன் இல்லாத இடம் இல்லை. ''துறக்கந்தான் அவன்; நரகம் அவன் அல்ல; இன்பம்தான் அவன்; துன்பம் அவன் அல்ல; நல்லவன் தான் அவன் வடிவம்; கெட்டவன் அவன் வடிவம் அல்ல; ஒளியே அவன் வடிவம்; இருள் அவன் வடிவம் அல்ல; விளையாட்டே அவன் வடிவம்; உழைப்பு அவன் வடிவம் அல்ல'' என்று கூறுவதற்கு இல்லை. அப்படிக் கூறினுல் அவனுடைய முழு நிறைவு மூளியாகப் போய்விடும். 'நரகமே அவனும்' என்று பாடுகின்ருர் நம்மாழ்வாரும். நம்மாழ்வாரின் நோக்கம் இதுதான்; ''குற்றம் நீ,

குணங்கள் நீ'' என்று ஞானசம்பந்தர் பாடும் பொழுது இந்த இரண்டாட்டத்தில் குறை ஒன் றும் இல்லையென்று கூற வருகின்றவர் ''கோதில் ஆலவாய்'' என்று பாடுகின்றார். ஆனால் இன்பத் தில் இறைவனைக் காண்பது போலத் துன்பத்தி லும் அவனைக் காணும் வழிதான் என்ன? இதனைத்தான் திருமுருகாற்றுப்படை நம் உளங் கொளக் கூறுகிறது.

கவி முறை :

இந்த முருகை நேரே கூறப் புலவர் முயல வில்லை. தத்துவ சாத்திரப் பிரசங்கம் பண்ண அவர் வரவில்லை. கவிஞர் கண்ட அனுபவத்தை நாமும் அநுபவிக்குமாறு செய்கின்றார். அந்த அனுபவத்தினிடையே கடவுள் உண்மையைக் கனவு கண்டாற் போலேனும் விளங்கும்படி செய்து விடுகின்றார். இதுதான் கவியின் சிறப்பு. ஏதோ நாம் அறிந்த புராணக்கதைகளைக் கூறு வது போலத்தான் தொடங்குகிறார் கவிஞர். அப்படிக் கூறிக்கொண்டு போகும் பொழுது கடவுள் உண்மை நம் கண் எதிரே தோன்றும் படியாகச் செய்து விடுகின்றார். பின்னே பின்னே மேலும் பாடிக் கொண்டு போகும் பொழுது இந்த உண்மை ஆழ்ந்து அகன்று உயர்ந்து ஓங்கி வரக் காண்கிறோம்.

> உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு

உலகம் உவப்ப :

இருளில் சிக்கிக் கொள்கிறான் ஒருவன். தான் இருக்கும் இடமோ அதையறிந்து தப்பிச் செல்லும் வழியோ ஒன்றும் தெரியவில்லை. ஒரே கூர் இருட்டு! என்ன செய்ய முடியும்? ஒடுங்கி நிற்கிறான். அவன் மட்டுமா? உயிர் இனங்கள் எல்லாம் ஒடுங்கி நிற்கின்றன. அந்த நிலையில் பொழுது விடிகின்றது. கடல் ஓரத்தே நிற்கின் றான் அந்த மனிதன். கர கர என்று கதிரவன் எழுகின்றான். நீலக்கடல்; அதன் மேல் செக்கச் சிவந்த கதிரவன். இந்தக் காட்சி யார் உள்ளத் தைத்தான் கவராது? பறவைகள் பாடுகின்றன விலங்குகள் ஒதுங்கிப் பதுங்கிய கொடுமை நீங்கி ஓடி உலாவுகின்றன. இருண்டு கிடந்த மரங்க ளும் கொடிகளும் பல பல நிறங்களோடு கூடிய மலர்களைப் பூத்துக் குலுங்குகின்றன. உலகம் முழுவதும் அங்கே உவகை பூத்து ஒளிர்கிறது. உலகம் அப்போது உண்மையில் படைக்கப் பெறுகின்றது என்றே கூற வேண்டும்.

பலர் புகழ் ஞாயிறு :

உலகத்திற்கும் சூரியனுக்கும் ஒருநெருங்கிய தொடர்பு உண்டு. கதிரவன் இல்லையானால் உல கம் ஏது? உலகத்தின் வாழ்வு ஏது? உலகத்தின் பருவம் ஏது? உலகத்தின் வளர்ச்சி ஏது? உலக மே கதிரவனிலிருந்து பெயர்ந்து வந்த பகுதி யானால் அவன் இன்றி உலகு ஏது? எனவே கதிரவனை எல்லோரும் புகழ்வதில் வியப்பில்லை உலகு உவந்திருக்கின்ற நிலையில் முன் வாடிய வாட்டம் எல்லாம் தீர, புகழ்பாடி நிற்பதும் இயல்புதானே? ஹெக்கல் என்ற செர்மானிய அறிஞர் கடவுட் கொள்கையை ஒத்துக்கொண் டவர் அல்லர். ஆனாலும் அவர் இந்தியாவிற்கு வந்த பொழுது இந்துக்கள் கடல் அருகே கதிர வனை வழிபட்டதைக் கண்டாராம். அது தான் உண்மையான வழிபாடு என்று தன் விஞ்ஞான அறிவுநலம் தோன்ற விளக்கி மகிழ்ந்தாராம். எனவே 'பலர்புகழ்' ஞாயிறு என்று கூறுவது பெரியதோர் உண்மையையே உள்ளுறுத்துவ தாம். இது, மெய்ஞ்ஞான உண்மையும் விஞ் ஞான உண்மையும் ஆம்.

ஞாயிற்றைக் கடற் கண்டாங்கு :

கடலின் நீலம்; கதிரவனின் செம்மை; இந்த நிறவேறு பாட்டில் ஓர் அழகு; கடல் குறிக்கின் றது உலகின் பரப்பை. அதற்கு உயரத்திலே ஒளிர்கின்றது அதனையும் படைத்து வளர்த்து நிலைநிறுத்தி அழகுபெறச் செய்கின்ற கதிரவன். கடவுளும் உலகுமாக இருக்கின்ற உண்மை யான ஒருமைப்பாட்டை இக்காட்சி ஆழ்ந்த தொரு அடையாளமாகக் கொண்டு என்றும் விளங்குகிறது. நீலமயிலும், நீலமயில் மேல் ஏறும் செக்கச் சிவந்த முருகனும் ஆகத் தமிழர் கடவுளுக்கு ஓர் அடையாள வடிவம் படைத்தனர்.

**ஓ அற இமைக்கும் சேண்
விளங்கு அவிர் ஒளி :**

மேலே தோன்றி மனத்தைக் கவரும் காட்சியாகத் தொடர்ந்து எங்கும் அது விளங்குகிறது. பல தூரத்திலிருந்தும் இதனைக் காணலாம். இதனை அடையாளமாகக் கொண்டு நோக்கும் பொழுது உள்ளத்தே அதனுடைய உண்மைப் பொருள் கடவுள் அனுபவமாக நின்று ஒளிர்கிறது. அகமும் புறமும் இவ்வாறு ஒன்ருகி விளங்க அங்கே அதனைக் கவிஞர்களும், ஞானிகளும் கண்டு அனுபவிக்கின்ருர்கள். புறத்தே கோலம் மறைந்தாலும் அகத்தே தோன்றும் கடவுள் அனுபவம் ''நீக்க மற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமாகப்'' பேர் அருள் பிழம்பாக ஒளிர்கிறது. மயிலேறும் கதையும் இதில் கூறி ஆயிற்று. அக்கதையின் உட்பொருளாம் கடவுள் இன்பமும் விளக்கி ஆயிற்று.

உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள் :

கடவுள் நல்லோர்க்கு எழுகின்ற தடையெல்லாம் நீக்குகின்ருன். அவர்களைத் தாங்கி அணைத்து உயரத் தூக்குகின்ருன். துஷ்ட நிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமும் கடவுளின் வியத்தகு செயல்கள். இரவில் வாடிப் பின்கடல் எதிரே நின்று கதிரவனைக் கண்ட மனிதனும் இந்த இரண்டையும் அனுபவிக்கின்ருன். இருளை ஓட்டுகின்ருன் கதிரவன். அக்கதிரவனே இவனைக் காத்து இவனை இவனுக்குகின்ருன். துயரைப் போக்கும் நிலையை ஆண்டவன் தோளாகவும், இன்பம் தரும் நிலையை அவன் திருவடி நிழலாகவும் கூறுவது இந்தியக் கவிமரபு. இந்த மனிதனுக்குப் போல எல்லா மனிதர்களுக்கும் வருகின்ற துன்பங்களைத் தேய்த்து விடுகின்ருன் ஆண்டவன். இருள் இப்பொழுது எங்கே? இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை :

பகையைச் செறுக்கும் நிலையில் ஆண்டவனது நிலையைத் தடக்கையாகக் காண்கிருர் கவிஞர். 'இடிபோல் பகையை நீக்கும் நிலையில் அஞ்சுதக நிற்கும் அத்தோள்', அங்கும் ஓர் விளக்கம் உண்டு. கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டினையுடைய மேகத்தின் வள்ளன்மையும் அங்கே தோன்றுகிறது. தன்னை அடைந்தவரைத் தாங்குகின்ற அந்த அருள்நிலை, துன்பமே வடிவான நிலையாகும். இது உடன்பாட்டு நிலை. எதிர்மறை நிலையாகப் பார்க்கும் போது அது தரும் காட்சிவேறு. பல பல மயக்கங்களை விளைவிக்கும் அறியாமையை உடைத்து எறிந்து அமைதி தருகின்ற நிலையாக அதுவிளங்குகிறது. ஆதலின் அது மிகமிக வன்மை பொருந்திய நிலையே ஆம். எனவே மறத்தில் அறமும், அறத்தில் மறமும் இயைந்து நிற்கக் காண்கிருேம். இடியின்கொடுமை, மாரியின் வண்மை இப்படி ஒருபுறம்; இன்பத்தில் அமைதி, மயக்கத்தை உடைத்து எறியும் ஆற்றல் — இப்படி ஒருபுறம், இவ்வாறு காண்கின்ருர் கவிஞர். ஆண்டவன் தோள் அது; ஆண்டவன் தாள் இது. தோள் — ஆம் அணைக்கின்ற தோள் – பகையை நீக்கி அணைக்கின்ற தோள்.

மறுஇல் கற்பின் வாணுதல் கணவன் :

அக வாழ்வின் இன்பத்தைப் பெறவேண்டுமானல், களவின் நுட்பத்தைத்துய்க்க வேண்டுமானல் – ஒப்பற்ற அந்த இன்பம் நிலையாக நிற்பதற்கு முன் புறத்தடைகளை வெட்டி எறிந்து வாகை சூட வேண்டும். அதுதான் தமிழர் கண்ட பொருளதிகாரம் கூறும் உண்மை. தான் தனியே வாழ்தல் அங்கு இல்லை. உலகமாக மலர்ந்து வாழும்போது எல்லோரும் உண்டபின் துய்க்கும் இன்பமே பேர் இன்பம். இந்தஉண்மையைக் கடவுள் இடத்தில் எப்படி விளக்குவது? அங்கும் ஒரு காதற்கதை உண்டு. அருள் பொழியும் ஞானமயமாக விளங்குகின்ருன் கடவுள். அவனுடைய இபக்கமே தாய்மையின் இயக்கம். கிரியாசக்தி என்று கூறுவார்கள் தத்துவப் பேரறிஞர்கள். அவனுடைய இருப்பே இந்த இயக்கம். பிரிக்க முடியாத ஓர் ஒற்றுமை அங்கே விளங்குகிறது. அந்த நிலையில் ஒரு ஞான ஒளி, ஓர் அழகு, ஒரு தூய்மை, ஒரு கோட்பாடு. பிரிக்க முடியாத ஒரு ஒற்றுமை — இவை விளங்குகின்றன. ஆண்டவன் அவளை அணைத்து நிற்கின்ருன். அவளோ குற்றமற்ற கற்புடைய, இயல்பான கற்புடைய, ஞானப் பேரொளியே வடிவானவள். அவளுடைய புருவம் ஆட, ஆண்டவன் ஆடுகின்ருன். அவளுடைய கண்ணிற்குக் கண்ணுக நிற்கின்ற கணவன் இவன். இவ்வாறு கடவுள் காட்சி தமிழர் கண்ட காதற் காட்சியாய் வளர்கிறது. இருட்டில் உறங்கியவன், கடல் மீது கதிரவனைக் கண்ட காட்சியின் நுட்பக் குறிப்பாக இவ்வாறு உண்மைக் கடவுள் நிலை வளர்ந்து காட்சி தரக் காண்கிருேம். இயற்கை அழகாகவும், மனித அனுபூவமாகவும், புராணக்கதை ஆகவும் தொடங்குகிற பாட்டே கடவுளின் உண்மை நிலையைக் காட்டுவதோடு, இரண்டாட்டத்தின் இடையே எல்லாம் துன்பமின்றி இன்பமாகவே விளங்குகிற முருகனை விளக்கி விடுகிறது. துன்பத்தினிடையேயும் இன்பம் காட்டுகிறது. இடிஎனத் தோளை இகழ்வோமா? மழை என அதனை வாழ்த்துவோமா? இன்பம் எனத் தாளைப் புகழ்வோமா? மயக்கத்தைத் தகர்த்து எறிவது என அதனைக் கண்டு அஞ்சுவோமா? கருமை என்று கடலை இகழ்வோமா? அதன் அழகை மறப்போமா? இவ்வாறு பலபல நிலைகள், பல பல ஆழ்ந்த கருத்துக்கள், கடலின் அலை போல எழுந்து எழுந்து ஓங்கி நம்மை இறைவன் தாள் என்ற கரையில் கொண்டு செலுத்தக் காண்கிருேம்.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.''

★

"வள்ளலார் திருவுள்ளம்"

டாக்டர் திரு. மு. வரதராசனார், அவர்கள். M.A., M.O.L., Ph.D.,

துணைவேந்தர், மதுரைப்பல்கலைக்கழகம்.

கடவுள் எல்லா உயிர்களுக்கும் பொதுவான தாயும் தந்தையும் ஆனவர்; அருள் வடிவாக விளங்குபவர், உலக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறும் பொருட்டு, ஒழுங்காக விதிகளின்படி யாவும் நடைபெறுமாறு ஆட்சி புரியும் தலைவர்; உயிர்களை எல்லாம் குழந்தைகள் போல் கருதி யாதொரு வேறுபாடும் இல்லாமல் நலம் செய்பவர்; செல்வர் வறியர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகளைப் பொருட்படுத்தாத அருளாளர் அவர். உண்மை அவரே; அறிவு அவரே; அன்பும் இன்பமும் அவரே. இவ்வாறெல்லாம் திரும்பத் திரும்ப உணர்த்தி உலகை உய்விக்க வந்த ஞானியர் திருக் கூட்டத்தைச் சார்ந்தவர் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள்.

இந்தத் தூய கருத்தோடு ஒத்து வராத கடவுட் கருத்தும் உள்ளது. அந்தக் கருத்தின்படி, கடவுள் ஒரு பெரிய உலக ஜமின்தார்; அவர்கட்கு வேண்டியவர்கள் உண்டு. வேண்டாதவர்கள் உண்டு. அவரை அடிக்கடி தற்புகழ்ச்சியாய்ப் போற்றிச் சில தந்திர மந்திரங்களைக் கையாள்கின்றவர்களுக்கு மட்டுமே அவர் வேண்டியவர். அந்த அன்பர்களுக்கு மட்டுமே அவர் உதவிகள் செய்வார்; அவர்களின் வேண்டுகோளுக்கு மட்டுமே செவிசாய்ப்பார்; மற்றவர்களை அந்தக் கடவுள் புறக்கணிப்பர், வேண்டியவர்களுக்கு நன்மை பல செய்து; வேண்டாதவர்களுக்குத் தீமையும் செய்வார்; அதாவது ஆடம்பரப் பூசையும், அருச்சனையும் திருவிழாவும் செய்வோர்க்கு நன்மை செய்து, அவைகள் செய்யாதவர்க்குத் தீமை செய்வார்.

இன்னும் சிலர் கடவுளைத் தங்கள் விருப்பு வெறுப்புக்குத் தக்கபடி ஆடுகின்றவராகவும், பொருள் முதலியவை கொடுத்தால் மனத்தை மாற்றிக்கொள்ளக் கூடியவராகவும், நடுநிலைமை அற்றவராகவும், கற்பனை செய்து தம் தன்னல வாழ்க்கைக்குத் துணை தேடுகின்றனர்; தம்முடைய வம்பு வழக்குகளுக்கும் ஆசைகளுக்கும் துணையாகக் கடவுளை வேண்டிக் கொண்டு, தம் எதிரிகளுக்குத் தீமை செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்கின்றனர். தம் பூசை பிரார்த்தனைகளால் அவ்வாறு கடவுள் செய்ததாகவும் நம்புகின்றனர். ஒழுங்காக நடைபெறும் உலகப் போக்கை அடிக்கடி மாற்றி ஒழுங்கு கெடுத்தாவது அற்புதங்கள் நிகழச் செய்யும் ஒருவராகக் கடவுளை மதிக்கின்றனர். அந்த அற்புதங்களைத் தமக்கு நன்மையாகத் திருப்பிக் கொள்ள முடியும் என்று நம்பி, அந்தத் தன்னலத்தாலேயே கடவுளுக்குப் பூசை திருவிழா முதலியன செய்கின்றனர்.

கடவுள் தன்மையை உணர்ந்து சான்றோர்கள் கடவுளைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் உலக ஜமீன்தாராகவோ செப்படி வித்தைக்காரராகவோ காட்டவில்லை. அருள் வடிவான உலக முதல்வனாகவே கடவுளைக் காட்டுகின்றன. ஆழ்வார், நாயன்மார் பாடிய பாடல்கள் அவ்வாறே அறிவிக்கின்றன, காந்தியடிகள் முதலான சான்றோர்களின் அறிவுரைகளும் அவ்வாறே எடுத்துரைக்கின்றன.

வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளின் அருட்பாக்கள், இந்தத் தூய கருத்தையே வலியுறுத்து கின்றன.

மற்றக் கருத்துக்கள் உண்மை என்னும் அடிப்படை இல்லாமல்; தன்னலத்தோடு கற்பனை செய்து கொள்ளப் பட்டவை ஆகையால், ஒரு காலத்தில் ஏமாற்றத்தைத் தரக் கூடும். அவ்வாறு ஏமாற்றம் ஏற்படும் காலத்தில், அவற்றை நம்பியவர்கள், அந்த நம்பிக்கையே தளர்ந்து நாத்திக எல்லையை நாடவும் கூடும். வள்ளலாரின் அருட்பாக்கள் உணர்த்தும் கடவுட் கருத்து, பொது நலம் நாடுவனவாய்; உண்மையை உணர்ந்து கூறுவன ஆகையால், என்றும் போற்றத் தக்க ஆதிக்கத்தை உணர்த்த வல்லவை ஆகையால், குறிப்பிட்ட காலத்திற்கோ நாட்டிற்கோ என்று குறுகி நிற்காமல், எவரும் என்றும் போற்றத் தக்க மாறுத உண்மையாய் விளங்குபவை.

ஆறுவது திருமுறையில் உள்ள 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்' என்ற சிறு பகுதியே எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

''எனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனியம்பலத் தாடும்
புனித நீ ஆதலால்''

என்று கடவுளைத் தாயும் தந்தையுமாகவே காண்கிறுர் வள்ளலார். வாழ்க்கையின் அடிப்படையே கடவுளின் திருவருளால் அமைந்தது என்றும், வாழ்க்கையின் எல்லா நலமும் கடவுள் அமைத்தவையே என்றும் தெளிந்த தெளிவு உடையவர் அவர். ஆகையால், தமக்கெனச் செயல் ஒன்று இல்லாமல், தமக்கு என விருப்பு இல்லாமல், எல்லாம் அவன் வகுத்த வழியே என்று வாழ விரும்பினுர். உண்ணும் உணவும் கடவுள்தந்ததே என்று, பற்றின்றி உண்பதாகக் கூறியுள்ளார்.

''இன்சுவை உணவு பலபல எனக்கிங்கு
எந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
நின்சுவை உணவென் றுண்கின்றேன் இன்றும்
நீதரு வித்திடின் அது நின்
தன்சுதந் தரமிங் கெனக்கதில் இறையும்
சம்மதம் இல்லைநான் தானே
என்சுதந் தரத்தில் தேடுவே னல்லேன்
தேடிய தும்மிலை யீண்டே''

இளமையிலேயே வள்ளலார் உள்ளம், கடவுளின் அருளாட்சியில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், பணம் தேடல் முதலியவற்றில் சிறிதும் பற்று இல்லாதவரானுர். காசிலே ஆசை செய்திலேன், இந்த நாளில் மட்டும் அல்லாமல் அறிவில்லாத சிறுபருவததிலும் அநீத ஆசை கொண்டதில்லை என்று கூறியுள்ளார்.

'பணத்திலே சிறிதும் ஆசையொன்றிலை நான்
படைத்தவப் பணங்களைப் பல்கால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும்
எறிந்தேன்
கேணியிலே எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் கொடுக்கிறேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டுநின் அருளைக்
கண்டனன் இனிச்சொல்வ தென்னே'

என்ற பாடல் வள்ளலாரின் திருவுளத்தை-பணம் முதலிய பற்றுத் தீண்டாத துறவுள்ளத்தைக் காட்டுகின்றது.

வாழ்க்கைக்கு இன்றியமையாத சில ஆசைகள் உண்டு. உடம்பு நன்ருக இருப்பதற்காகப் பசி வேண்டும். பசிக்கு ஏற்ற உணவு வேண்டும், சதைப்பிடிப்பு வேண்டும், உடம்பு இளைக்காமல் இருக்க வேண்டும், என்றெல்லாம் எல்லோரும் ஆசைப்படுவது இயற்கை. துறவிகளும் தம் துறவுநெறியில் யோகம் முதலியவற்றிற்காக இவ்வாசைகள் கொண்டு உடம்பைக்காப்பாற்றுவது உண்டு. உணவிலே ஆசை இல்லாதவர்களும், பணம் தேடுவதிலே ஆசையில்லாதவர்களும், உடம்பை உரமாகக் காப்பாற்றுவதில் மட்டுமாவது ஆசை உடையவர்களாக இருக்கிருர்கள். ஆனுல் இந்த ஆசை தமக்கு இல்லை என்று வள்ளலார் தெரிவிக்கின்ருர்.

''கிளைத்தவிவ் வுடம்பில் ஆசையெள் ளளவும்
கிளைத்திலேன் பசியற உணவு
திளைத்திடுந் தோறும் வெறுப்பொடும் உண்டேன்
இன்றுமே வெறுப்பினுண் கின்றேன்
தளைத்திடு முடையூண் உடம்பொரு சிறிதும்
தடித்திட நினைக்கிலேன் இன்றும்
இளைத்திட விழைகி றேனிது நான்தான்
இயம்பலென் நீஅறிந் ததுவே'

'முத்தி பெற்றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன்
உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்''

இவ்வாறு எவ்வகை ஆசையும் அற்ற உள்ளத்தோடு வள்ளலார் நடத்திய வாழ்க்கை எதற்காக என்று அறியத்தோன்றும். சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் படிகளில் உயர்ந்து நிற்பதற்காகவா? அதுவும் இல்லை என்கிறார் வள்ளலார். இவ்வாறு ஆசைகளைத் துறப்பதன் வாயிலாக, உயர்ந்த நிலையோ, சிறந்த புகழோ பெறுவதற்காகவா? அதுவும் இல்லையாம். கடைசியாக முத்தி பெறுவதே நோக்கமா? அதுவும் இல்லையாம்.

'முத்தி பெற்றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன்
உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்?

என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

'இறக்கவும் ஆசை இல்லையிப் படிநான்
இருக்கவும் ஆசையின் றினிநான்
பிறக்கவும் ஆசை இலையுல கெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைவிசித் திரங்கள்
செய்யவும் ஆசையொன் றில்லை
துறக்கவும் ஆசையிலை துயர் அடைந்து
தூங்கவும் ஆசையொன் றிலையே'

என்று தம் உளப்பான்மையை அழகிய எளிய பாடலாகப் பாடியுள்ளார்.

இவ்வாறுபதினைந்து இனிய பாடல்களால் தம் துறவுள்ளத்தைத் தனக்கென வாழாத் தூய நோக்கத்தைப் பாடியுள்ள வள்ளலார் அடுத்து எட்டுப் பாடல்களில் தமக்கு உள்ள இச்சை இன்னது என்று'விளக்கியுள்ளார்.

கடவுள் தமக்குத் தாயும் தந்தையுமாக இருப்பதுபோலவே எல்லா உயிருக்கும் அவ்வாறு விளங்கி அருள் செய்கின்றார் என்று தெளிவு பெற்ற காரணத்தால், அதனை என்றும் மறக்காமல், கடவுட் குடும்பத்தில் கடவுளாட்சியில் கலந்து ஒன்றிக் கடவுளின் அருட்புகழே பாடி வாழ வேண்டுமென்று விரும்பியுள்ளார்' கடவுட் குடும்பமாகியஇந்தப் பரந்த உலகில் உள்ள உயிர்களுக்கு வரும் துன்பங்களைத் தீர்க்க ஆசை உண்டு என்றும், அதற்காகவே எப்போதும் பாடுபடத்தம் உள்ளம் விரும்புகிறது என்றும் பாடியுள்ளார்.

'சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்
தனித்தபே ரன்பும்மெய் யறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தோறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத் துயிர்க்கெலாம் இன்பம்
செய்வதென் இச்சையாம் எந்தாய்'

'எவ்வுயிர்த் திரளும் என்உயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
அகற்றியே அச்சம் நீக்கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவா என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறு திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்'

உலகத்து உயிர்கள் எல்லாம் பெரிய அருட் குடும்பமாய் வாழ்தல் வேண்டும் என்று விரும்பிய காரணத்தால், உயிர்கள் வருந்தும் வருத்தத்தைக் காணமுடிய வில்லையே என்று வருந்தி முறையிட்டுள்ளார். அந்த உயிர்களின் துன்பத்தைத் தீர்க்க நல்ல வரம் தந்தருள வேண்டும் என்று வேண்டியுள்ளார். இவ்வாறு திரும்பத் திரும்ப வேண்டிய பிறகு,

''உரியநற் றந்தை வள்ளலே அடியேன்
உரைக்கின்றேன் கேட்டருள் இதுவே''
''ஞானநா டகஞ்செய் தந்தையே அடியேன்
நவில்கின்றேன் கேட்டருள் இதுவே''
''என்னையீன் றெடுத்த தந்தையே அடியேன்
இசைக்கின்றேன் கேட்கவிம் மொழியே'
என்று மூன்று பாடல்களை முடித்துள்ளார்'

முப்பது பாடல்கள் உள்ள இந்தப் 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்' ஒன்றே உலக சமயச் சான்றோர்களுள் இராமலிங்க வள்ளலார் ஒருவர் என்ற சிறப்பை விளக்க வல்லதாகும், அருட்பா முழுவதும் இத்தகைய தூயதிருவுள்ளம் விளங்குகிறது. எளிய இனிய தமிழில் சமயப் பேருண்மைகளை எடுத்துரைத்துக், கடவுளின் பெருந்தன்மையையும் உயிர்களின் வாழ்க்கைக் கடமையையும் அறிவுறுத்தியுள்ளார் வள்ளலார்.

அவர் தம் அன்புநெறி வெல்க;
அருளாட்சி வெல்க. ★

'செந்தமிழ்த் தெய்வம் திருமுருகன்'

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

உலகின் நடுஇடத்தில் ஓங்குமலைப் பாங்கர்
இலகுமக்கள் தோன்றினர் என்பர்;— நிலையதுவேல்
செந்தமிழ்த் தெய்வம் திருமுருகன் தான், பண்டே
மூந்துபெருந் தெய்வம் மொழி. (1)

நீல நிறக்கடல் நின்றிளஞ் செஞ்ஞாயி(று)
ஏலமிகப் பேரழகா ஈண்டுதித்தல், — கோலமிகும்
தெய்வ இளமுருகன் செவ்வேட் குரிசில்என
மெய்யுணர்ந்தார் சான்றோர் வியந்து. (2)

இளமைமணம் தேன்அழகு தெய்வநலன் என்னும்
வளமைமிகு பொருள்கள் வாய்ந்தே — ஒளிமிகும்நற்
சீரார் முருகன்எனும் செந்தமிழ்ச் சொற்சிறப்பிங்(கு)
ஆராப் பெருவிருந்தாம் ஆய்வு. (3)

'அழகுப் பொருள்ஆரா இன்பளிக்கும் ' என்றே
பழகு கவிஞர் பகர்வர்;— அழகன் எனும்
பெம்மான் முருகன் பெருமையினை ஆய்ந்தறிந்து
அம்மா! நாம் கூறல் அரிது. (4)

'முருகொத்தி முன்னியது முற்றலின்நீ' என்று
பெருகச் சிறந்தெடுத்துப் பேசும் — ஒருகுறிப்புச்
சங்கப் புறம் சாற்றும்; தக்கஅறிவு இச்சைதொழில்
நன்கவன் தன் ஆற்றல்அத னால். (5)

'தெறலருஞ் சீர்க்கடவுள்' என்றுசெப்பிச் சங்க
நிறைபெருஞ் சான்றோர் நிகழ்த்தும் — இறையவனும்
இன்ப எழில் முருகன், யாவருக்கும் இன்னருளே
நன்றுமிகச் செய்வன் நயந்து. (6)

தமிழ்க்கடவுள்; செய்ய தமிழ்வடிவன்; மேலாம்
தமிழ்க்குரவன்; நல்லதமிழ்ச் சான்றோன்;- தமிழ்ப்புலவன்;
செந்தமிழில் வைதாலும் தீங்கொழித்துக் காத்தருள்வோன்;
நந்தம் முருகன்என்றே நாடு. (7)

களவுநெறி கற்புநெறி என்றிரண்டு காதல்
உளநெறியும் மக்கட் குணர்த்த,— வளம்அமையும்
வள்ளிதெய்வ யானை மணம்புணர்ந்தான்; இச்சை, தொழில்
கொள்சத்தி என்றும்அவர்க் கூறு. (8)

ஐம்புல வேடரிடை ஆழ்ந்துழலும் ஆருயிரை
எம்பெருமான் ஆட்கொண் டினிதருளும் — செம்பொருளே
வள்ளித் திருமணம்ஆம் மாண்பார் வரலாறென்(று)
உள்ளியுணர்ந் துய்க உவந்து. (9)

அடியார்க் கெளியனும் தன்மை அதனைப்
படியார்க் குணர்த்தும் படிக்கே, — கொடிஆர்க்கும்
மெல்லிடை நல் வள்ளியின்பால் மிக்க வினோதமெலாம்
பல்வகையிற் செய்தான் பரன்! (10)

கங்கை யமுனை கடலிற் கலந்தாற்போல்,
மங்கைதெய்வ யானையொடு வள்ளியம்மை, — நங்கள்
இறையாம் முருகன் இருபுறத்தும் சார்ந்து
முறையே விளங்குகிற்பர் முன். (11)

நங்கள் முருகனுக்கு நாதமும் விந்துவுமே
இங்கினிய நல்ல எழிற்கொடியாய்த் — துங்கமிகும்
தூயபெரும் ஊர்தியாய்த் தோன்றி விளங்குதலை
நேயமிகப் போற்றுகிற்போம் நேர்ந்து. (12)

ஓங்கியுயர்ந் தாழ்ந்தகன்று நுண்ணியதாய் உற்றொளிரும்
பாங்குமிகு சீர்வேற் படையதுதான், — ஈங்கே
அறிவினியல் தேற்றிஅருள் ஞானசக்தி யாகச்
செறிவுற் றிலங்கும் சிறந்து. (13)

சூரபன்மன் ஆணவம்; சிங்கமுகன் தொல்மாயை;
தாரகன் கன்மமலம் தான்என்க! — போரினில் வெல்
நம்முருகன் தான்நல்ல ஞானகுரு! மற்றவன்வேல்
செம்மையுறு ஞானம்எனத் தேர். (14)

தக்கார் அலாதாரைச் சாகவைக்கும் சிஃறெய்வம்;
எக்காலும் அஃதுஞற்றான் எம்முருகன்;- மிக்கோனாய்த்
தன்னை எதிர்த்துநின்ற சூரனையும் தான், முருகன்
நன்னர்க்காத் தேற்றான் நயந்து. (15)

தீயனவே செய்வாரும் செவ்வேள் திருமுனுற்றால்
தூயவர் ஆகிச் சுகம்பெறுவர்;— நேயமிகச்
சூரபன்மன் தானும்அன்றோ? தோகைமயி லாய்முருகன்
பேரருள்பெற் றுய்ந்தான் பெரிது. (16)

சூரபன்மன் என்றபெருந் தொல்லைப் பகைவனையும்
போரிற் கொலைதான் புரியாமல் — சீரின்மிகு
நற்கொடியும் ஊர்தியுமா நன்றேற்று வாழ்வித்தான்
எற்றே முருகன் இயல்பு. (17)

சத்துச்சித் தானந்தம் தான்என்றே இந்துமதத்
தத்துவ நூல்களெலாம் சாற்றியிடும் — முத்தன்மை
தம்முள், சிவம்சத்து; சத்திசித்து; ஆனந்தம்
நம்முருகன் என்றே நவில். (18)

உண்மையொடு நன்மை உயர்அழகு என்பவற்றை
வண்மைஒளிர் பண்புகளா வாழ்த்துகிற்பர்! — ஒண்மை
தரும்சிவம் உண்மை; சத்தி நன்மை; அழகு
திருமுருகன் என்றே தெளி. (19)

கருணை மிகு ‘ வேளைக் காரன்’ என்றே சான்றோர்
அருணகிரி யார்போற்றும் ஆற்றல், — தெருள்நயந்த
நல்லோர்கள் தம்மை நயந்து நனிகாக்க
வல்லோன் முருகன்என்றே வாழ்த்து. (20)

ஒளியோ டருளும் உயர்ந்ததவ மாண்பும்
தெளிவார் பெருமந் திரமும் — எளிமையொடு
வீறு மிகுநல் விரவியல்பும், நம்முருகன்
ஆறுபடை வீட்டின் அமைப்பு. (21)

அருட்குரவன்; யோகி; ஆன்றபெரு வீரன்;
தெருட்பெருகு தேவர்கள்தம் தேவன்;— இருட்டெறாஉம்
செம்மைத் தவநிலையோர் தெய்வம்; கலைஞர்இறை;
மெய்ம்மை முருகன் மிக. (22)

விரும்பும் நலங்களெல்லாம் மிக்களித்துக் காக்கும்
பெருந்தகைமை வாய்ந்தொளிரும் பெம்மான், — அரும்பெறல்நம்
செய்ய தமிழ்முருகன், ஆதலின்சீர்க் கற்பகமாய்
மெய்யவனைச் சொல்வர் வியந்து. (23)

‘கலியுகத்தும் நல்வரதன் கந்தன்’ என்றே சான்றோர்
மலிசிறப்பிற் போற்றி வாழ்த்தும் — நலமிகுந்த
தெய்வத் தலைவன், திருமுருகன் தாள்இறைஞ்சி,
வையத்து வாழ்வோம் மகிழ்ந்து. (24)

முருகா என ஓதும் மூதக்கார் எல்லாம்
அருகாத செல்வம் அடைவார்;— ஒருகாலும்
துன்பமுறார்; நோய்அணுகார்; சுற்றமொடு சூழ்ந்துயர்ந்த
இன்பமெலாம் துய்த்துவப்பர் ஈண்டு. (25)

600 008
8703

புரசவாக்கம் திரு. கங்காதரேசுவரர் கோயிலில், கல்யாண மண்டபம், சிறப்பு அங்காடிக் கால் கோள்விழா, நிகழ்ந்தபொழுது, அறநிலைய அமைச்சர் அவர்களும், நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், கோயில் மரியாதைகளுடன் வரவேற்கப்பெறுதல். (11-9-72)

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகளின் ஆதீனத்துக்குச் சொந்தமான, கும்பகோணம் வட்டம்-திருப்புறம்பயம்-கிராமம் திரு. சாட்சிநாதசுவாமி கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்ட சிவ லிங்கத்தை, யாவரும் பூசை செய்யப் பரம்பரை அறங்காவலர் ஆகிய ஆதீனகர்த்தர் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமசாரிய சுவாமிகள் அவர்கள். இசைந்து அநுமதி அளித்ததின் பேரில், 24-9-72 ஞாயிறன்று அரிசனத் தம்பதிகள் அபிஷேகம் செய்து [illegible] செய்யும் காட்சி.

Vol. 15. No. 2 THIRUKOIL Regd. No. M. 7029



சென்னை புரசவாக்கம் திரு. கங்காதரேசுவரர் கோயிலில், கல்யாணமண்டபம், சிறப்பு அங்காடிக் கால்கோள்விழா, நிகழ்ந்த பொழுது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பா அவர்கள், மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், M. A. அவர்கள், முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தல். (11-9-72)

புரசவாக்கம் திரு கங்காதரேசுவரர் கோயிலில், கல்யாணமண்டபம், சிறப்பு அங்காடிக் கால்கோள் விழா, நிகழ்ந்த பொழுது. நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், M.A. அவர்கள் உரை நிகழ்த்துதல். (11-9.72)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments